469

SOUTHERN LANGUAGES BOOK TRUST

ரூ. 1-75

# கல்லும் சொல்லாதோ கவி



தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் :: திருநெல்வேலி

N9,9(Q);4
N60
106319

# கல்லும் சொல்லாதோ கவி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

*Tamil*
*First Edition: 5000 Copies*
*March 1960*

# KALLUM SOLLATHO KAVI

By

T. M. BASHKAR TONDIMAN M. A., I.A.S. (Retd.)

PRICE Rs. 1—75

Published under the auspices of
The Southern languages Book Trust, Madras
Tamil 83.

S. R. SUBRAMANIA PILLAI
PUBLISHERS TIRUNELVELI.

# அணிந்துரை

டாக்டர் ஏ. எல். முதலியார்,
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பல திறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந் தெடுக்கப் பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறைகொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப் பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்து கொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வது

நலமாகும். நடனநாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிவு. பொது முறைக் கல்விக்குரிய பொருள்களைக்கொண்ட இத்தகைய வெளியீடுகள் மேன்மேலும் பெருகும் பெருந் தொகையினராகிய வாசகர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க்கும் அம்சம், பாராட்டுந் தகுதியுடையதாகும். இவ்வரிசை முற்றுப்பெற்றதும், எழுதப்படிக்கமட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து, இவ்வாற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்கதிறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிவு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப்பெற்றதோ அந்நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும்பணியால் மேன்மேலும் நிறைவேறிவரும் என்று நான் நம்புகிறேன்.

சென்னை,

ஏ. எல். முதலியார்,
துணைவேந்தர்.

# முன்னுரை

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் தமிழில் கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறேன். அப்படி எழுதிய கட்டுரைகள் ஆனந்த விகடன், கல்கி, கலைமகள், அமுதசுரபி, தினமணி முதலிய பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன. கல்லில் உருவான சிற்பக்கலையைப் பற்றிய சில கட்டுரைகளே இந்நூலில் தொகுக்கப்பட்டிருக் கின்றன. முதல் முதல் நான் கலைக் கட்டுரை எழுதியது 1939-ல். அதனைப் படித்துப் பாராட்டி உற்சாகம் ஊட்டியவர் எங்கள் வட்டத் தொட்டித் தலைவர் அமரர் ரஸிகமணி டி. கே. சி. அவர்கள். கட்டுரையை ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளியிட்டு ஊக்கம் அளித்தவர் அமரர் 'கல்கி'. இவர்கள் தந்த ஊக்கமே மேலும் மேலும் கலைக் கட்டுரைகள் எழுத எனக்குத் துணை நின்றது. கட்டுரைகளைத் தொடுத்து வெளியிட அனுமதி தந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கு என் நன்றி.

தமிழ் நாட்டின் சிற்பக்கலை மிக மிக உயர்ந்தது. ஏனைய கலைகளில் மற்றைய நாடுகள் தமிழ் நாட்டைவிடச் சிறப் புடையனவாக இருக்கலாம். ஆனால் சிற்பக்கலையில் எல்லா நாடுகளுக்கும் முன்னணியில் தமிழ் நாடுதான் நிற்கிறது. இந்த உண்மையைக் கலையைப் பற்றி எழுதும் பிறநாட்டு அன்பர்கள் உணர்வதில்லை. உணர்ந்தாலும் சொல்லு வதில்லை. இந்திய நாட்டின் சிற்பக் கலையை விளக்கும் நூல்கள் எழுதுபவர்கள் கூட அஜந்தா எல்லோராவுக்குத் தெற்கே வருவதில்லை. அப்படியே ஏதாவது குறித்தாலும், காஞ்சி, மாமல்லபுரம், தஞ்சை முதலிய இடங்களைத் தவிர வேறு இடங்களைக் குறிப்பிடுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டிலே, மூலை முடுக்குகளில் எல்லாம், அங்குள்ள கோயில்களில் எல்லாம் இக்கலை எப்படி உருவாகி

இருக்கிறது என்பதை முதலில் தமிழ் அன்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தான் இக்கட்டுரைகள் எழுத முயன்றேன். கட்டுரைகள் சென்ற இருபது வருஷ காலத்தில், ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆக எழுதப் பட்டவை. ஆனதால் ஒன்றுக் கொன்று தொடர்பு இருத்தல் இயலாது. அந்தத் தொடர்பை எல்லாம் விளக்கி, ஒழுங்கான சரித்திர ரீதியிலே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதத் திட்டமிட்டிருக்கிறேன். அதற்கு முன்னேடியாகவே இக் கட்டுரைத் தொகுதி வெளிவருகிறது. தமிழ் அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்கள் என்றும் தக்க ஆதரவு தரத் தயங்கமாட்டார்கள் என்றும் நம்புகின்றேன்.

இக்கட்டுரைத் தொகுதிக்கு நல்லதொரு முகவுரை அருளிய சகோதரர் திரு A. C. பால் நாடார் அவர்கள் நல்ல கலை அன்பர். அவர்களது பாராட்டிற்கு என் நன்றி. கலைபற்றிய முதல் கட்டுரைத் தொகுதியை வெளியிட ஆர்வம் காட்டிய தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டாருக்கும், பதிப்பகத்தாருக்கும் என் வணக்கம்.

சிறந்த சித்ரீகரும், சித்திர ஆசிரியருமாக இருந்து எனக்கு கலைகளில் ஆர்வம் பிறக்கச் செய்த என் தந்தை அமரர் தொண்டைமான் முத்தையா அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.

'சித்ரகூடம்'
திருநெல்வேலி. 6

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

## ச ம ர் ப் ப ண ம்

---

என் தந்தை
தொண்டைமான் முத்தையா
அவர்களுக்கு

# முகவுரை

இந்த நூல் ஓர் ஒப்பற்ற கலைநூல். புதிய முறையில் எழுதப்பட்ட சிற்பக் கலை விளக்கம். கற்றவரும் கல்லாத வரும் சிற்பத்தின் அருமை தெரிந்து அனுபவிக்கத் துணை செய்வது. கண்கள் இருந்தும் காண இயலாதவருக்கு காணும் திறனை அளிப்பது. கண்டாலும், தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் இருப்பவர்களுக்கும் தெளிவு தரும் ஆற்றல் வாய்ந்தது. தமிழ் நாட்டில் சைவ வைஷ்ணவக் கோயில்கள் தோறும் மலிந்து கிடக்கும் சிற்பங்களைக் கண்டு களிக்க வழிகாட்டும் அருமையான நூல் இது.

ஆக்கியோன், உயர்திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டை மான். தஞ்சையில் உதவி கலெக்டராக இருந்தபொழுது ஆங்காங்கே தேடுவாரற்றுக் கிடந்த சிற்பங்கள் பலவற்றை ஒன்றுகத் திரட்டி முற்காலத்தில் தஞ்சைப் பேரரசர்கள் கொலு வீற்றிருந்த மண்டபத்தில் ஒரு கலைக்கூடம் நிறுவி இருக்கிருர். அதை மக்கள் எல்லோரும் பார்வையிட வேண்டும். அதன் பொருளைத் தெரிந்துகொள்ள வேண் டும்; அதன் அழகை அனுபவிக்க வேண்டும். கலை ஆர்வம்கொண்ட தொண்டைமான் பொறுப்பு வாய்ந்த கலெக்டர் உத்தியோகத்திலிருந்து ஓய்வெடுத்துக்கொண்ட போதிலும், ஓயாமல் கட்டுரைகள் எழுதித் தம் நேரத்தை யும் திறனையும் நல்ல முறையிலே செலவிடுவது போற்றத் தக்கது.

எனக்கு ஒரு நண்பர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இரட்டைப் பட்டம் பெற்ற வழக்கறிஞர். சட்ட நூல்களை ஓயாது புரட்டிப் புரட்டிக் கற்கிறவர். அதோடு சிவ வழி பாட்டிலும் ஈடுபட்டவர். பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அவர் ஒரு சிவன் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து வந்ததாக என்னிடம் சொன்னர். அதைக் கேட்ட தும், அந்தக் கோவில் வெளிப் பிரகாரத்திலிருக்கும் சில கற்சிலைகளின் அழகைப் புகழ்ந்து பேசினேன். அதற்கு

அவர் "நான் எத்தனையோ தடவை அக்கோவிலுக்குப் போயிருக்கிறேன். ஆனாலும் நீங்கள் சொல்லுகிற சிற்பங் கள் என் கண்ணில் படவில்லை" என்றார். நான் அவரை வியப்போடு நோக்கினேன். உடனே, "சுவாமி தரிசனம் செய்யப் போகிறவன், கல்லையும் கில்லையும், கலையையும் சிலையையுமா பார்ப்பான்?" என்று ஒரே போடாக போட்டுவிட்டார்! இந்த நூல், அந்த நண்பர் போன்றவர் களின் எண்ணத்தைத் திருத்தித் தெளிவு படுத்தி, கடவுள் பக்திக்கும் கலைக்குமுள்ள தொடர்பை விளக்கிக் காட்டும், என்று நம்புகிறேன். 'கலை பக்தியை வளர்க் கும் பண்ணை' என்பதுதான் இந்நூலின் முடிந்த முடிபு.

கல் பேசுவதையும், கதை சொல்லுவதையும், பாட்டுப் பாடுவதையும், காவியம் அமைப்பதையும், கற்பனையை உருவாக்குவதையும், பெண்மையின் அழகையும் பெருமை யையும் எடுத்துக் காட்டுவதையும், புராணங்களின் உட் பொருளை மௌனமாக உரைப்பதையும் இந்நூலைப் படிக்கக் கேட்ட கல்லாதவரும் கண்டு கொள்வர். காரணம், மக்களின் உள்ளத்தில் பதியத்தக்க எளிமையும், இனிமையு முடைய சொற்களைக் கொண்டு, வேகமும் தெளிவுமுள்ள நல்ல நடையில் எழுதப்பட்டிருக்கின்றது.

கிரீஸ் நாட்டிலுள்ள ஆதன்ஸ் பட்டணமும், இத்தாலிய தேசத்திலுள்ள பிளாரன்ஸ் நகரும் சிற்ப வரலாற்றில் பிர சித்தி பெற்றவை. இவ்விரண்டு நகரங்களிலும், பணக் காரன் ஏழை, பெருமக்கள் குடியானவன், கற்றவன் கல்லாதவன் என்ற வேற்றுமையின்றி மக்கள் எல்லோ ரும் கலையுணர்வு பெற்று மேம்பாடு அடைந்திருந் தார்கள் என அறிகிறோம். நம் காவிரிப்பூம் பட்டினத்தி லும் ஓரளவு இத்தகைய கலையுணர்வு இருந்திருக்கலாம் எனச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து அனுமானிக் கிறோம். அதைக் காட்டிலும் மாமல்லபுரச் சிற்பங்களையும், பல கோவில்களிலுள்ள பக்திச் சிற்பங்களையும் உலகியல் சிற்பங்களின் தன்மைகளையும் கவனிக்கும்போது, தமிழ் நாட்டிலும் கலை உணர்வு உச்ச நிலை அடைந்திருந்தது

என்றே சொல்ல வேண்டும். ஆனால் நமக்கு வரலாறு இல்லாதது பெருங் குறைபாடு. ஆதன்ஸ் பட்டணத்துப் பிடியஸ், பிளாரன்ஸ் நகரத்து மைக்கல் ஆஞ்சலோ போன்ற சிற்பிகள் தமிழ் நாட்டில் வாழ்ந்து மாமல்ல புரத்தில் 'பகீரதன் தவத்தையும்' திருச்சிராப் பள்ளியில் மலைக் குகைக் கோயிற் 'கங்காதரனையும்' சிருஷ்டித்துக் காட்டி யிருக்கிறார்கள். அவற்றைப் பார்ப்பவர்களுக்கு அக்கலைஞர் களின் பெயர் என்ன? ஊர் யாது? அவர்களது வாழ்க்கை எத்தகையது? என்று கேட்கத் தோன்றும். நம் நாட்டு வரலாற்றில் அந்தக் கேள்விகளுக்குப் பதில் இல்லை. எவ் வளவு பெரிய குறை! பதில் கிடைக்குமானால் அஃது தமிழ்நாடு செய்த தவப்பயனேயாகும். ஏனென்றால் மேல் நாட்டவர் 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பிடிய ஸையும், 500 வருஷங்களுக்கு முன் இருந்த மைக்கல் ஆஞ்சலோவையும் வரலாற்று முறையில் கற்றுப் போற்றிப் பயன் பெறுகிறார்கள். நம் தமிழ் நாட்டுச் சிற்பிகளின் வரலாற்றைப் படிக்கும் பேறு நமக்கும் கிடைக்குமானால், நாமும் அத்தகைய பேற்றினை அடைவோம்.

'சௌந்திர விலாஸ்'
தூத்துக்குடி

**A. C. பால் நாடார்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கல்லும் சொல்லாதோ கவி ... | 1 |
| 2. | கல்லுருவிலே கபாலி ... | 9 |
| 3. | கல்லால் இழைத்த காவியம் ... | 16 |
| 4. | கண் கண்ட தெய்வம் கல்லிலே ... | 25 |
| 5. | கல்லில் உருவான கற்பனை ... | 32 |
| 6. | நாணமும் பெண்மையும் கல்லிலே ... | 41 |
| 7. | கங்கை பிறந்தனள் கல்லிலே ... | 51 |
| 8. | கனல் பிறந்தது கல்லிலே ... | 58 |
| 9. | கல்லிலே கலிங்கம் ... | 63 |
| 10. | கல்லில் பிறக்கிருள் கார்த்தியாயனி ... | 71 |
| 11. | கல்லிலே வடித்த கட்டழகு ... | 81 |
| 12. | காதலும் புலவியும் கல்லிலே ... | 91 |
| 13. | கல்லில் தீட்டிய சித்திரம் ... | 101 |
| 14. | கால் மாறி ஆடிய கற்பகம் கல்லிலே ... | 110 |
| 15. | கல்லிலே ஒரு வெற்றிச் சின்னம் ... | 120 |
| 16. | கல்லிலே ஒரு கலைக் கோயில் ... | 127 |



கல் யானைக்குக் கரும்பருத்தல்

# 1

# கல்லும் சொல்லாதோ கவி

மலைப்பளிங்கர் என்று ஒரு வகுப்பார் உண்டு. மலைகளிலே வசிப்பவர்கள் இவர்கள். காயும் கனியும், கிழங்கும் வேருமே இவர்களது ஆகாரம். மரப்பட்டை களும், தழைகளுமே இவர்கள் ஆடைகள். எழுதவோ, படிக்கவோ இவர்களுக்குத் தெரியாது. பேசுகிற பாஷையும் எல்லாம் 'சைக்கினை' பாஷையாகவே இருக்கும். பட்டண நாகரிகம் இன்னதென்று இவர்கள் அறிந்ததில்லை. நகரங்கள், ஏன் ? கிராமங்களை அடுத்துக் கூட இவர்கள் வந்ததில்லை. ஏனைய உலக மக்களோடு அளவளாவ இவர்களுக்குச் சந்தர்ப்பமும் கிடைக்கிற தில்லை. இப்படி வாழ்ந்து வரும் மலைப்பளிங்கர் என்னும் வகுப்பினர் இன்னும் பொதிகை மலையில் பாண தீர்த்தத் திற்கும் அப்பாற்பட்ட பிரதேசத்தில் வசித்து வரு கிறார்கள் என்று அறிகிறோம்.

இவர்களிடையே நாகரிகத்தைப் பரப்பவும், இவர் களை மலைப்பளிங்கர் நிலையிலிருந்து உயர்த்தவும் முனைந்து புறப்பட்டார் ஒருவர் பல வருஷங்களுக்கு

முன்பு. உடன் புறப்பட்டாள் அவருடைய மனைவியும். இருவருமாகச் சென்று இவர்களிடையே குடியேறினார்கள். மலைப்பளிங்கர்கள் முதலில் இவர்களை முறைத்து முறைத்துப் பார்த்தார்கள். பின்னால் கொஞ்சம் நெருங்கி வந்தார்கள். இவர்களும் அவர்களோடு அளவளாவி, அவர்களை மனிதர்களாக்க முயன்றனர். மலைப்பளிங்கரில் ஒருவன் புதிதாய்க் குடிவந்தவரோடு நெருங்கிய நண்பனாய் வாழ்ந்து வந்தான். எங்குச் சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள் இருவரும்.

ஒரு நாள் இருவரும் காட்டினுள் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். அங்கு பட்டமரம் ஒன்றைக் கண்டார் இவர். அதை வெட்டி வீட்டிற்குக் கொண்டு வந்தால் நல்ல விறகாகுமே என்று நினைத்தார். கையிலோ கோடரி இல்லை. வீடோ வெகு தூரத்தில் இருந்தது. வீட்டிலே போய்ப் பளிங்கன் கோடரி வாங்கி வருவான் என்று கருத்வோ இடமில்லை. ஆதலால் அந்த இடத்தில் கிடந்த ஒரு கல்லையும், கரித்துண்டையும் எடுத்து, கரித்துண்டால் கல்லில் 'வருகிற பளிங்கன் வசம் கோடரியைக் கொடுத்தனுப்பு' என்று எழுதி அதைப் பளிங்கன் மூலம் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். மனைவியும் அவ்விதமே கோடரியைக் கொடுத்தனுப்பினாள்.

இதைப் பார்த்தான் பளிங்கன். அவனுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. காட்டிலிருந்த புருஷனுக்கு கோடரி வேண்டுமென்பது வீட்டிலிருந்த மனைவிக்கு எப்படித் தெரிந்தது? ஆம், நாம் கொண்டு வந்து கொடுத்த கல்தான் பேசி இருக்க வேண்டும். அடடா இவன் எப்பேர்ப்பட்ட மனிதன்! கல்லைப் பேசுவிக்கும் கைக்காரனாயிருக்கிறானே என்றெல்லாம் எண்ணினான். விஷயத்தை எப்படியோ மற்றப் பளிங்கர்களிடமும் தெரிவித்து விட்டான். எல்லோரும் இந்த

மனிதனைத் தெய்வமாகவே மதித்தனர். அவர் கருதி வந்த வேலையும் எளிதில் கை கூடுவதாயிற்று.

இப்படித்தான் கல்லானது மனிதனோடு முதன் முதலில் பேசிற்று என்று அறிகிறோம். இது கல்லின் கதையிலே ஒரு நிலை.

பண்டைத் தமிழ் நாட்டில் நடந்த போர்களுக்கும் குறைவில்லை. போர் வீரர்களுக்கும் குறைவில்லை. போரிலே வெற்றிபெற்ற அரசர்கள் தங்கள் தங்களுடைய வெற்றியைக் கல்லிலேதான் பொறித்து வைத்திருக்கிறார்கள். போரிலே காயம் பட்டு போர்க் களத்திலேயே மாண்டு மடிந்தவர்களுக்கு கல்நட்டு வழிபடுகின்ற வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்திருக்கின்றது. 'கல் நின்றான்' என்று சொன்னாலே போரிலே மடிந்து வீரசுவர்க்கம் எய்தினான் என்றுதான் பொருள். தமிழ் நாட்டிலே கல் நின்றவர்கள் கதைகளோ எண்ணிறந்தவை.

இன்றும் வெற்றிச் சின்னங்களாக, கல் வெட்டுகளும், கல்தூண்களும், கல்சிலைகளும் தமிழ் நாடெங்கும் காணப்படுகின்றன. கங்கை கொண்ட சோழன் மகனாகிய விஜய ராஜேந்திர சோழன் மேலைச் சாளுக்கியரது நகரமாகிய கல்யாணபுரத்தை ஜயித்து அங்குள்ள துவார பாலகர் சிலை ஒன்றைத் தன் ராஜதானித் தலை நகருக்குக் கொண்டுவந்தான் என்று தாராசுரம் கோயிலில் உள்ள ஒரு கல் வெட்டுக் கூறுகிறது. அந்தச் சிலையின் பீடத்தில், 'கல்யாணபுரம் எறிந்து உடையார் விஜய ராஜேந்திர சோழதேவர் கொண்டு வந்த துவார பாலகர்' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. சிலையோ பேரழகு வாய்ந்தது. கம்பீரமான தோற்றமுடையது. கைகளிலே திரி சூலமும் நாக சர்ப்பமும் காட்சியளிக்கின்றன. நீண்டுயர்ந்த மகுடம் தலையை அலங்கரிக்

கிறது. கண்களிலே உள்ள வீரத்திருவிழிப் பார்வையும், உதடுகளில் தவழும் புன்னகையும் அதை உயிரோவிய மாக்குகின்றன. இந்தச் சிலை தற்போது தாராசுரம் கோயிலிலிருந்து தஞ்சைக் கலைக் கூடத்திற்குக் கொண்டு வரப் பெற்று அங்குள்ள பொருட்காட்சி சாலை யில் வைக்கப்பட்டிருக்கிறது. அன்றைய சோழப் பேரரசுச் சரித்திரத்தின் ஒரு அழியாத சின்னம் அது.

ஆகவே, கல் பேசுவதோடு மட்டும் நின்று விடவில்லை. கல் கதையும் சொல்கிறது. ஏன் சரித் திரத்தையே உருவாக்கவும் செய்கின்றதல்லவா ?

கல் பேசியதைக் கேட்டோம். கல் கதை சொல்வதை அறிந்தோம். இன்னும் கல் சங்கீதம் பாடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா ?

மதுரை மீனுக்ஷி கோயிலின் வெளிப் பிரகாரத்தைச் சுற்றி வரும்போது வடக்குக் கோபுர வாயிலின் கீழ்ப் பக்கம் பாருங்கள். ஒரு தூண் மொட்டையாக நிற்பதைக் காண்பீர்கள். அது ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. அதில் உள்ள சிறு தூண்களைக் கோல் கொண்டு தட்டினுல் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஸ்வரம் எழுவதைக் கேட்கலாம். என்னவோ பீங்கான் கோப்பையில் தண்ணீரைக் குறைவாகவும், நிறை வாகவும் ஊற்றி ஜலதரங்கம் வாசிக்கிருர்களே, அந்த ஜலதரங்கம் இந்தக் கல் தரங்கத்துக்கு எம்மட்டு என்றுதான் தோன்றும்.

சங்கீத ஸ்தம்பம் மதுரையில் மட்டுமல்ல, திருநெல் வேலி ஸ்ரீ நெல்லையப்பர் சந்நிதி உள் பிரகாரத்திலும் பார்க்கலாம். சிறு தூண்களில் வேறு வேறு விதமான ஸ்வரம் உண்டாவதற்குச் சிற்பி இங்குக் கையாண்டிருக் கும் முறையே அவன் கலையுணர்ச்சியைக் காட்டுகிறது. தூண்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறு அணில் ஏறிப்

பாய்வதுபோல் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே தூணில் இருக்கும் அணிலை, அடுத்த தூணில் உள்ள அணில் எட்டிப் பிடிக்க முயல்வது போல் இருக்கும். அணில் மரங்களில் தத்தித் தத்தித் திரியும் காட்சியைக் கல்லிலே பார்க்கலாம். அதே சமயத்தில் தூண்களில் நின்று எழும் ஸ்வர பேதங்களோ சரியான கலைஞன் கையில் உயர்ந்த சங்கீதத்தைப் பொழிந்துவிடும். எப்படி இருக்கிறது, கல்லைக் கனிவிக்கும் கலைஞனின் வித்தை ?

அற்புதங்களுக்கு நம் நாட்டில் குறைவில்லை. பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையம்பதியிலே பல நூற்றுண்டுகளுக்கு முன் நடந்த அற்புதங்கள் எத்தனை எத்தனையோ !

அபிஷேக பாண்டியன் மதுரையை ஆண்டு வந்த காலத்தே சிவபிரான் எல்லாம் வல்ல சித்தராக உருமாறி மதுரை நகர் வீதிகளிலே அங்குமிங்கும் உலாவினுர். அவர் காட்டிய மாயா ஜால வித்தைகளோ, தற்போது சினிமாவில் காட்டப்படும் ஜால வித்தைகளையெல்லாம் தோற்கடிக்கக் கூடியவையாயிருந்தன. தூரத்திலிருக்கும் மலையைச் சமீபத்தில் வரப் பண்ணினுர் ; கம்பத்தில் உள்ளதைத் தூரப் போகச் சொன்னுர் ; கிழவனைக் குமரன் ஆக்கினுர் குமரனைக் கிழவன் ஆக்கினுர் ; ஆணைப் பெண்ணுக்கினுர் பெண்ணை ஆணுக்கினுர் இன்னும் என்ன என்னவோ செய்தார்.

இவருடைய சித்து விளையாட்டுக்களைக் கேட்டு அறிந்த அபிஷேக பாண்டியன் அவரை நேரிலே காணப் புறப்பட்டு வந்தான். கோயிலின் வடமேற்கு மூலையில் இருந்த சித்தரை வந்து கண்டான். அப்போது ஒரு உழவன், கமுகு என்று நினைக்கத் தக்க வண்ணம் செழித்து வளர்ந்திருந்த கரும்பொன்றைக் கையில் கொண்டு வந்தான். கோயில் தூணிலோ கல்யானை

ஒன்று அழகாகச் செதுக்கப்பட்டிருந்தது. சித்தரைப் பரீட்சை பார்க்க எண்ணிய பாண்டியன் உழவன் கையிலிருந்த கரும்பை வாங்கிச் சித்தரைப் பார்த்து 'இந்தக் கல்யானை இந்தக் கரும்பைத் தின்னுமா?' என்று ஏளனமாகக் கேட்டான்.

அவ்வளவுதான், சித்தர் கல்யானையைக் கடைக் கண்ணால் பார்த்தார். உடனே கல்யானை உயிர் பெற்று எழுந்து மன்னன் கையிலிருந்த கரும்பைத் துதிக்கையால் பிடித்திழுத்துச் சுவைக்க ஆரம்பித்து விட்டது! அதோடு விட்டதா யானை, மன்னவன் மார்பில் கிடந்த மணியாரத்தையும் எட்டிப் பறிக்கத் துணிந்து விட்டது. மன்னன் சித்தர் அடிமிசை வீழ்ந்து வணங்கித் துதித்தான். இது ஹாலாஸ்ய மகாத்மியத்தில் ஒரு கதை.

இந்தக் கல்யானை தின்னக் கரும்பீந்த கதையைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் அழகாக எடுத்துரைக்கிறார். 'கல்யானை கன்னற் கறிக்கின்றது காண்டி' என்று எல்லாம் வல்ல ஆனந்தச் சித்தர் மன்னனை நோக்கிக் கூறிய உடனே,

.................................
...........கல் யானை
மடைக் கண் திறந்து
மதம் மூன்றும் வழிய, விண்வாயு
அடைக்கும்படி வாய் திறந்து
ஆர்த்து, புழைக்கை நீட்டி
தொடைக் குன்று அன்னான்
கைச்சுவைத் தண்டைப் பறித்த

காட்சியைக் கவிஞர் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. கவியில் கூறினர் முனிவர். ஆனல் கற்றவரும், கல்லாதவரும் கண்டு களிக்கும் வண்ணம் இதைக் கல்லில் செதுக்கினன் ஒரு சிற்பி.

இந்தக் காட்சியைக் காண விரும்பினல் நேரே மதுரைப் புதுமண்டபத்திற்குப் போங்கள். கடைகள் எல்லாம் இருக்கும் வெளிப்பிரகாரத்தை விட்டு விட்டு, இரும்புக் கம்பி போட்டுப் பாதுகாப்புச் செய்திருக்கும் உள் கட்டிலேயே நுழையுங்கள். மேற்கு ஓரத்திலே கருங் கல்லிலே கட்டப்பட்டிருக்கும் வசந்த மண்டபத்தை ஒரு சுற்றுச் சுற்றுங்கள். வசந்த மண்டபத்துக்கும் மேற்கே உள்ள இரண்டு தூண்களில் தெற்குத் தூணைப் பாருங்கள். கல்யானை கரும்பு அருந்துவதைக் காண்பீர்கள்.

மதுரைக்குப் போக முடியாதவர்கள் வெளியிட்டிருக் கும் படத்திலாவது அக்காட்சியைக் கண்டு மகிழுங்கள். சிலையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பாண்டியனைப் பார்க்கலாம். சாந்த ஸ்வரூபியாய் உலகத்தையே ஆட்டி வைக்கும் சித்தரைப் பார்க்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாகக் கல்யானை உயிர் பெற்றெழுந்து மன்னன் கையிலுள்ள கரும்பைப் பிடித்திழுத்து முறித்துச் சுவைப் பதை நம் கண்ணுலேயே பார்க்கலாம். பரஞ்சோதி முனிவருடைய பாட்டுக்கு விளக்கம் அல்லவா பெறு கிரும், இந்தக் கல்யானை கரும்பருந்தும் காட்சியிலே. ஆம், கல் கவிதைதான் சொல்கிறது, பண்டிதர்களும் பாமரர்களும் எளிதில் தெரிந்துக் கொள்ளும்படி.


> கல்லின் கதைகள் எல்லாம்—இரு
> காது குளிரக் கேட்பேன்
> புல்லின் பேச்சை அறிவேன்—அதைப்
> புராணமாக விரிப்பேன்.

என்று பாடினர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஆம்,

இன்று தமிழ் நாட்டில் நாம் காணும் கல் நம்மோடு பேசுகிறது. கதை சொல்கிறது. சரித்திரம் எழுதுகிறது. ஏன் சங்கீதம் கூடப் பாடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கல்லைக் கனிவித்துக் கவிதையையே உருவாக்குகிறது. கல்லின் கதையை கவிமணியுடன் நாமும் இரு காது குளிரக் கேட்கிறோம்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி

என்று கவிச் சக்ரவர்த்தி கம்பர் சும்மாவா பாடினர் ?



கபாலி-கும்பகோணம்

## 2

# கல்லுருவிலே கபாலி

ஒரு ஊரிலே ஒரு தந்தை. நல்ல செல்வந்தர். அவருக்கு நாலைந்து ஆண்மக்கள். எல்லோரையும் வளர்த்து வாலிபம் ஆக்கினார்; படிக்கவைத்தார்; ஏகச் செலவில் அவர்களுக்கு கல்யாணங்களும் நடத்திவைத்தார். கடைசியாக தான் பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த நில புலங்களையும், பொன்னையும் பொருளையும் மக்களுக்கு எல்லாம் பகிர்ந்தளித்து அவர்களையெல்லாம் வீடும் குடியுமாக இருத்தினார். காலச்சக்கரம் சுழன்றது. இத்தனை செய்த தகப்பனாரை இந்த மக்கள் மறக்கத் துவங்கினர். செல்வச் செருக்கால் அவரைக் கவனிக்காது ஒதுக்கத் தலைப்பட்டனர். அவர் செய்த நன்மைகளை எல்லாம் அடியோடே மறந்தனர். தந்தை மனம் நொந்தார். மக்களை விட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டார், தன் கையிலிருந்த சொற்பப் பொருளுடன் காசி யாத்திரைக்கே. போகிற வழி யென்னவோ வடக்கு நோக்கித்தான். ஆனால் அவர் உள்ளம் எல்லாம் தெற்கே அவரது மக்களிடம்தான் நின்று விடுகிறது. ஐயோ, எவ்வளவோ அருமையாக வளர்த்த என் மக்கள் என்ன கஷ்டப்படுவார்களோ? அவர்கள்

தவருன வழிகளில் செல்லாதிருக்க வேண்டுமே, சேர்த்துக் கொடுத்த செல்வம் சீரழியாதிருக்க வேண்டுமே, என்பது தான் அவருடைய தாபம் எல்லாம். பெற்றமனம் பித்தல்லவா ?

காசிக்கே சென்று விட்டார். கொஞ்சகாலம் அங்கேயே தங்கிவிட்டார். நாளாக ஆக, அவர் மனம் அவர் மக்களிடமே பாய்ந்தது மறுபடியும். இப்போது ஒரு புதிய வேதனே. ஆமாம், நம்மை உதாசீனம் செய்தது காரணமாக நமது மக்களுக்கு ஏதாவது பழி பாவம் எல்லாம் வந்து சேருமோ ? செய்யுங் கடமையில் தவறினுல் தெய்வ தண்டனே வேறு ஏற்படுமோ ? அப்படி ஏற்படாதிருக்க அந்த மக்களே அந்தப் பழியும் பாவமும் சாராதிருக்க, அவர்களுக்கு அந்தத் தெய்வ தண்டனேயெல்லாம் நேராதிருக்க நான் ஏதாவது செய்ய முடியுமா, என்றெல்லாம் எண்ணத் துவங்கினுர். இந்த எண்ணம் மேலோங்க மேலோங்க அதற்குரிய வழிகளேயும் தேடத்துவங்கினுர். அடேயப்பா, தன்னே உதாசீனம் செய்த தன் குழந்தைகளிடத்தில் தான் இந்தத் தகப்பனுக்கு என்ன கருணே, என்ன வாத்ஸல்யம் !

கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தார். தன்னே இன்னுர் என்று தெரிவிக்காமலே தன் மக்களிடத்திற்குச் செல்வது. அதுவும் பிச்சைக்கார வேஷம் போட்டுக் கொண்டேபோவது. தன் மக்களிடத்திலேயே பிச்சை ஏற்று நிற்பது. அப்படி அந்த ஏழைப் பிச்சைக் காரனுக்கு—அவன் தன் தகப்பன்தான் என்று அறியா மலேயே—அவர்கள் பிச்சை போடும் காரணத்தால் அவர்கள் கடமை நிறைவேற்றப்படுவது. அதனுல் அவர்களேப் பழிபாவம் சாராதிருப்பது. தெய்வ தண்டனேயிலிருந்து இப்படியாவது அவர்களேத் தப்ப வைத்துவிடுவது என்பதுதான் அவர் தீர்மானம்.

தீர்மானத்தை நடைமுறையிலேயே நிறைவேற்றி வைக்கப் புறப்பட்டுவிட்டார், பிச்சைப் பாத்திரத்துடன். பிச்சையையும் ஏற்ருர் வெகு அமைதியாக. அது காரண மாக ஒரு சாந்தியையுமே பெற்று விட்டார். அகங்காரி களான மக்களும் பிச்சைக்கு வந்தவர் தங்கள் தகப்பன் தான் என்றும், அவருடைய உள்ளக் கிடக்கை தங்களைக் கரையேற்றுவதுதான் என்றும், தெரிந்தவுடன், ஓடிச் சென்று தந்தையின் பாதங்களில் பணிந்து வணங்கினர், காலைக்கட்டிக்கொண்டு கதறியழுதனர். வந்த மக்களை வாரியெடுத்து, மார்புறத் தழுவிக்கொண்டார் தந்தையும். பிரிந்தவர் கூடினுல் பேசல் வேண்டுமோ?

இத்தனையும் உண்மையாய் நடந்ததல்ல. ஆனுல் இப்படியும் ஒரு தந்தை இருப்பாரா என்ற சந்தேகம் மட்டும் வேண்டாம். சமீப காலத்தில், தான் பாகம் செய்து கொடுத்த பணம் நிலம் எல்லாவற்றையும் சூதிலும், வாதிலும், குடியிலும் கூத்திலும் செலவழித்து நின்ற மகனின் சொத்து அத்தனையையும், ஒரு தந்தை தன் பொருளைக்கொடுத்து பிறர் ஒருவரைக் கொண்டு விலைக்கு வாங்கி, தன் பராமரிப்பில் சிலகாலம் வைத்தி ருந்து மகன் திருந்திய உடன் யாதொரு கைமாறும் கருதாமல் கொடுத்த கதை நாமெல்லோரும் அறிந்தது தானே. இப்படி ஒரு தந்தை உண்டென்ருல், நான் முன் சொன்னபடி அருள் கனிந்த அன்பு நிறைந்த ஒரு தந்தை இருந்திருப்பார் என்பதில் சந்தேகம் இருக்க வேண்டாம் அல்லவா ?

இப்படிப்பட்ட தந்தைதான் இறைவன். உயிர் களாகிய தன் மக்கள் தன்னைப் பெற்ற தலைவனை மறந்து தருக்கித் திரிந்தாலும், அவரைவிட்டு அகன்று அகன்று சென்ருலும், அவர்களை விட்டு என்றும் அகலாமல் என்றும் அவர்களுக்கு இதமே செய்பவரல்லவா அவர் ? தருக்கித்திரிந்த மக்களின் செருக்கடக்கவும், அவர்களைப்

பழிபாவம் சாராதிருக்கவுமே இறைவன் பிக்ஷாடனர் உருவத்தில் கையில் கபாலத்தை ஏந்தி அந்த மக்க ளிடமே பிச்சை யேற்கப் புறப்பட்டுவிடுகிருர். இப்படித் தான் இறைவன் ஆம்-மக்கள் எல்லாம் சென்று தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளை நினைந்து எவனிடம் பிச்சையேற்று நிற்பார்களோ, அவனே பிச்சைக்காரனுக வெளிப்புறப்படுகிருன். மக்கள் தந்தையிடம் பிச்சை கேட்டுப்பெறுவது இயற்கை. ஆனுல் அந்தத் தந்தையே எல்லா உலகிற்கும் தாயும் தந்தையுமாக நிற்கும் அந்த இறைவனே அந்த மக்களிடம் அவர்களது அன்பையும் ஆணவத்தையும் பிச்சை கேட்கப் புறப்படுகிருன் என்ருல் என்ன அதீதமான கற்பனை! இறைவனையே பிக்ஷாடனராக, கபாலியாக கற்பனை செய்து நோக்கும் கலைக் கண்ணையல்லவா பெற்றிருந்திருக்கிருர்கள் நமது ஞானிகள். அவர்களுக்கு, அவர்தம் கற்பனைத் திறனுக்கு நாம் தலைவணங்கவே வேண்டும்.

*

தாருகா வனத்து முனிவர்கள் சிவ வழிபாட்டைக் கைவிட்டு, வேள்வியே பொருளெனக்கொண்டு இறுமாந்திருந்தனர். அவர் மனைவியரும் கற்பொழுக்கத் திலே தமக்கு நிகரானவர் யாரும் இலர் என்று வேறே செருக்குற்றிருந்தனர். இவர்களின் செருக்கடக்கவும், இவர்களைக் கரையேற்றவுமே சிவபெருமான் பிச்சைப் பெருமானுக இவர்கள் முன் தோன்றி பிக்ஷை ஏற்ருர், என்பது புராணக் கதை. கபாலம் ஏந்தி பிக்ஷைக்குப் புறப்படும் அந்தக் கபாலியைத்தான், அந்தப் பிக்ஷாட னர் உருவைத்தான்,

வேதம் அசைக்கும் கோவணமும்
மெய்யில் நீறும், உள்ளாளக்
கீதம் இசைக்கும் கனிவாயும்
உள்ளே நகையும், கிண்கிணிசூழ்

பாதமலரும், பாதுகையும்
பலிகொள் கலனும்கொண்டு, இரதி
மாதர்கணவன் தவவேடம்
எடுத்தார் ஒத்து வரும்

என்று பரஞ்சோதி முனிவர் கண்குளிரக் காண்கிறார்; காதுகுளிரப் பாடுகிறார். இதே காட்சியை நீங்களும் காண விரும்பினால் பிக்ஷாண்டார் கோயிலுக்குப் போய்க் கர்ப்பக்கிருஹத்தில் ஒரே இருட்டில் புதைந்து கிடக்கும் மூல விக்கிரகத்தைத் தேடவேண்டாம். நேரே கும்பகோணம் சென்று, இந்திரனும் சூரியனும் வழிபட்ட அந்த நாகேஸ்வரஸ்வாமியை வலம்வந்து அவர் கோவிலின் வடக்குப் பிரகாரத்திற்குச் சென்று தெற்குச் சுவரைப் பாருங்கள். அங்கே ஒரு மாடத்தில் காட்சி கொடுப்பார் கபாலி. ஆம் நல்ல கருங்கல் உருவிலேதான். உருவில் சில பாகம் சிதைந்து போய்விட்டதுதான். மெய்யில் பொடிக்குப் பதிலாக வெள்ளைச் சுண்ணாம்பையே தீட்டியிருக்கிறார்கள், இன்றைய கோவில் நிர்வாகிகள். எத்தனைதான் அந்தச் சிலை சிதிலமாயிருந்தாலும் அந்தக் 'கீதம் இசைக்கும் கனிவாயும் உள்ளே நகையும்' உருப்பெற்று விடுகிறது இந்தக் கல்லுருவிலே. அதையே பார்த்துக்கொண்டிருக்கலாம் பலமணிநேரம். பலிகொள் கபாலம் ஏந்தி, அந்த இறைவன், மன்மதனே தவக்கோலம் பூண்டு நிற்பது போல் நிற்கிறான், அங்கே. சோழ சாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்த காலத்தில் உருவாகியிருக்கவேண்டும் இந்தச் சிலை. சோழ மன்னர்களது புகழ் இமயம் வரை எட்டி நின்றதுபோல இந்த இறைவன் திருஉருவமும் கம்பீரமாக வளர்ந்து நிற்கிறது. அழகிய கிரீடம் வேறே அணிசெய்கிறது. தவக் கோலத்திலும், ஒரு கவர்ச்சி நிறைந்த கோலமாயிருக்கிறது. இந்த உருவினைக் கண்டு தாருகாவனத்து

ரிஷிபத்தினிகள் தன்வசம் இழந்தனர் என்றால் அது சந்தேகப்படத்தக்கதில்லைதான். இப்படி ஒரு சிற்ப வடிவம்.

எல்லாம் வல்ல இறைவன் எப்படி எப்படி எல்லாமோ உருவெடுக்கிறான். கவிஞர்கள் உள்ளத்தில், கலைஞர்கள் உள்ளத்தில். சிவபெருமான்தான் எந்த எந்த மூர்த்தங்களில் எல்லாம் நமக்குக் காட்சிகொடுக்கிறான். அண்டங்களை எல்லாம் ஆட்டி வைக்கும் அந்த அண்ணல் ஆடிக்கொண்டே இருக்கிறார் என்று காட்டத்தானே நடராஜன் ஆகிறார். குருவாயிருந்து உபதேசிக்கிறார் என்றால் தக்ஷிணாமூர்த்தியாகிறார். ஆணும் பெண்ணும் ஒன்றியிருந்த நிலையிலேதான் உலகம் உருவாகிறது என்று காட்ட அர்த்தநாரியாவார். இன்னும் நீலகண்டன், சந்திரசேகரன், கங்காதரன் என்று சொல்லும் பல பல உருவங்களிலேயே நமக்குக் காட்சி கொடுப்பார். ஆனால் ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் என்றபடி எல்லாம் அந்த இறைவன் திருமூர்த்தங்களே. ஒரே உருவிலேயே இத்தனை அனுபவத்தையும் பெற்று விடுவார்கள் அப்பர் போன்ற அருமையான பக்தர்கள். பெற்ற அனுபவத்தையும் நம்முடனேயே பகிர்ந்தனுபவிக்கவும் தயாராகிவிடுவார்கள். ஆம் எல்லாம் நல்ல தேவாரத்தில்தான்.

மயலாக்கும் தன்னடியார்க்கு
அருளும் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல்
இளமதியும் தோன்றும் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை
ஏற்றல் தோன்றும்
இருங்கடல் நஞ்சுண்டு
இருண்ட கண்டம் தோன்றும்

கயல்பாய கடுங்கல் உழி
கங்கைநங்கை
ஆயிரமாம் முகத்திஞேடு
வானில் தோன்றும்
புயல்பாய சடைவிரித்த
பொற்புத்தோன்றும்
பொழில் திகழும்
பூவனத்து எம் புலிதஞர்க்கே


என்று அப்பர் பாடிஞல், நமக்கும் 'தோன்றும்; தோன்றும்' என்றுதானே சொல்லத் தோன்றும்.

# 3

# கல்லால் இழைத்த காவியம்

காவியத்தின் இலக்கணம் என்ன? இந்தக் கேள்விக்கு விடை சொல்வது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. மேல்நாட்டு விமர்சகர்களே இந்தக் கேள்விக்கு விடைசொல்ல முடியாமல் திக்கித்திணறுகிருர்கள். ஒரு விமர்சகர் மட்டும் கொஞ்சம் துணிச்சலுடனேயே சொல்கிருர். 'ஹோமரது இலியதைப்போல எழுதப்பட்டவை எல்லாம் காவியம்', என்று. நாமும் இந்த விமர்சகருடன் சேர்ந்து காவியத்தின் இலக்கணத்தைச் சொல்லிவிடலாம் லேசாக, 'கம்பனது ராமாயணம் போல் எழுதப்பட்டவை எல்லாம் காவியம்' என்று. இப்படி இலக்கணம் கூறிவிட்டால் விஷயம் விளங்கிவிடுகிறதா என்ன?

அரிஸ்டாட்டல் காலம் முதற்கொண்டே காவிய இலக்கணத்தைக்கூற முயன்றிருக்கிருர்கள் புலவர்கள். ஒராசியன், புவாலோ, வதாபெயின் முதலிய பண்டைப் புலவர் எல்லாம் விரிவான ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். லாபலெஸ் ஆபெர் கிராம்பி, வெர்னன் நோல்ஸ்,



தஞ்சைப் பெரியகோயில்

போன்ற இக்காலத்தியப் புலவர்களும் இவர்களுக்குச் சளைக்கவில்லை. இவர்கள் சொல்வதில் இருந்து நாம் தெரிந்துகொள்ளும் விஷயங்கள் இவ்வளவுதான். காவியத்தின் முக்கிய அம்சம் கதை. அது காதல், சோகம், வீரம் முதலிய விஷயங்களை அடிப்படையாகக்கொண்டு அற்புதக் கற்பனைக் கதையாக இருக்கலாம், இல்லை வீரர்கள் சரித்திரமாக இருக்கலாம், தேவாசுர யுத்தமாகக்கூட இருக்கலாம். எப்படி இருந்தாலும், விஷயம் எக்காலத்திலும், யாவராலும் படித்து அனுபவிக்கக் கூடியதாய் இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியம். சாதாரணமாக கதைக்கும் காவியத்திற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. கதை வசன ரூபமாக இருக்கும்; காவியத்திலே கவிதை விரியும். கதை தரையிலே காலூன்றி நடந்து செல்லும்; காவியம் விண்ணுக்கும் மண்ணுக்கும் அப்பாலும் பறந்து செல்லும். கதையின் பாஷை குளறும்; காவியம் அற்புதமான பாஷை பேசும்; பாடும்; நடம் ஆடும். எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் பல மணிகளைக் கோத்தமைத்த ஒரு அழகிய நவரத்தன மாலையாகவே விளங்கும் காவியம். அது ஒரு பெரிய கதா சரித்சாகரமாகவே இருக்கும் என்றெல்லாம் இவர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்ட காவியத்தின் கட்டுக்கோப்பு, நிர்மாணம் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் சிந்தித்திருக்கிறார்கள் அறிஞர்கள். 'ஒரு பெருங் காவியம் அநேக அவயவங்கள் சேர்ந்ததாயிருப்பினும், ஒரு ஜீவப்பிராணியைப்போல் ஒரு தனிப் பிண்டமாய் இருத்தல் வேண்டும். தலை, இடை, கடை என்று பாகுபாடும், அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது ஏகம் என்கிற உணர்ச்சியும் அக்காவியத்தில் தோன்ற வேண்டும். ஒவ்வோர் அவயவமும் தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும் பின்னேயுள்ள அவயவத்

தோடும் பிணைக்கப்பெற்று ஒன்று என்ற உணர்ச்சியை வளர்க்கவேண்டும்' என்று பல இலக்கியங்களையும் கற்றறிந்த புலவர் வ. வெ. சு. அய்யர் கூறுகிறார். இந்த வியாக்கியானத்தை உரை கல்லாகக் கொண்டு நமது பழைய பஞ்ச காவியங்களை நோக்கினால், ஏது ஒன்றுகூட இவர் கூறும் கட்டுக்கோப்புடன் அமைந்த காவியம் ஆகாது போலிருக்கிறதே என்றுதான் தோன்றும். முழுசாகக் கிடைக்காத வளையா பதியையும், குண்டல கேசியையும் விட்டுவிடலாம். ஜீவக சிந்தாமணி யிலும், மணிமேகலையிலும் ஏதோ கதை இருக்கலாம், கருத்து இருக்கலாம். ஆனால் கட்டுக்கோப்பு, காவிய நிர்மாணம் இல்லவே இல்லை என்றும் சொல்லிவிடலாம். சிலப்பதிகாரம் மட்டும் ஒரு வேளை இந்தக் கட்டுக் கோப்பு இலக்கணத்துக்கு இலக்கியமான காவியம் என்று கூறலாம். 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்னும் அடிப்படையிலே எழுந்த அந்தக் காவியம் முழுவதும் பேசப்படுவது பத்தினிக் கடவுளின் பெரும்புகழே. 'கற்புக்கடம் பூண்ட அந்தப் பொற்புடைத் தெய்வ'த்தைச் சுற்றிச்சுற்றியே காவியம் வட்டமிடு கிறது. இல்லாவிட்டால் கண்ணகி கதையைக் கூறு வதற்கு வஞ்சிக்காண்டம் என்ற பகுதி எதற்கு? பத்தினிக்கடவுளைப் பரவுகின்ற பண்பையே பிரதான சம்பவமாகக்கொண்டு காவியம் நிர்மாணம் செய்யப் பட்டிருக்கிறது என்று அறிகிறபோதுதான், ஐந்தில் ஒன்ருவது மிஞ்சிற்றே பழந்தமிழ்க் காவியத் தொகுதி யில் என்று சந்தோஷம் அடைகிறோம் நாம்.

கம்பனுடைய ராமாயணத்திலோ, இந்தக் காவிய நிர்மாண வேலை மிகவும் அற்புதமாக நடந்திருக்கிறது. கதையிலே ஒரு ஜானகி வரலாம், அவள் பேரழகு வாய்ந்தவளாக இருக்கலாம், அவள் சிறந்த கற்புடை நங்கையாக வாழலாம், அவளிடத்தில் தகாத

காதலை அந்த ராவணன் கொள்ளலாம், அதற்காக அவன் தங்கை சூர்ப்பனகை மூக்கை இழக்கலாம். எல்லாம் எதற்கு என்று கேட்டால், தேவர்கள் செய்த தவத்தால் உதித்த ராமன் செய்ய இருக்கின்ற ராவண வதத்தை முடிப்பதற்காகத்தானே ? ராமனை நடுநாயக மாகக் கொண்டு, காவியத்தில் வருகின்ற பாத்திரங்கள் எல்லாம் சுழலுகிறார்கள். அயோத்தியில் சக்கரவர்த்தி மக்களாகப் பிறந்த நால்வர் குகனோடும் ஐந்து பேர் ஆகிறார்கள். குன்று சூழ்வான் மகனாகிய சுக்ரீவனோடு ஆறுபேர் ஆகிறார்கள். ஏன் அந்த அரக்கர்கோன் தம்பி விபீஷணனுடன் ஏழுபேர் ஆகிவிடுகிறார்கள். எல்லோரும் சேர்ந்து 'We are seven' என்று காவியத்திலே கட்டியங் கூறுகிறார்கள். ராமன் பிரதான பாத்திரம்; ராவண வதம் பிரதான சம்பவம்; மற்றைய பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் எல்லாம் இவற்றை உருவாக்குவதிலேதான் முனைந்து நிற்கின்றன என்பதை காவியத்தை ஊன்றிப் படித்துணர்ந்தவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். அதனால்தான் எளிதாகக் 'கம்பனது ராமாயணத்தைப் போல் எழுதப்பட்டவை எல்லாம் காவியம்' என்று காவியத்திற்கே எளிதாக இலக்கணம் கூற முடிகிறது நம்மால்.

இதுவரை சொல்லால் ஆகிய காவியம் ஒன்றைப் பார்த்தோம். இனிக் கல்லால் ஆகிய காவியம் ஒன்றையும் பார்க்கலாம். தமிழ் நாட்டில் கோவில்கள் எண்ணிறந்தவை. தவறி விழுந்த இடத்தில் எல்லாம் கோவில்கள்தான், கோபுரங்கள்தான். மலைகளைக் குடைந்தும் வெட்டிச் செதுக்கியும் கோயில்களை உருவாக்கினார்கள் பல்லவர்கள். பெரிய பெரிய கற்களையே பெயர்த்தெடுத்து முழுக்க முழுக்க கல்லாலேயே கோயில் கட்டினார்கள் சோழர்கள். சிற்றுளி வேலையின் நயமெல்லாம் தெரிய தூண்களை

வெட்டினார்கள், மண்டபங்களைக் கட்டினார்கள், கோபுரத்தை எழுப்பினார்கள் நாயக்க மன்னர்கள். இப்படிக் கலை வளர்த்திருக்கிறார்கள் தமிழர்களும் தமிழ் நாட்டு அரசர்கள் ஆம். சிறந்த சிற்பிகளின் துணை யைக் கொண்டுதான். ஆனால் இந்தக் கோயில்கள் பலவற்றிற்குச் சென்றால், ஏகம் என்கின்ற உணர்ச்சி நமக்கு எழுவதில்லை. நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்கள் நிமிர்ந்து நிற்கும். நூற்றுக்கால் மண்டபம் ஓரிடத்திலும், ஆயிரக்கால் மண்டபம் ஓரிடத்திலு மாக வேறுபட்டு நிற்கும். கோயில் பிரகாரத்திலோ பல பரிவார தேவதைகள். அவற்றிற்கெல்லாம் சிறு சிறு கோயில்கள். எல்லாம் ஒன்றை ஒன்று வக்கரித்துக் கொண்டே இருக்கும். இத்தனையையும் கடந்து, பிரகாரங்களையெல்லாம் சுற்றிக் கர்ப்பக் கிரஹத்திற்குள் போய்ச் சேருவதற் குள்ளேயே நமது ஏகாக்கிர சிந்தையெல்லாம் எப்படி எப்படி எல்லாமோ அலைபுரண்டுபோகும்.

இப்படிப்பட்ட எண்ணிறந்த கோயில்கள் (ஆம், காவிய நிர்மாண இலக்கணத்திற்குக் கட்டுப்படாத கோயில்கள்தான்) நிறைந்த நாட்டிலே ஒரே ஒரு கோயில்மட்டும் காவிய நிர்மாண இலக்கணத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுந்து நிற்கிறதென்றால் அதைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே. அப்படிப்பட்ட கோயில்தான் தஞ்சைப் பெரிய கோயில். ஆம், பொன்னியின் செல்வன் அந்த ராஜராஜன் கட்டினானே அந்த அற்புதமான பெருஉடையார் கோயில்தான். எந்தத் திசையி லிருந்தும் தஞ்சையை நோக்கி ரயிலிலோ, மோட்டாரிலோ, வண்டியிலோ வருகின்ற அத்தனை பேருக்கும் அந்தக் கோயில் விமானம் ஐந்து ஆறு மைல்களுக்கு அப்பால் வரும்போதே தெரியும்.

ஊருக்குள் நுழைந்த பின்னும், பழைய ரயில்வே ரோட்டிலிருந்தாலும், இல்லை நியூ டவுனிலிருந்தாலும் சரி, கீழவீதியிலிருந்தாலும் அல்ல மேலவீதியிலிருந் தாலும் சரி, ஸ்ரீனிவாசபுரத்திலிருந்தாலும் அல்லது ராஜப்பாநகரில் இருந்தாலும் சரி, ஏன் பக்கத்திலுள்ள சிவகங்கைத் தோட்டத்திலிருந்தாலும், இல்லை எட்ட இருக்கும் அந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் குள்ளேயே இருந்தாலும் சரி, நம் கண்முன் தோன்றுவது, அந்த வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் பெருஉடையார் கோயில் விமானம்தான்.

இனி கோயிலின் முதற்கோபுர வாயில் கேரளாந்தகன் திருவாசலில் இருந்து பார்த்தாலும், இல்லை அதற்கடுத்த ராஜராஜன் திருவாசலில் இருந்து நோக்கினாலும், இன்னும் கோயில் வெளிப் பிரகாரத்திலே எந்தக் கோணத்திலிருந்து கண்டாலும் உங்கள் கவனத்தை எல்லாம் கவர்வது அந்தக் கோயில் விமானம்தான்.

ஏதோ இந்திய மக்களின் கவுரவத்தையே கம்பீரத்துடன் எடுத்துக் காட்டுவது இமயமலை என்னும் வடமேரு. அதேபோல, தமிழ் தமிழர்கள் தமிழ்க் கலை முதலியவற்றின் கவுரவத்தையே கம்பீரமாக எடுத்துக் காட்டுவதுதான் இந்த தக்ஷிணமேரு. ஆம், அதுதானே ராஜராஜன் அந்த விமானத்திற்கு இட்ட பெயர்.

இந்த விமானத்தைப் பல கோணங்களிலிருந்து படம் எடுக்கலாம், பார்க்கலாம், அனுபவிக்கலாம். இந்தப் பெரிய கோயிலின் நடுநாயகமாக இருப்பது அந்தத் தக்ஷிணமேரு என்ற விமானந்தான் என்றும், அதுவேதான் கோவில் முழுவதுமே ஏகம் என்ற உணர்ச்சியை உருவாக்குகின்றது என்றும், கோயிலின் பல பகுதிகள், மண்டபங்கள் எல்லாம் கோயிலின்

தனித் தனி அவயவம் என்றே தோன்றினாலும், எல்லா அவயவங்களும் நீண்டு உயர்ந்து நிற்கும் விமானம் என்னும் பிரதான அவயவத்தோடேயே பிணைக்கப்பட்டு நிற்கின்றன என்றும் காண்கிறோம். இப்போது விளங்கும் இந்தக் கோயிலின் காவிய அமைப்பு. ஆம் கல்லால் இழைத்த காவியம் என்று இதைச் சொல்வதைவிட வேறு என்ன சொல்லித்தான் இக்கோயிலைப் பாராட்டிவிட முடியும்.

இனி இந்த தக்ஷிணமேரு என்னும் விமானத்தைப் பற்றியும் கோயிலைப்பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்தானே. விமானம் சதுர வடிவமானது, பதின்மூன்று கோபுர மாடிகள் கொண்டது. எல்லாம் கல்லால் ஆகியது. 216 அடி உயரமுடைய இந்த விமானத்தின் உச்சியில் 25 அடி சதுரமும் 80 டன் நிறையும் உள்ள பிரமரந்திரத் தளக்கல். அதன்மேல் 3083 பலம் நிறையுடையதும், 2926 கழஞ்சு எடையுள்ள பொன்தகடு போர்த்திய செப்புக்கலசம் அழகு செய்கின்றது. பிரமரந்திரத் தளக்கல்லின் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டிரண்டு நந்திகள். அவை ஒவ்வொன்றும் தனித்தனியே 6 அடி நீளமும் 5 அடி அகலமும் உள்ளவை. இவைகளை யெல்லாம் நன்றாகக் காண சும்மா கையை வீசிக்கொண்டு போனால் முடியாது, கையில் ஒரு பைனாகுலரோடுதான் போகவேண்டும். இத்தனையும் இவ்வளவு உயரத்தில் எப்படி ஏற்றினான் ராஜராஜன் என்பதே இன்றைய இஞ்சினீயர்களுக்கு விளங்காத ஒரு புதிர். தஞ்சைக்குக் கிழக்கே நான்கு மைலுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்திலிருந்தே சாரம் போட்டு ஏற்றினான் என்பர். அந்தக் கிராமத்தின் பெயரே சாரப்பள்ளம் ஆகி விட்டது அன்றிலிருந்து என்றும் கூறுவர். கோயில் விமானத்தில்தான் எத்தனை சிற்ப உருவங்கள்,

பிள்ளையார், மார்க்கண்டேயர், பிக்ஷாடனர், நடராஜர், லிங்கோத்பவர், அர்த்தநாரி, கங்காதரர், கலியாண சுந்தரர், இன்னும் எண்ணற்ற உருவங்கள் விமானம் முழுவதும். ராஜராஜனது விசாலமான இதயம், பௌத்த உருவச் சிலைகளுக்கும், ஐரோப்பியன் ஒருவனுடைய தலைக்குமே அங்கே இடம் கொடுத் திருக்கிறது.

இந்த விமானத்திற்கு அடியிலே அமைந்த கர்ப்பக்கிரஹத்திலே கோயில் கொண்டிருப்பவர்தான் பெருஉடையார். ஆம் பெரிய லிங்க சொரூபத்திலே அமைந்த திருஉரு உடையவர். 'உலகெலாம் தொழவந்த எழுகதிர்ப் பரிதி ஒன்று நூருயிரம் கோடி அலகெலாம் பொதிந்த திருஉடம்பு' அவருடையது. 54 அடி சுற்றளவும், 6 அடி உயரமும் உள்ள ஆவுடையாரும் 23 அடி உயரம் உள்ள பாணமும் உடைய அந்த அருள்த் திருமேனியிலே ஒரு காம்பீர்யத்தையே பார்க்கலாம்.

இந்த உருவத்தை அமைக்க வேண்டிய கல்லை நர்மதை ஆற்றங் கரையிலிருந்தே கொண்டுவந்தான் ராஜராஜன் என்பர். இந்த பெருஉடையார் கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றியுள்ள உள் பிரகாரச் சுவர்களிலே அருமையான சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தியும் செல்லும் கைலாய யாத்திரை, திரிபுரதகனம் முதலிய அற்புதமான காட்சியெல்லாம் அங்கே உருவாகி யிருக்கின்றன. இவற்றையெல்லாம் காண்பதற்கு கலைக்கண்ணும் வேண்டும், புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா அதிகாரிகளின் அனுமதியும் வேண்டும்.

இந்த அற்புதமான கலைக்கோயிலை ராஜராஜன் கி. பி. 1003-ல் ஆரம்பித்து 1009-ல் முடித்தான்

என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவனுக்குப்பின் வந்த நாயக்க மன்னர்கள் நந்தி மண்டபம், ஆறுமுகப் பெருமான் கோயில் முதலிய பலப்பல பகுதிகளைப் பின்னால் உருவாக்கி இருக்கிறார்கள். ராஜராஜனது காம்பீர்யத்தின் முன்னே இந்த நாயக்க மன்னர்கள் கட்டிய பகுதிகள் எல்லாம் பொலிவிழந்து விடுகின்றன. ஏன், இவைகள் மூலமாகவே ராஜ ராஜனது காம்பீர்யம் இன்னும் உயர்ந்து கொண்டே போகிறது என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது. அவகாசமுடையவர்கள் எல்லாம் இந்தப் பெரிய கோயிலுக்குப் போங்கள். ராஜராஜன் கல்லால் இழைத்த காவியத்தைக் காணுங்கள்.

அந்த அற்புத காவியத்தை ஆக்கிக்கொடுத்த பெருமகனை நினைக்கும்போதெல்லாம், பெருஉடையாரது திருஉருவத்தின்முன் வணங்காத தலைகூட வணங்கும் கூம்பாத கையுமே கூம்பும்.



ஞானசரஸ்வதி-கங்கைகொண்ட சோழபுரம்

# 4

# கண்கண்ட தெய்வம் கல்லிலே

மனிதனுக்கு வாழ்க்கையில் எத்தனையோ தேவைகள். அதற்காக எத்தனை எத்தனையோ பிரார்த்தனைகள். தான் கருதியது கைகூடவேண்டும் என்று ஒரு கோயில் முன்பு நின்று அங்குள்ள தெய்வத்தைக் கும்பிட்டு வேண்டிக்கொள்கிருன். கருதியது கைகூடி விடுகிறது. அந்தத் தெய்வம் அவனுக்குக் கண்கண்ட தெய்வம் ஆகிறது. உடனே பூசை புனற்காரங்கள் ஆரம்பிக்கின்றன. இவன் கண்ட வெற்றியை உலகோர் அறிகிருர்கள். எண்ணற்ற மக்கள் அதே கோயிலில் பிரார்த்தனை பண்ணிக்கொள்கிருர்கள். எல்லோருக்கும் அது கண் கண்ட தெய்வம் ஆகிறது. இப்படித்தான் ஆலங்காட்டுக் காளியும், முப்பந்தல் பேச்சியும், புன்னை நல்லூர் மாரியும் கண்கண்ட தெய்வங்களாக இன்றும் மக்கள் உள்ளத்தில் நிலைத்திருக்கிருர்கள்.

மனிதன் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத எத்தனையோ அதிசயங்கள் நிறைவேறி விடுகின்றன இறைவழிபாட்டினுல். கீழே விழுந்ததால் இடுப்பு ஒடிகிறது ஒருவருக்கு. பல வருஷ காலம் படுக்கையிலேயே

கிடக்கிருர். பார்க்காத வைத்தியம் இல்லை, கேட்காத சோதிடம் இல்லை. என்றுலும் வயது அதிகம் ஆகி விட்டபடியால் குணம் பெற்று எழுந்து நடப்பது சாத்திய மாக இல்லை. இந்த நிலையில் முருகனை நினைக்கிருர். அவன் கோயிலே கதி, அவன் திருவடியே சதம் என்ற எண்ணத்துடன் பழியாய்க் கிடக்கிருர் அங்கே. இறை அருளால் சில மாதங்களில் எழுந்து நடமாட ஆரம்பித்து விடுகிருர். ஏன் ஆடிப் பாடவே துவங்கி விடுகிருர். இப்படி கண்ணிழந்தவர் கண் பெற்றதும், ஊமையா யிருந்தவர் பேசத் துவங்கியதும் இன்றும் நடக்கும் அதிசயங்கள் தாமே. இந்த நிலையில் முருகனைக் கலியுக வரதனுக எண்ணற்ற மக்கள் கொண்டாடுவதிலும், அவனைக் கண் கண்ட தெய்வமாகப் போற்றிப் பணிவதி லும் வியப்பில்லைதானே.

ஆனுல், ஐந்து வயது வரை ஊமையாயிருந்து அதன்பின் அலைவாய் முருகன் அருளால் வாய் திறந்து கந்தர் கலிவெண்பாப் பாடிய அந்தக் குமரகுருபரர் ஒரு கேள்வி கேட்கிருர் சரஸ்வதி தேவியையே பார்த்து. அவரது கேள்வி இதுதான்.

மண்கண்ட வெண்குடைக்
கீழாக மேற்பட்ட
மன்னரும் என்
பண்கண்ட அளவில்
பணியச் செய்வாய்;
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்
பல்கோடி உண்டு எனினும்,
விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம்
உளதோ சகல
கலா வல்லியே?

உண்மைதான்; மக்களுக்குச் சென்ற இடம் எல்லாம்

சிறப்புத் தரும் கல்வியைக் கலைமகளாகவே வழிபட்ட திலும், அந்தக் கலைமகளே மக்கள் இனத்திற்கு என்றும் எப்போதும் கண்கண்ட தெய்வமாக இருக்கிறுள் என் பதிலும் எவ்வளவோ பொருள் உண்டு. அவளது அருள் இல்லாவிட்டால் கம்பன் என்று ஒரு மானுடன் வாழ்ந்திருப்பானு? காளிதாசன் கவிதை புனைந்திருப் பானு? உம்பர் வானத்துக் கோளையும் மீனையும் அந்த பாஸ்கரன் ஓர்ந்தளந்திருப்பானு? உலகமே ஒரே சூன்யமாக அல்லவா போயிருக்கும்.

கல்வி என்றுல் ஏட்டுக் கல்வி யென்றும் அதை வளர்க்கவே கலைமகள் அருள் பாலிக்கிறுள் என்றும் மட்டும் கலைஞர்கள் எண்ணுவதில்லை. ஏர் பிடித்து உழுவதற்கும், நூல் நூற்று ஆடைகள் நெய்வதற்கும், மண் வனைந்து வீடு கட்டுவதற்கும், ஏன், யுத்தங்களை நடத்துவதற்குரிய ஆயுதங்களையும் யந்திரங்களையும் செய்வதற்குமே அவள் அருள் வேண்டியிருக்கிறது. அதனுல்தான், நிலம் உழுபவர் கரமும், காவியம் எழுதும் கவிஞர் நாவும், உலக வளர்ச்சிக்கு உதவும் அறிஞர் நெஞ்சமும் அவள் தன் இருப்பிடம் என்று தீர்மானித்திருக்கிருர்கள். அதைப் பாடியும் இருக் கிருர்கள்.

நாடிப் புலங்கள்
உழுவார் கரமும்,
நய உரைகள்
தேடிக் கொழிக்கும்
கவிவாணர் நாவும்,
செழுங் கருணை
ஓடிப் பெருகும்
அறிவாளர் நெஞ்சும்,
உவந்து நடம்

ஆடிக் களிக்கும்
மயிலே உன்பாதம்
அடைக் கலமே.

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாட்டுத்தான் இந்த உண்மையை எல்லாம் எவ்வளவு எளிதாகச் சொல்லிவிடுகிறது !

உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்க இடமும் கிடைத்த பின் மனிதன் பெற விரும்புவது அறிவு. அந்த அறிவைக் கொடுப்பது கல்வி, அந்தக் கல்வியே மக்களுக்குக் கண் கண்ட தெய்வம் என்ற உண்மையை எல்லாம் உணர்ந்த நம் முன்னோர் அந்தக் கல்வியைக் கலைமகள் எனவே கற்பித்திருக்கிறார்கள். கல்வியாலே அடையும் நன்மைகள் எல்லாம் பெருகி, அதனால் செல்வம் கொழிக்கும் என்று நம்பியிருக்கிறார்கள். அந்தச் செல்வத்தை அள்ளிக்கொடுப்பவளை அலைமகளாக எண்ணியிருக்கிறார்கள். இப்படிப் பெறும் கல்விச் செல்வத்தையும் பாதுகாக்கும் அதிதேவதைதான் இறை அருள் என்றும் அந்த அருள் வடிவமே மலைமகள் என்றும் உருவாக்கி யிருக்கிறார்கள். இப்படியே மலைமகளையும் அலைமகளையும் கலைமகளையும் நினைந்து நினைந்து தொழுதவர்கள், தங்கள் அறியாமை, ஆணவம் எல்லாவற்றையும் அழிக்கும் சக்தியைக் கண்டு அஞ்சியிருக்கிறார்கள். அப்படி அஞ்சி அஞ்சியே வணங்கியிருக்கிறார்கள் அன்னை பயங்கரியை. எருமை மாடுபோன்ற அறியாமையைத் துடைப்பவளை மகிஷ மர்த்தினி, துர்க்கை என்றெல்லாம் உருவகம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம்தான் விழா நடத்துகிறோம் நாம் நவராத்திரியில்.

அறிவாளர் நெஞ்சில் பிறந்து கவிஞர்களது நாவில் நடம் ஆடிய கலைமகள் கலைஞர்கள் கையிலும், உருவாகி

இருக்கிருள். இன்று வீடுதோறும் கலைமகள் திருஉருவம் உண்டு. சிறந்த சித்ரீகர் ஒருவர் கருணையாலும் அச்சுக் கூடத்தார் செய்த அரும்பணியாலும் இந்த சரஸ்வதி படமே, இன்று நம் கண்முன் இருக்கும் கலைமகள். ஆனுல் அந்தக் கலைமகள் முகத்திலே அழகு இருக் கிறது, அருள் இல்லை; இருக்கும் நிலையிலே கவர்ச்சி இருக்கிறது, காம்பீர்யம் இல்லை; கால்மேல் கால் போட்டு வீணை ஏந்தியிருப்பதில் ஒய்யாரம் இருக்கிறது, உணர்ச்சி இல்லை. வண்ண விஸ்தாரங்களை யெல்லாம் நன்குணர்ந்த கலைஞர் கலைஞனின் எண்ணத்தைப் பிரதிபலிக்கத் தவறிவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

நல்ல கலைமகளின் திருவுருவம் காணவேண்டு மானுல், நாம் நமது கோயில்களுக்குத்தான் போக வேண்டும்.

கோது அகன்ற
தொழில் உடைத்தாகி
குலவு சித்திரம்
கோபுரம் கோயில்

ஈது அனைத்தின்
எழிலுடை உற்ருள்
இன்பமே வடிவு
ஆகிடப் பெற்ருள்.

என்று பாடினுனே பாரதி, அந்தப் பாரதி பாடிய இந்தப் பாரதிக்குக் கோயில்களில் இடம் இல்லாது போகுமா? இப்படிக் கோயில் கோயிலாக எழுந்தருளியிருக்கும் கலைமகளின் சிறந்த சிற்ப உருவைக் காணவேண்டும் என்ருல், தமிழ் நாட்டில் கங்கை கொண்ட சோழபுரமே போகவேண்டும். மெயின் லயனில் வருகிறவர்கள் கும்பகோணத்தில் இறங்கி கார் வைத்துக்கொண்டு இருபது மைல் வடமேற்கே போகலாம். இல்லை கார்டு

லயனில் வருகிறவர்கள் அரியலூரில் இறங்கி முப்பது மைல் வடகிழக்கே வரலாம். இரண்டு வழிகளிலும் பஸ் வசதி உண்டு.

கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற பெயரோடு அங்கே கோயில் கட்டியவன் தஞ்சைப் பெருஉடையார் கோயிலைக் கட்டிய ராஜ ராஜனின் மகன் அமரன் ராஜேந்திரன். கங்கையும் கடாரமும் சென்று வெற்றி கண்டவன் ஆனதால் கங்கை கொண்ட சோழன் என்று பெயர் பெற்றிருக்கிறான். அவன் அமைத்த கோயில்தான் கங்கை கொண்ட சோழீச்சுரம். இந்தக் கோயிலையும், இதை அமைத்த வரலாற்றையும் அங்குள்ள சிற்ப வடிவங்களையும் பற்றித்தெரிந்து கொள்ள நல்ல அவகாசம் வேண்டும். அந்த அவகாசம் இப்போது இல்லை ஆதலால் நேரே தெற்குப் பிரகாரத்திற்குப்போய், அர்த்த மண்டபத்திற்குப் போகும் படிவழியே ஏறினால் வழியிலே மேற்கே பார்த்த திரு உருவமாக உட்கார்ந்திருப்பாள் கலைமகள், வீணை கையில் இல்லைதான், என்றாலும் கையில் உள்ள அக்கமாலையும் கலசமும் அவள் கலைமகளே என்பதைக் காட்டி விடும்.

நல்ல கம்பீரமான உருவம்; அமைதி நிலவும் சாந்த சொரூபம்; நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்க, வெள்ளைத்தாமரையில் அவள் வீற்றிருக்கும் திருக்கோலம் அன்பர் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாய் இருக்கும். Bas relief என்னும் உப்புச உருவில் அமைந்த சிலையானதால் வலக் கைகளில் அபயகரம் மிகவும் குறுகியது போலத்தோன்றும். என்றாலும் ‘ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு’ என்று அறிவுறுத்தும். இந்தத் தெய்வத் திருவுருவைக் கண்டால் என்றும் ‘உள்ளதாம் பொருளை தேடி உணர்ந்தே ஓதும் வேதத்தின் உள்நின்று ஒளிறும்’

ஞான சரஸ்வதி இவளே என்று எண்ணத்தோன்றும். இவளை நேரில் சென்று காண இயலாதவர்கள் கண் குளிரவே இவள் திருஉருவை இங்கு வெளியிட்டிருக் கிறேம்.

இன்னுமொரு சிற்பம், மிகவும் சமீப காலத்தில் உருவானதுதான். கேட்கப்போனல் மேலே சொல்லி யிருக்கும் சரஸ்வதியின் வண்ணப் படத்தைப் பார்த்த பின் உருவான சிலையாகவே இருக்கலாம். இதை உரு வாக்கிய சிற்பி கோயில்களில் உள்ள பழைய ஞான சரஸ்வதிகளைக் கண்டிருக்கிருன், இப்போது வண்ணத் தில் உருவாகும் சரஸ்வதிகளையும் பார்த்திருக்கிருன். உட்காரும் நிலையிலுள்ள கோளாறுகளை உணர்ந்திருக்கி ருன். கால்மேல் போட்ட காலை அகற்றி வீணையேந்து வதற்கு உரிய வாய்ப்பாக ஒரு காலைத் தாழ்த்தி, ஒரு காலைத் தூக்கி வைத்து உருவாக்கியிருக்கிருன். தூக்கி வைத்திருக்கும் காலை மடித்துப் போட்டிருப்பானுனல் சிறந்ததாகவும் தமிழ் நாட்டின் பண்புக்கு விரோதம் இல்லாமலும் இருக்கும் என்பது என் எண்ணம். இருந் தாலும் பரவா இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு, மற்றப்படி உருவம் சிறப்பாக அமைந்திருக்கும் காரணத்தால். இந்தத் திருஉருவம் இருப்பது, கும்ப கோணத்தை அடுத்த சுவாமி மலையில் உள்ள முருகன் கோயிலில் மேலப் பிரகாரத்தில் இவளையும் இவளை அடுத்திருக்கும் கஜலக்ஷிமியையும் இருப்புக் கிராதிகள் அமைத்து பந்தோபஸ்து செய்து வைத்து இருக் கிருர்கள். அவர்களைப் பார்க்கவேண்டுமானுல் அர்ச் சகர் தயவு வேண்டும். அவர் வந்து கதவு திறக்கும் வரை காத்திருக்கவேண்டும். கலை உருவைக் காண விரும்பினுல் காத்திருங்கள்.

# 5

## கல்லில் உருவான கற்பனை

நமது தமிழ் நாட்டிலே கீழ்க்கரையை அடுத்த ஒரு சிறு ஊரிலே இருக்கிருன் ஒரு மனிதன். அவன் வழக்கமாய்த் தினசரி படுக்கையைவிட்டு எழுவது எல்லாம் சூரிய உதயம் ஆன பின்புதான். ஏன் ? சுள்ளென்று வெயில் உடலில் உறைத்த பின்பே அவன் படுக்கையையே உதறுவான். ஒருநாள் அவன் அதி காலையிலேயே, பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்து விடுகிருன். வீட்டை விட்டு வெளியே புறப்பட்டும் விடுகிருன். காரணம், 'காலை வேளையில் திறந்த வெளியில் நீண்டதூரம் நடந்து திரும்பினுல் உடலுக்கு நல்லது' என்று யாரோ அவனிடம் சொல்லியிருக்கிருர்கள். ஆதலால், எழுந்து நடந்தவன் கிழக்கு நோக்கி நடக்கிருன். ஒன்றரை மைல் மணற்பாதையிலே நடந்து கடற்கரைக்கு வந்து சேர்கிருன். தன்முன் அகன்று பரந்து கிடக்கும் கடலையும், விரிந்து உயர்ந்து நிற்கும் வானையும் பார்க்கிருன். வானையும் கடலையும் நோக்கி நின்றவன் அந்நீலக்கடலினை, அவ்வானவளையம் முத்தமிட்டே தழுவி முகிழ்த்தலையும் காண்கிருன்.



திலகமிடும் தையல்-ஸ்ரீரங்கம்

அந்தக் காட்சியிலேயே அவன் ஒன்றி நிற்கும்போது அந்த வானவளையத்திடையே ஒரு ஒளிப் பிழம்பு ஒன்று கொஞ்சம் கொஞ்சமாய்த் தோன்றுவதையும் நோக்கு கிறுன். உற்று நோக்க நோக்க கடலுக்குள்ளிருந்து சூரியன் அப்படியே வெளியே வந்து நிர்மலமாயிருந்த ஆகாயம் அத்தனையையும் அழகான காட்சியாக மாற்றுவதையும் உணர்கிறுன். என்ன அற்புதமான காட்சி! களங்கமற்றிருந்த அந்த வானவெளியிலே ஒளிப் பிழம்பாகிய சூரியன் தகதகவென விளங்குவது. அது அவனுடைய அழகுணர்ச்சியைத் தூண்டு கின்றது, ஒரு ஆனந்தத்தை அளிக்கின்றது. இப்படிப் பட்ட இன்பமான அனுபவத்தோடே வீடுதிரும்புகிறுன் அவன் அன்று.

பகல் முழுவதும் இதே சிந்தனை. 'என்ன காட்சி! என்ன காட்சி!' என்று சொல்லிக்கொண்டே உளம் நிறைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருக் கிறுன் வருவார் போவார் எல்லோரிடமும். மாலைப் பொழுது வருகிறது. சூரியனின் வெப்பமும் தணிகிறது. மறுபடியும் இப்படிப்பட்ட காட்சி ஒன்று கிடைக்காதோ என்று ஏங்குகிறுன். உடனே ஓடுகிறுன் கிழக்கு நோக்கி. இவன் கடற்கரையைச் சேருவதற்குள் நன்ருக இருட்டி விடுகிறது. இது என்ன ஒரே ஏமாற்றம்? அந்த அப்பாவி அறியவில்லை, காலையில்தான் சூரியன் கிழக்கே உதிப்பான் என்று. என்ருலும் நம்பிக்கையை இழக்காமல் கீழ்த்திசை வானை, வானும் கடலும் முத்த மிட்டுக் கொஞ்சும் அந்த அடிவான வளையத்தையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறுன். ஏதோ, அவன் அதிருஷ்டசாலிதான். அன்ருே பௌர்ணமி தினம். ஆதலால் கொஞ்ச நேரத்தில் அதே கடலுக்குள் இருந்து முழுமதி தன் குளிர்ந்த ஒளியைப் பரப்பிக் கொண்டு வெளியே வந்துவிடுகிறது. அடே! இது

என்ன அதிசயத்திலும் அதிசயமாக இருக்கிறது. காலையில் கண்ட காட்சி உடலுக்கு ஒரு வெதுவெதுப்பைக் கொடுத்து உற்சாகப் படுத்திற்று என்ருல், அதே இடத்தில் காணும் இந்த மாலைக் காட்சியோ எவ்வளவு இதமாக இருக்கிறதே. உடலுக்குத்தான் எத்தனை குளிர்ச்சி. உள்ளத்துக்குத்தான் எவ்வளவு சாந்தி. இப்படியெல்லாமா இவ்வுலகில் அதிசயங்கள் நடக்கின்றன தினசரி என்று ஆச்சரியப்படுகிருன் அவன்.

இப்படியெல்லாம் நல்ல அனுபவங்கள் பெற அவனுல் தினசரி கடற்கரைக்குப் போக முடிகிறதில்லை. போனலும் போய்ச் சேருவதற்கு முன்பே அந்தப் பொல்லாத சூரியன் வானில் நெடுந்தூரம் சென்றுவிடுவான். சந்திரனே பல நாள் வராமலேயே ஏய்த்து விடுவான். அப்படியே வந்தாலும் அரையும் குறையுமாகவே தோன்றிவிடுவான். ஆதலால் அன்று கண்டானே காலையிலும் மாலையிலும் அந்த அதிசயமான காட்சியைக் காண அந்தக் காட்சியில் உள்ளம் திளைக்க ஏங்கி ஏங்கி நைகிருன். அந்த எண்ணத்திலேயே நாளையும் பொழுதையும் கழிக்கிருன். இவன் படும் துயரை எல்லாம் காண்கிருள் இவனுடைய அருமைக் காதலி. இவனுடைய துயரை எப்படித் துடைப்பது என்று அவளும் சிந்திக்க ஆரம்பிக்கிருள் பலநாட்களாக. ஒருநாள் காலையில், குளியலை முடித்துவிட்டு முன்கூடத்தில் மாட்டிவைத்திருந்த ஒரு நிலைக் கண்ணுடி முன்வந்து நிற்கிருள் அவள். கண்ணுடியில் தன் முகத்தை நோக்குகிருள். கறுத்து நீண்டு புரளும் கூந்தலுக்கும் தன் கண்களுக்கும் இடையே உள்ள அந்த அகலிடத்தை, நெற்றியைக் காண்கிருள். இந்த நெற்றி இவ்வளவு அகலமானதா? ஏது வானவெளியிலும் அகன்று பரந்திருக்கிறதே இந்த நுதல் என்று தோன்றுகிறது அவளுக்கு. அடே இந்த வானவெளி

யிலே ஒரு ஒளிப்பிழம்பை, ஒரு குளிர்மதியைத் தோற்று வித்தல் கூடாதோ, அதன் மூலமாய் தன் காதலனைக் களிப்பித்தல் கூடாதோ என்று நினைக்கிறாள். வீட்டிற் குள் ஓடுகிறாள். மஞ்சளை எடுத்து சுண்ணம் அடித் திருந்த சுவரில் தேய்க்கிறாள். அங்கே கிடைக்கும் சிவப்பு வர்ணத்தை வலக் கையில் நடுவிரலால் எடுக் கிறாள். அதை நெற்றியின் நடுவில் வைத்துப் பொட்டிடு கிறாள். அதன்பின் மறுபடியும் கண்ணாடியின் முன் வந்து தன் முகத்தைப் பார்க்கிறாள். அகன்று பரந்த நுதல் வெட்ட வெளியாய் இல்லாமல் ஒரு தனி அழகுடன் விளங்குவதைக் காண்கிறாள். இந்தப் பூரணப் பொலிவுடனேயே தன் காதலன் முன் வந்து நிற்கிறாள். ஆழ்ந்த சிந்தனையில் கன்னத்தில் கையூன்றி கவிழ்ந்த தலையினனாய் இருந்த அவனும், அவள் தன் பாதச் சிலம்பொலி கேட்டு நிமிர்ந்து பார்க்கிறான். அவள்தன் நெற்றியை அலங்கரித்துக் கொண்டு கிடக் கும் அந்தப் பொட்டையும் பார்க்கிறான். அதிசயிக் கிறான்; அளவிலா உவகை கொள்கிறான். பொங்கி வரும் பெருநிலவு போன்ற புதுத் திலகம் கிடந்த தன் காதலியின் திருநுதலைக் கண்டவுடனே துள்ளியெழுந்து 'அடடா வோ அடடா! அழகென்னும் தெய்வம்தான் இது என்றே கண்டேன்' என்று ஆர்ப்பரித்துவிடுகிறான். ஆம், அழகுக்கு அழகு செய்வதாய் இந்தத் திலகம் அமைந்து விடுகிறது அவள் நெற்றியிலே.

இப்படித்தான் பொட்டிடத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும் நம் மகளிர். வானவீதியிலே தோன்றும் ஒளிப்பிழம்பான சூரியனையும் குளிர்மதியையும் கண்டே பொட்டிடப் பழகியிருக்கிறார்கள், இவர்கள். இப்படிப் பட்ட கற்பனை ஒன்று என் உள்ளத்தில் உதித்தது ஒருநாள். இது வீணான கற்பனை அல்லதானே. இந்தக் கற்பனையும் சும்மா உதித்துவிடவில்லை. கலையைப்

பற்றிய அருமையான நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருக்கும்போது அங்கு சொல்லியிருந்தது 'மறுபடியும் அனுபவிக்க முடியாத இன்பத்தைத் தானும், பிறரும் பின்னும் நுகர்வதற்குச் செய்யும் முயற்சியும் அம்முயற்சியின் விளைவுமே கலை' என்று. இந்த விளக்கத்தைச் சுற்றி சுற்றி ஓடிய சிந்தனைதான் பொட்டிடும் கலையைக் கண்டறிந்த முறையைப் பற்றிக் கற்பனை பண்ணியிருக்கிறது.

*

அலங்காரம் செய்துகொள்வது ஒரு அற்புதமான கலை. பெண்கள் தம்மை அழகு செய்துகொள்ள என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய விரிவான விளக்கங்கள் கொடுத் திருக்கிறார்கள் சித்ரீகர்கள், கவிஞர்கள், ரஸிகர்கள். எவ்விதமாகக் கண்ணுக்கு மையிட்டுக்கொண்டால், எவ்விதமாக நெற்றியில் திலகம் இட்டுக்கொண்டால், எந்த எந்த அணிகளை எப்படி எப்படி அணிந்தால், எவ்விதமாக முறுவலித்தால், எவ்விதமாக அங்கங்களை வளைத்தால், கூந்தலை எவ்விதமாக எல்லாம் பரப்பினால் ஆண்கள் நெஞ்சம் துடித்து மடியும் என்பதை அறியும் கலையில் பெண்களில் பலர் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களது அழகுப் பொருள் பெட்டகமே அவர்களது அம்பறுத்தூணி. மனிதனது உள்ளத்தைப் பிய்க்கும் கூரிய அம்புகள் அந்த அம்பறுத்தூணியில் அடுக்கடுக்காக இருக்கும். ஆதலால்தான் பொட்டிடும் கலையைப்பற்றி கவிஞர்கள் எல்லாம் பலபடப் பாராட்டியிருக்கிறார்கள். 'நல்ல திலகம் கிடந்த திருநுதல்' என்பார் முத்தொள்ளாயிரக் கவிஞர். 'திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்' என்பார் நக்கீரர். 'நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ' என்பார் கவிச்சக்ரவர்த்தி கம்பர். 'நிலமகள்தன் ஆனனமோ,

நேத்திரமோ நெற்றித் திலகமோ, செந்திருவாழ் செய்ய மலர்தானே' என்பார் இன்னொருவர்.

இப்படி எல்லாம் கவிஞர்களால் பாடப்பெற்ற இந்த அற்புதமான கலை சித்திரத்திலும் சிற்பத்திலுமே சிறப்பான இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். அஜந்தா விஹாரத்தை அணிசெய்யும் அற்புதமான ஓவியங்களில் பெரும்பகுதி பெண்களின் உருவங்களே. பெண்களைத் தவிர வேறு கலைப்பொருள்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அவர்களை உருவாக்கி இருக்கிறார்கள் சித்ரீகர்கள். அங்கே ஆசனங்களில் அமர்ந்திருக்கும் அரசிளங்குமரிகள் உண்டு. அவர்களது ஏவலுக்குக் காத்துக்கிடக்கும் அழகிய பணிப்பெண்களும் உண்டு. உல்லாசமாக நடக்கும் மங்கையர் உண்டு. களியாட்டயரும் காரிகையார் உண்டு. கூந்தலைக் கோதி நிற்கும் கோமளவல்லிகள் உண்டு. திலகம் தீட்டும் திவ்யரூப சௌந்தர்ய வதிகளும் உண்டு. திலகமிடும் சுந்தரியின், திருஉரு ஒன்று இன்றும் அஜந்தா சித்திரங்களிலே அழியா ஓவியமாக இருக்கின்றது. அவள் நிற்கின்ற ஒயிலிலேயே நாம் மயங்குகின்றோம். அணிகளும் பணிகளும் அழகுக்கு அழகு செய்கின்றன. இடக் கையில் அகன்றதொரு கண்ணாடியை லாவகமாக ஏந்திப் பொட்டிடத் தயாராகிக் கொண்டிருக்கிறாள். அவளுடைய கண்ணும் கருத்தும் வலக்கை விரலிலே தோய்ந்திருக்கும் வர்ண மையிலே லயித்திருக்கிறது. இப்போதே இத்தனை அழகுடன் விளங்கும் இவள் பொட்டிட்டபின் எத்தனை அழகுடன் விளங்குவாள் என்பதைக் கொஞ்சம் ஊகித்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா?

பொட்டிடும் பெண்களைக் காவியத்தில் பார்த்தோம், ஓவியத்திலும் பார்த்தோம். இனி சிற்பத்திலுமே


பார்க்கலாம். பொட்டிடும் பெண்களை உருவாக்குவதிலே தமிழ்நாட்டுச் சிற்பிகள் மற்ற எல்லோரையுமே தூக்கி அடித்துவிடுகிறார்கள். சாதாரணமாக நம் பெண்கள் பொட்டிட்டுக்கொள்வது எப்படி? ஏதோ ஒரு கண்ணாடிமுன் நிற்பார்கள். இல்லையென்றால் இடக் கையில் கண்ணாடி ஒன்றை ஏந்திக் கொள்வார்கள். வலக் கையில் நடுவிரலால், குங்குமத்தையோ சாந்தையோ எடுத்துக் கொள்வார்கள். அப்படியே நெற்றியில் பொட்டிட்டுக் கொள்வார்கள். அப்படிப் பொட்டிடும்போது சில சமயங்களில் பொட்டு சரியாய் அமைவதில்லை. ஆதலால் முதலில் இட்டதை அழித்துவிட்டு மறுபடியும் இடுவார்கள். அதிலும் திருப்தி ஏற்படாவிட்டால் இன்னொருமுறை. இப்படியே எத்தனை தரம் வேண்டுமானாலும் அழித்து அழித்து இட்டுக்கொண்டே இருப்பார்கள். இதைப் பார்த் திருக்கிறான் சிற்பி. ஏன் இவர்கள் இத்தனை தரம் அழித்து அழித்துப் போடுகிறார்கள் என்பதைப் பற்றியும் சிந்தித்திருக்கிறான். விஷயம் விளங்கி யிருக்கிறது அவனுக்கு. பொட்டிடும்போது உள்ளங்கை முகத்தை மறைத்துக் கொள்வதினாலே பொட்டிடும்பொழுதே பொட்டின் அளவு, அது அமையவேண்டிய இடம், அதனால் முகத்திற்கு ஏற்படும் பொலிவு எல்லா வற்றையும் ஒரே தடவையில் பார்த்துவிட முடிகிறதில்லை. ஒரு தடவை பொட்டிட்டு அதன்பின் கையை எடுத்து எடுத்தே அதன் அழகைப் பார்த்துப் பார்த்து அதைத்திருத்த வேண்டியிருக்கிறது. இதைத் தவிர்க்க முடியாதா, பொட்டிடுகிற அக்கணமே? அதனால் ஏற்படும் அழகையெல்லாம் காணும்படி பொட்டிட்டுக்கொள்ள முடியாதா என்று சிந்தித் திருக்கிறான். அப்படிச் சிந்தித்ததன் பலனாக ஒரு நிலையைக் கற்பனை பண்ணியிருக்கிறான். அப்படிக்

கற்பனை பண்ணி உருவாக்கிய ஒரு சிலா உருவைத்தான் நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள். இந்தப் பெண்ணைப் பாருங்கள். இவள் இடக் கையிலே கண்ணாடியை ஏந்தியிருக்கிறாள். வலக்கையைத் தலையைச் சுற்றித் தலைக்குப் பின்புறமாகக் கொண்டு வருகிறாள். அதன்பின் நடுவிரலால் நெற்றிக்குப் பொட்டிட்டுக் கொள்கிறாள். இப்படி இவள் பொட்டிட்டுக்கொள்வதன் காரணமாக, இவள் உள்ளங்கை இவள் திருமுக மண்டலத்தை மறைக்கவில்லை. பொட்டிட்டுக் கொள்ளும்போதே தன் முகம் முழுவதையும் கண்ணாடியில் கண்டுகொள்கிறாள். இப்படிப் பொட்டிடு வதால் முகம் எப்படிக் களை பெறுகிறது என்பதையும், அப்படிப் பொட்டிடும்பொழுதே தெரிந்து கொள்கிறாள் அல்லவா? அடடே, என்ன அருமைப்பாடு இப்படிப் பொட்டிடுவதிலே என்று மூக்கின்மேல் விரலை வைத்து அதிசயித்து நிற்கிறோம்!

இந்தச் சிலை உருவை நேரில் பார்க்க விரும்பினால் நேரே ஸ்ரீரங்கத்திற்குச் செல்லுங்கள். தென் பக்கத்தி லுள்ள ராயகோபுரம் முதலிய மண்டபங்களையெல்லாம் கடந்து நான்முகன் கோட்டை வாயிலுக்கு வந்து சேருங்கள். அந்த வாயிலையும் கடந்து அதற்கு அடுத்த ரங்கவிலாசத்தில் இடப்பக்கமாக நுழைந்து அங்குள்ள வேணுகோபாலன் சன்னதியைக் கண்டுபிடியுங்கள். வேணுகோபாலனைக்கூட கொஞ்சம் மறந்து அவன் கோயிலின் வெளிப்பிரகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றுங் கள். தெற்குப் பிரகாரத்தில் உள்ள ஒரு மாடக்குழி யிலே இந்த அற்புதமான பெண்ணுருவைக் காண்பீர் கள். அவள் நிற்கின்ற ஒய்யாரம், கையில் கண்ணாடி ஏந்தியிருக்கின்ற லாவகம், அணிந்திருக்கும் அணிகள், உதடுகளிலே தவழும் புன்னகை எல்லாவற்றையுமே காண்பீர்கள். ஒருவேளை நீங்கள் அழுத்தமான சைவ

ராக இருந்து ஸ்ரீரங்கநாதனே அல்லது வேணுகோப லனே இருக்கும் திக்கு நோக்கிக்கூட திரும்ப மாட்டோமே என்றாலும் பரவாயில்லை. நீங்கள் அல்லும் பகலும் அனவரதமும் தொழும் அந்த காசி விஸ்வ நாதர் ஆலயத்திற்கே போங்கள். ஆம் அந்தத்தொலை தூரத்திலிருக்கும் வடகாசிக்கல்ல. திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள தென்காசிக்குத்தான். அங்குள்ள விஸ்வநாதர் ஆலயத்தின் முன் மண்டபத்திலும் மேற்கே பார்த்த தூண் ஒன்றில் இதே பொட்டிடும் பெண் இதே நிலையில் காட்சிகொடுப்பாள், பார்த்துக் களியுங்கள்.

இந்தச் சிலா உருவத்தின் சிறப்பை எல்லாம் ஒரு நண்பரோடு சொல்லிக்கொண்டிருந்தேன் ஒரு நாள். அவரும் நான் சொன்னது அத்தனையும் கேட்டுவிட்டு அதன்பின் சொன்னார், 'என்ன சார், ரொம்ப கதை அளக்கிறீர்கள். இந்த விதமாக எந்தப் பெண் சார் பொட்டிட்டுக்கொள்கிறாள் ? கொஞ்சமும் இயற்கைக் குப் பொருத்தமாக இல்லையே இதைப்போய் ரொம்பவும் பிரமாதப் படுத்துகிறீர்களே,' என்றார். இப்படி அவர் பேசியதனால் எனக்குக் கோபம் ஒன்றும் வரவில்லை. அவருடைய அறியாமைக்காகத்தான் வருந்தினேன். கலை என்பது இருக்கிறதை அப்படியே உருவாக்கிக் காட்டுவது அல்ல. அந்த வேலையைத்தான் போட்டோ காமிரா மிகவும் திறமையாகச் செய்துவிடுமே. இந்தப் பொருள் இப்படி இருக்கிறது இன்று, இது எப்படி இருந்திருக்க வேண்டும், எப்படியிருந்தால் அதில் அழகு வழியும் என்று தெரிந்து அதை உருவாக்குவதில் தான் இருக்கிறது கலைஞன் வேலை. அதுதான் கலை உரைக்கும் கற்பனை ; அதுவே நிலை பெற்றிருக்கும், என்று அந்த நண்பரிடம் விளக்கினேன். அவருக்கு விளங்கிற்று. உங்களுக்கும் விளங்குகிறதல்லவா இப்போது ?



நாணும் நங்கை - ஸ்ரீரங்கம்

# 6

# நாணமும் பெண்மையும் கல்லிலே

நாணம், ஒரு அற்புதமான அழகான உணர்ச்சி. இந்த உணர்ச்சி எப்படி உருவாகிறது?

இலங்கையில் முதல் நாள் போர்க்களம். ராமனுடன் இராவணன் போர் ஏற்று நிற்கிருன். ராமன் விடும் சரங்களால் இராவணனது சேனு சமுத்திரம் அல்லோல கல்லோலப்படுகிறது. இராவணனது தேர் அழிகிறது; வில் முறிகிறது; கவசம் பிளக்கிறது; அவன்றன் மணிமாமகுடங்களுமே இற்று விழுகின்றன. இப்படித் தோல்வியுற்று, இரங்கு கண்ணெடும், எல்அழி முகத்தொடும், வெறுங்கையோடும், தலையொடும் நிற்கும் இராவணன்மீது கருணை காட்டுகிருன் ராமன். 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று அனுப்பி வைக்கிருன். இராவணனும் வெட்கத்தால் குன்றிய உடலோடு, குனிந்த தலை நிமிராமல் அரண்மனையை அடைகிருன். அவன் உள்ள உணர்ச்சியைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் அழகாகச் சொல்கிருன்.

வான்நகும், மண்ணும் எல்லாம்
நகும், நெடுவயிரத் தோளான்
நானகு பகைவர் எல்லாம்
நகுவர் என்பதற்கு நாணுன் ;
வேல்நகு நெடுங்கண் செவ்வாய்
மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே
நாணத்தால் சாம்புகின்ருன்.

இப்படி தன்னைப்பார்த்து உலகெல்லாம் சிரிப்பதுடன் இந்த ஜானகியும் சிரிப்பாளே என்று நினைக்கிறபோது ஏற்படும் நாணத்தால் அப்படியே குன்றிக் குமைந்து விடுகிருன் இராவணன். தகாத காரியத்தில் தலையிட்டுத் தோல்வியுறுகிறபோது மனிதன் மனத்தில் எழும் உணர்ச்சியை நாணம் என்றுதான் குறிப்பிடுகிருேம்.

இன்னும் ஒரு விதத்தில் இந்த நாணம் எப்படி உருவாகிறது என்றும் பார்ப்போம். ஆம். கவிச்சக்கர வர்த்தி கம்பன் துணைகொண்டேதான். கோதாவரி நதிக்கரை. அங்கே பஞ்சவடியில் ஒரு பர்ணசாலை. அதில் இருக்கிருர்கள் ராமன் லக்ஷமணன் சீதை மூவரும். ஒரு நாள் மாலை. லக்ஷ்மணன் எங்கோ வெளியே சென்றிருக்கிருன். ராமன் மட்டும் தனியாக பர்ணசாலைக்கு வெளியில் உட்கார்ந்திருக்கிருன். இவனைக் காணுகிருள் சூர்ப்பனகை. அவன் அழகில் மயங்குகிருள். அவனை எப்படியும் அடைந்துவிட வேண்டும், அவன் காதலை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்று துடிக்கிருள். தான் கற்றிருந்த மந்திர சக்தியால் ஒரு அற்புதமான மோகன வடிவத்தையே பெறுகிருள். அந்தக் கோலத்தோடேயே ராமன் முன்னிலையில் வருகிருள். மானின் விழி பெற்று மயில் வந்ததென ஒய்யாரமாக நடக்கிருள். சூர்ப்பனகையின் அபூர்வமான அழகையும் அலங்காரத்தையும், கண்டு,

ராமனே கொஞ்சம் அதிசயிக்கிறன். ராமனை வணங்கு கிறள் அவள். வேல் போன்ற நீண்ட அந்த அழகிய கண் வலையையும் வீசுகிறள். மானைப் போல் நெளிந்து நெளிந்து பின்வாங்குகிறவள்போல் நடக்கிறள். ஆனல் பாதி நாணமும், பாதி ஒய்யாரமுமாக, ராமன் கிட்டவே நெருங்கிவந்து விடுகிறள்.

வெவ்விய நெடுங்கன் அயில் வீசி
அயல் பாரா
நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி
அயல் நின்றுள்

என்று கம்பன் சூர்ப்பனகை நாணத்தோடு ராமனை அணுகுவதைக் குறிக்கிறன். இங்கே உள்ளத்தில் நாண உணர்ச்சி எப்படி உருவாகிறது என்று பார்க்கிறேம். இது ஒரு அபூர்வமான உணர்ச்சிதான். அழகான உணர்ச்சிதான். அதிலும் முக்கியமாகப் பெண்களுக்கு ஏற்படும் உணர்ச்சியாகிறபோது இந்த உணர்ச்சியில் ஒரு பயபக்தி இருக்கிறது, ஒரு கூச்சம் இருக்கிறது, அதே சமயத்தில் உள்ளத்துக்குள்ளே ஒரு உவகையும் இருக்கிறது. இத்தனை உணர்ச்சிகளும் சேர்ந்துதான் அவளை நாணி நிற்கச் செய்கிறது.

இப்படி உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுத்து விட முடிகிறது கவிஞர்களால் அவர்களது கவிதையில். நடனத்திலும் இந்த உணர்ச்சியைக் காட்டிவிட முடிகிறது, நடனமாடுபவர் உண்மையில் பெண்களா கவே இருக்கிறபோது. பரத நாட்டியத்தில் அபிநயம் பிடிக்கும்போது தலையைக் கொஞ்சம் சாய்த்து வலக் கையின் ஆட்காட்டி விரலை லாவகமாக உதட்டின் மேல் வைத்து இடக் கையைத் தலைக்கு மேல் உயர்த்தி முக்காடிட்டுக்கொள்வது போல் காட்டிவிட்டால், நடிகை நாணி நிற்கிறள் என்று தெரிந்து கொள்கிறேம் நாம். மார்வாரி நடனத்திலோ முக்காடிட்ட துணியால்

மூடித்திறந்து முகங்காட்டி இந்த உணர்ச்சியை உரு வாக்கி விடுகிருர்கள். சித்ரீகர்களும் இந்த நடனத் தோற்றங்களைக் கண்டு களித்து அவைகளைச் சித்திரித்து விடுகிருர்கள், பலகையில் துணியில் காகிதத்தில் எல்லாம். ஆனுல், இதை எப்படி சிற்பத்தில்—ஆம் கல்லிலோ, செம்பிலோ காட்டுகிறது ? ஏதோ பரத நாட்டிய முத்திரைகளை எல்லாம்கூட பதித்துவிடலாம் சிற்றுளியின் திறத்தால். இந்த நாண உணர்ச்சிக்குள் ஒளிந்து கிடக்கிறதே பெண்மை அந்தப் பெண்மை உள்ளத்தில் எழுகிறதே உவகை, அதை எப்படி உணர்ச்சியற்ற கல்லில் உருவாக்குகிறது என்பதுதான் கேள்வி. அதை உருவாக்கியிருக்கிருன் ஒரு சிற்பி. ஆம் தமிழ்நாட்டுச் சிற்பி ஒருவன்தான்.

கோகுலத்தில் கண்ணன் நிகழ்த்திய லீலைகள் எல்லாம் நமக்குத் தெரியும். தீராத விளையாட்டுப்பிள்ளை யாகவும், அதனுல் தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லையாகவும்தான் கண்ணன் இருந்திருக்கிருன். அந்த கோகுலத்தின் கோபியரின் பின்னலைப் பின்னின்று இழுத்திருக்கிருன். அவர்களது தயிர்ப் பானைகளை உருட்டியிருக்கிருன். அவர்களைக் கண்ணைக் கட்டி கள்ளத்தனமாக கன்னத்தில் முத்தமிட்டிருக் கிருன். குளத்தில் குளிக்கும்போதோ அவர்கள் சேலை களையெல்லாம் கவர்ந்து கொண்டு குருந்த மரத்தில் ஏறி இருந்திருக்கிருன். இத்தனைத் தொல்லையிலும் அந்தக் கோபிகைகள் இன்பத்தின் எல்லையைத்தான் கண்டிருக் கிருர்கள். ஏதோ பெரிய முறையிடுபவர்கள்போல, யசோதையிடம் புகார் சொல்லியிருக்கிருர்கள். அவர் கள் சொல்லும் புகார் எல்லாம் ‘நாலுபேர் அறியச் சொல்ல நாணம் ஆகுதே,’ என்பதுதான். அப்படிச் சொல்லுவதிலேயே அவன் செய்யும் சிறு குறும்புகள் அவர்களுக்கு எவ்வளவு இன்பத்தை அளித்திருக்

கின்றன! அவனிடத்தில் அவர்களுக்குள்ள காதல்தான் எவ்வளவினதாக இருந்திருக்கிறது! அப்படி நாணுற்று நிற்கிறது பெண்மை; அந்த நிலையில்தான் அவர்கள் உள்ளத்தில் எப்படி எப்படியெல்லாம் உவகை ஊற்றெடுக்கிறது என்பதையெல்லாம் நாம் தெரிந்துகொள்கிறோம். இத்தனை உணர்ச்சியையும் கவிதையிலும், நடனத்திலும், திரைச்சீலையிலும் உருவாக்குவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அப்படி இருக்கும் போது அத்தனை உணர்ச்சியையும் கல்லிலே உருவாக்குவதென்றால் அது ஒரு அற்புதமான சாதனைதானே? அப்படி சாதித்த காரியத்தை, அந்தச் சாதனையில் வெற்றிபெற்ற ஒரு உயிரோவியத்தைக் காண விரும்பினால் நேரே ஸ்ரீரங்கத்திற்குப் புறப்படுங்கள். 'குடதிசை முடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென் திசை இலங்கை நோக்கிக்' கிடக்கும் அந்த அரங்கநாதனைக் கண்டு தொழவோ, அவன் முத்தங்கியும், ரத்ன அங்கியும் அணிந்து சேவை சாதிப்பதைக் காணவோ, வேண்டுமானால், அதற்கு வைகுண்ட ஏகாதசி தினத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். ஆனால் நான் சொல்லும் அற்புத சிற்ப உருவைக் காண சாதாரண தினமே போதும். மேலும், இந்த சிற்பசேவைக்கு, எப்போதுமே பணத்தில் குறியாக இருக்கும் அந்தப் பிரபல பட்டாச்சாரியார்கள் உதவியுமே வேண்டாம்.

தானேங்கு தென்னரங்கத்தில் தென்புறத்தில் உள்ள ராயகோபுரம், மண்டபங்கள் எல்லாம் கடந்து நான்முகம் கோட்டை வாசலுக்கு வந்து சேருங்கள். காலில் செருப்பெல்லாம் அணிந்திருந்தால் அங்கேயே கழற்றி விடுங்கள். நீங்களாகக் கழற்றுவிட்டால், தேவஸ்தான சேவகர் சும்மாயிருக்கமாட்டார் அந்தக் கோபுர வாசலைக் கடந்து உள்ளே சென்று அங்குள்ள

விசாலமான திறந்த வெளியில் நின்ருல், ரங்க விலாசத்தைக் காண்பீர்கள். இந்த இடத்தில் நீங்கள் பெரிய உத்தியோகஸ்தராகவாவது அல்லது கனம் மந்திரியாகவாவது இல்லாதிருந்தால்தான் பிழைப்பீர்கள். தப்பித் தவறி அப்படி இருந்துவிட்டீர்களோ உங்களை வரவேற்க யானை ஒன்று தும்பிக்கையைத் தூக்கி சலாம் செய்து கொண்டு அங்கே நிற்கும். மேலும் உங்கள் காது செவிடு படும்படி டமாரங்கள் அதிரும், கொம்பும் தாரையும் வேறே அலறும். இந்த ஆபத்தெல்லாம் உங்களையும் என்னையும் போன்ற சாதாரண மனிதர்களுக்கு இல்லை. ஆதலால் வந்த சுவடு தெரியாமலேயே ரங்க விலாச மண்டபத்திற்குள் நுழையலாம். அந்த மண்டபத்தின் மத்திய பாகத்திற்கு வந்தபின் இடப்புறமாகத் திரும்பினுல் வாகன மண்டபத்திற்கு வந்து சேருவீர்கள். அந்தச் சமயத்தில் யாராவது அர்ச்சகர்கள் வழிகாட்டியாக வந்து, அங்கெல்லாம் ஒன்றுமில்லை, இங்கே வாருங்கள், கார்த்திகை கோபுரம் ஆர்யபடாள் வாசல் எல்லாம் கடந்து ஸ்ரீ ரங்கநாதனைச் சேவிக்கலாம், என்று கூறினுல் அவர்கள் சொல்லுக்கு செவி சாய்க்காதீர்கள். இங்கே இப்பக்கத்தில் ஒரு கிருஷ்ணன் கோயில் இருக்கிறதாமே அது எங்கிருக்கிறது, என்று கேளுங்கள். கோவில் சிப்பந்திகளுக்கே இப்படி ஒரு கோவில்-வேணுகோபாலன் சந்நிதி இருக்கிறது என்பது தெரியாமல் இருக்கலாம். இருந்தாலும் கொஞ்சநேரத்தில் இந்தச் சந்நிதியைத் தெரிந்த ஒரு அர்ச்சகர் அகப்படாமல் போகமாட்டார். அந்த அர்ச்சகர் வந்து, அங்கு மூடிக்கிடக்கும் சந்நிதிக் கதவைத் திறப்பார்.

அர்த்த மண்டபத்தைக் கடந்ததும், அர்ச்சகர் 'கோபாலனைச் சேவிக்கவேண்டாமோ' என்று சொல்லிக் கொண்டே அந்தக் கோயிலின் கர்ப்பக் கிரஹத்தைத் திறக்கவும், விளக்கு ஏற்றவும் முற்படுவார். இல்லை,

கோபாலனை வலம் வந்தபின் சேவிக்கிறேன் என்று சொல்லி இடப்பக்கம் திரும்பினால் அங்கு வெளிப் பிரகாரத்திற்குப் போகும் கதவு அடைத்துப் பூட்டி யிருக்கும். அதற்கு சாவி கிடைப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆதலால் அப்பிரதக்ஷிணம் என்றாலும் பரவாயில்லை என்றே நீங்கள் வடபுறமிருக்கும் வாசல் வழியாக வெளிப் பிரகாரத்திற்குப் போங்கள். இதற்குள் அர்ச்சகருக்கு உங்கள் விருப்பம் என்ன என்று தெரிந்திருக்கும். 'ஓகோ! நீங்கள் இங்குள்ள சிலைகளைப் பார்க்க வந்தீர்களா, வாருங்கள் வாருங்கள், வந்து பாருங்கள். ஒவ்வொரு பெண்ணும் அவர்கள் அளகபாரத்தைத்தான் எத்தனை எத்தனை விதமாக முடித்திருக்கிறார்கள் அதைப் பாருங்கள்,' என்று குறுக்கே விழுவார். 'இருக்கட்டும் இந்தத் தலையலங்காரம்,' என்று சொல்லிக்கொண்டே விரைவாக அப் பிரதக்ஷிணமாகவே, கோவிலின் தென் புறத்திற்கு வந்து, கோவிலின் தெற்குச் சுவருக்கும் தெற்கு வாயிலுக்கும் இடையே உள்ள ஒரு மாடத்தைக் கொஞ்சம் நிமிர்ந்து நோக்குங்கள். அங்கே காண்பீர்கள் ஒரு கோபிகை நாணிக்கோணி நிற்பதை. கண்ணன் பேரில் கொண்ட காதலால் ஆடைகள் நெகிழ்ந்து எங்கேயோ விழுந்திருக்கவேண்டும். இல்லை அந்த மாயக்கண்ணன் அவைகளைக் களவாடி எடுத்துச் சென்று குருந்த மரத்தில் உலர்த்தியிருக்க வேண்டும். ஆடையில்லையே, நம்மையெல்லாம் ஆடவர்கள் வந்து பார்க்கிறார்களே என்று நாணத்தை அவள் அங்கங்கள் ஒவ்வொன்றுமே சொல்லும். விநோதமாக அலங்காரம் செய்யப்பட்ட அந்தத் தலையைக் கொஞ்சம் சாய்த்து வலக் கையின் ஆட்காட்டி விரலை முகவாய்கட்டையில் லாகவமாய் வைத்து, இடக் கையை உடலோடு ஒட்ட அணைத்து நிற்பதிலே அந்த நாணம் அப்படியே பிரதிபலிக்கப்

பார்ப்பீர்கள். இதையெல்லாம்விட அவள் உதடுகள் அப்போது அவள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்பத்தினையுமே வெளியிட்டுக்கொண்டு நிற்கும். இப்படி ஒரு பெண்ணை, நாணமே உருவெடுத்து நிற்பது போன்ற ஒரு பெண்ணைத்தான் கல்லுருவில் உருவாக்கியிருக்கிருன் சிற்பி. அந்தச் சிலை மூன்று அடி உயரமே இருப்பது காரணமாகத்தான் அது சிலை யென்று தீர்மானிக்க முடிகிறது. நாலு நாலரை அடி உயரத்தில் மட்டும் செதுக்கி யிருந்தானுனல் உயிரோடு ஒரு பெண்ணே அங்கு நிற்கிருள் என்று சொல்லி விடுவீர்கள். இப்படிக் கல்லாக நிற்கும்போதே, அவள் அங்கங்களில் துடிக்கும் உணர்ச்சி காரணமாகக் கொஞ்சம் கிட்டே சென்று, அவள் அங்கங்களைத் தொட்டுப் பார்த்து அவள் உண்மையில் கல்லில் செதுக்கிய உரு வந்தான் என்று நிச்சயித்துக் கொள்வீர்கள். இப்படிப் பட்ட ஒரு அருமையான சிலைதான் அங்கே நிற்கிறது. அதைத்தான் காணுகிறீர்கள் இங்கே வெளியிட்டிருக்கும் படத்திலே.

*

பார்க்கவேண்டிய முக்கியமான சிலையைப் பார்த்தாகிவிட்டது. இனிக் கொஞ்சம் சாவதானமாக அந்த வெளிப் பிரகாரத்தைச் சுற்றலாம். இந்தக் கோயிலில் உள்ளிருக்கும் மூர்த்தி வேணுகோபாலன். அந்த வேணுகோபாலனின் அமுத கீத வலையால் சுருக்குண்டு கோபியர் எல்லாம் நிற்பதாக எத்தனையோ கவிஞர்கள், கலைஞர்கள், சிற்பிகள் எவ்வளவோ காலமாகக் கனவு கண்டு வந்திருக்கிருர்கள். அப்படிக் கனவு கண்ட சிற்பி ஒருவன்தான் அவனது கனவை யெல்லாம் கல்லுருவில் நனவாக்கி, கோபாலனைச் சுற்றிக் கட்டிய பிரகாரத்திலே நிறுத்தியிருக்கிருன். சாவதானமாக எல்லாவற்

றையும் பார்த்துவிட்டு, நேரம் இருந்தால் ரங்கநாதனை யும் சேவித்துவிட்டுத் திரும்புங்கள். திரும்பும்போது இப்படிப்பட்ட ஒரு கலைப் பொருள் இருக்கும் இடத் தைக் காட்டிய என்னையும் கொஞ்சம் நினைத்துக் கொள்ளுங்கள் அது போதும் எனக்கு.

கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
 மடமயில்களோடு மான்பிணைபோல,
மங்கைமார்கள் மலர்க்கூந்தல் அவிழ,
 உடைநெகிழ, ஓர் கையால் துகில்பற்றி,
ஒல்கி, ஓடரிக்கண் ஓட நின்றனரே.

என்று அந்தப் பெரியாழ்வார் அன்று பாடியதெல்லாம் எவ்வளவு உண்மை என்பதை இன்று இங்கேயிருக்கும் பெண்ணுருவங்களில் இருந்தே தெரிந்துகொள்ளலாம். 'கோவிந்தன் குழலிசைக் கேட்டு கன்னியொரு மகள் மை யெழுதி இரு கண்ணும் எழுதுமுன் ஓடி வந்திருக் கிருள்.' வீணை ஏந்திய பெண் ஒரு மாடத்தில் என்ருல், கிளியொடு கொஞ்சும் கிளிமொழியாள் ஒரு மாடத்திலே. இப்படி ஒன்றல்ல இரண்டல்ல எட்டுப் பெண்கள், ஆம் பெண்மைதான் நிற்கிறது கல்லுருவிலே பல கோலங் களில்.

சிற்பி இப்படியே ஏழெட்டுப் பெண்களை மாத்திரந் தான் உருவாக்கி நிறுத்திவிட்டான் என்றில்லை. அவனுக்கு,

மதுசூதனன் வாயில் குழலின் ஓசை
 செவியைப் பற்றி வாங்க
நன்னரம்புடைய தும்புருவொடு
 நாரதனும் தம்தம் வீணை மறந்து
கின்னர மிதுனங்களும் தம்தம்
 கின்னரம் தொடுகிலோம் என்றனரே

என்ற பெரியாழ்வார் பாட்டும் தெரிந்திருக்கிறது. ஆத லால் வீணையேந்திய தும்புருவை ஒரு மாடத்திலும்

நாரதரை ஒரு மாடத்திலும் நிறுத்தி யிருக்கிருன். அவர்களும் தம்தம் வீணையை மறந்து நிற்பதை இன்றும் காணலாம் எல்லோரும். என்ன அழகான கற்பனை! ‘குழல் ஊதுகிருன் எல்லா உயிர்களுக்கும் நாயகனுகிய கோபாலன். அந்தக் குழல் இசையில் உலகமே நாணி, மயங்கி, நைந்து சோர்ந்து கிடக்கின்றது’ என்று. இந்த அழகான கற்பனைக்கு அற்புதமான விளக்கம் அல்லவா பெறுகிறோம் இந்த வேணுகோபாலன் கோயிலின் வெளிப் பிரகாரத்திலே. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அதி அற்புதமான சிலா உருவங்களை உடைய ஒரு சிறிய கோயில் உள்ளடக்கிக் கொண்டிருப்பதில் தானே என்னவோ, இந்த ரங்கநாதன் பதின்மர் பாடும் பெருமை பெற்றிருக்கிருன். அவனுடைய கோயில் பெரிய கோயில் என்று பெயர் பெற்றிருக்கிறது. அக் கோயில் உள்ள புனல் அரங்கமும், ‘தென்னுடும் வட நாடும் தொழநின்ற திருவரங்கம்’ என்றும் புகழப் பெற்றிருக்கிறது.



கங்காதரன்-திருச்சி

# 7

## கங்கை பிறந்தனள் கல்லிலே

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று பாடி வைத்தாள் ஔவை. அழகு இருக்கட்டும், ஆறில்லா ஊரின் வளம்தான் எப்படி இருக்கும்? ஒருநாட்டின் பசி பஞ்சம் பிணி எல்லாவற்றையும் போக்கி, வசியும் வள னும் பெருகத் துணை செய்வது அந்நாட்டில் ஓடும் நதி களே யல்லவா? கங்கையும் யமுனையும், காவிரியும் பொருநையும் நம் நாட்டில் பாய்ந்து பரவாவிட்டால் நம் நாட்டின் வளத்தைப்பற்றிப் பேச நமக்கு வாயுண்டா?

வற்றுது வளம் கொழிக்கும் இந் நதிகள் தாம் நம் நாட்டில் எப்படி உற்பத்தியாயின. ஒவ்வொரு நதிக்கும் ஒவ்வொரு கதை. நம் மூதாதையர் எவ்வளவு கற்பனை உள்ளம் படைத்தவர் என்பதற்கு இக் கதைகளே தக்க சான்றுகள். வடநாடு தாழ்ந்து தென் நாடு உயர்ந்து இருப்பதைச் சீராக்கிச் சமன் செய்யப் புறப்படுகிருர். "என்றுமுள தென் தமிழை இயம்பி இசை கொண்ட" தமிழ் முனிவர் அகத்தியர். கையிலே ஒரு குண்டிகை யுடன்தான் வருகிருர். தென் திசை நோக்கி, வரும் வழி யில் அந்தக் குண்டிகையைக் கீழே வைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஒன்றும் ஏற்பட்டது. இதுதான் தக்க சமயம்

என்று, ஒரு காகம் அக் குண்டிகையில் உள்ள நீரை அப்படியே கவிழ்த்து விடுகிறது. காகத்தால் விரிக்கப் பட்ட காவிரி பாய்ந்து பெருகத் தலைப்பட்டு விடுகிறது.

எண்திசையும், ஏழ்உலகும்
எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையினில் பொருவில்
காவிரி கொணர்ந்த

பெருமை அகத்தியர் உடையது என்றாலும், அதை விரித்த பெருமையை ஒரு காகம் தட்டிக்கொண்டு போய்விடுகிறது வெகு எளிதாக.

காவிரி பிறந்த கதை இது என்றால் கங்கை பிறந்த கதை இதைவிடச் சுவையானது. சகரர் ஆயிரம் பேர் முனிவர் சாபத்தால் வெந்து பொடி சாம்பலாகி விடுகின் றனர். அவர்கள் சாபம், வானுலக கங்கை மண்ணுல கிற்கு இறங்கி வந்தால்தான் தீரும் என்பது முனிவர் வாக்கு. சகரர் பௌத்திரன் பகீரதன் இந்தப் பிரயத்த னத்தில் இறங்குகிறான். அடே அப்பா, இந்தப் பகீரதன் தான் இதற்காக யார் யாரை யெல்லாம் நோக்கி எப்படி எப்படியெல்லாம் தவம் செய்ய வேண்டியிருக்கிறது! பகீரதன் தவத்திற்கிரங்கி, கங்கையை அனுப்பக் கடவுளும் இசைந்து விடுகிறார். கங்கா தேவியுமே புறப் படத் தயாராகி விடுகிறாள். அவள் வந்து பெருகி நிற்க சகரர் வெட்டிய சாகரம்கூடத் தயாராகிவிடுகிறது. ஆனால், அவள் வானின்று இறங்கும்போது அவள் வேகத்தைத் தாங்கவேண்டுமே, அது யாரால் முடிகிற காரியம். மறுபடியும் புறப்பட்டான் பகீரதன் தவம் செய்ய. சிவபெருமானையே நோக்கித் தவங்கிடந்தான். அவரும் விழுகிற கங்கை என் தலையிலேயே விழட்டும், பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி விடுகிறார். பகீரதப் பிரயத்தனமும் வெற்றி பெற்றுவிடுகிறது. 'ஹோ' என்று ஆங்காரத்துடன்தானே குதிக்கிறாள்

கங்கை. ஏற்கிறார் முடியில் அவளை இறைவனும். அவள் கர்வத்தை அடக்க, தன் ஜடாமகுடத்துக் குள்ளேயே அமுக்கி வைத்துக் கொள்கிறார் அவர். பகீரதன் செய்த எல்லா முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகிறது. துவங்குகிறான் மறுபடியும் தன் தவத்தை. கடைசியில் பகீரதன் தவத்திற்காக ஐயோ என்றிரங்கி, சடையிலிருந்து கங்கையை வழியவிடுகிறார் ஏழு கூறாக இந்தச் சிவபெருமானும். சகரர்கள் பெற்றனர் சாப விமோசனம். கங்கையைப் பெற்றனர் மக்கள். பார்வதிக்கும் கிடைத்துவிட்டாள் ஒரு சக்களத்தி அன்று முதல். கங்கை பிறந்த கதை இது. இறைவனது அருளால் வந்தவள் கங்கை; அவள் வருகையால் புனிதமுற்றது நாடு என்பதுதானே இக்கதையின் சாரம்.

இதைத்தானையா பாடினார்கள், பாடினார்கள் புலவர்கள் பண்டிதர்கள் எல்லாம். 'கங்கையென்னும் கடவுள் திருநதி' என்று பாடிய கம்பரே, தாம் பிறந்த சோழ நாட்டின் காவிரியையும் மறந்துவிடாமல், 'தெய்வப் பொன்னியே பொருவும் கங்கை' என்று நாவாரத் துதிக்கிறார்.

> பொங்கு திரைகளும் நொங்கு நுரைகளும்
> பூக்களினங்களும் தாங்கிவரும்—அந்தக்
> கங்கை மகள் நடம் ஆடிவரும்

காட்சியைக் கண்டு கண்டு களித்தவரும், பாடிப்பாடி மகிழ்ந்தவரும் எண்ணிறந்தவர். இதனைப் பாடாத புலவன் இல்லை, தீட்டாத ஓவியன் இல்லை, செதுக்காத சிற்பி இல்லை நம் நாட்டில்.

* * *

தென்னிந்தியாவில்—ஏன்—இந்தியாவின் எல்லா இடங்களிலும் அனேகமாய் எல்லோர் வீட்டிலுமே,

ஒரு படம்,-அந்தக் கங்காவதார மகிமைப் படம், தொங்கிக்கொண்டிருப்பதை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். பள்ளியில் படித்த கதை, பண்டிதர்கள் சொன்ன கதையெல்லாம் நினைவுக்கு வரத்தான் செய்யும். அப்போது ஓகோ, இவர்தானு சிவபெருமான்? இதோ நிற்பவன் தானு பகீரதன்? இங்கே நிற்கிருளே அவள்தானு கங்கை? என்று அதிசயிக்கிறோம் நாம். ஆனுல், எனக்கு மட்டும் இந்தப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு சிரிப்பு பொங்கிக்கொண்டு வருகிறது என் உள்ளத்தில் இருந்து. (ஆம், கங்கை பொங்குவது போல் அல்ல) சிவபிரான் நிற்கிற தலைவிரி கோலம் stand at ease posture என்பார்களே, அதே போலக் கால்களை அகற்றிக்கொண்டு, இடுப்பில் இரு கைகளையும் வைத்து, ஒரு மேடைமீது அவர் நிற்கும் தோரணை; வானத்தையே அண்ணாந்து பார்த்து நிற்கும் அந்தப் புஜங்காசன மகிமை—இதையெல்லாம் பார்த்தால் சிரிப்பு வராமல் என்ன செய்யும்? சக்களத்தியை வரவேற்க நிற்கிருளே அந்தப் பார்வதி, நல்ல சரியான உயரமும், கட்டுமஸ்தான தேகமும் உடையவளா யிருக்கிருள். அருமையான காஞ்சீபுரம் பட்டுப் புடவையைக் கொசுவம், தார் எல்லாம் போட்டுக்கட்டி, திருகிமுடித்த கொண்டையில் பிறை வடிவத்தில் மலர்க் கொத்தொன்றைச் சூடி, திரண்டு உருண்டு நிற்கும் அந்தப் பழையகோட்டைப் பட்டக்காரர் வளர்த்து வாலிபம் ஆக்கிய காளையின் (ஆம் நந்திதான்) மேல் சாய்ந்துகொண்டு லாவகமாய் நிற்கும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சிதான். அந்த அப்பாவிப் பகீரதனே இத்தனை கடுந்தவத்தாலும் கொஞ்சமும் மெலியாமல் கூப்பிய கையுடன் கும்பிட்டு வாழும் கூட்டத்தில் சேர்ந்தவன் நான் என்று பறைசாற்றிக்கொண்டே நிற்கிருன். கங்கையோ கொஞ்சங்

கூடக் கர்வத்தைக் காட்டாமல் வான் கிழித்து ஒழுகும் தண்ணீரோடு தண்ணீராய்க் கண்ணீரையும் வடித்துக் கொண்டே விண்ணிடை இருந்து தாவி வருகிருள். இந்த இருபதாம் நூற்ருண்டின் இந்தியச் சித்திரத்தைப் பார்த்தபோது—படத்தைப் பார்த்து முடித்தபோது, கங்கை பிறந்த அந்தப் பழைய கதை நினைவை விட்டகன்றுவிட்டால் அது அதிசயம் இல்லைதான்.

சரி. இது கிடக்கட்டும். அந்தப் பழைய காலத்திற்கே போவோம். தமிழ் நாட்டில் கலை வளர்த்த அந்தப் பல்லவ அரசர்களையே பார்ப்போம். அவர்கள் ஆதரித்த சிற்பிகளை இந்தக் கதை எப்படிக் கவர்ந்திருக்கிறது, எப்படி அவர்கள் உள்ளத்தில் இந்தச் சித்திரம் உருவாகி இருக்கிறது, அப்படி உருவாகிய சித்திரமும் அவர்களின் சிற்றுளி முனையிஞல் எப்படி வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் தெரிந்துகொள்ளப் பல்லவ சாம்ராஜ்யத்தில் புகழ் பெற்றிருந்த மாமல்லபுரம், காஞ்சி, திருச்சிராப்பள்ளி முதலிய தலங்களுக்குக் கட்டுச் சோற்றுடன் ஒரு நடை கட்டித்தான் ஆகவேண்டும்.

மாமல்லபுரத்துப் பாறைகளில் செதுக்கப்பட்டு ஒற்றைக் காலில் தலைக்குமேல் கைகளை உயர்த்தித் தொழுதுகொண்டு சடையும் முடியுமாக நிற்பவன் யார்? என்ற விவாதம் இப்போது அநேகமாய் ஓய்ந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும். பஞ்ச பாண்டவ ரதங்கள் என்று அங்குள்ள கற் கோயில் களுக்குப் பெயரிட்ட காரணத்தால்தானே என்னவோ இந்தக் காட்சியையும் அருச்சுனன் தவம் என்றே தீர்மானித்துவிட்டார்கள் பலர். இல்லை. பல்லவர் தீட்டிய சிற்பத்தில் எல்லாம் இந்தப் பகீரதன் தவம் சிறப்புப் பெற்றிருக்கிறது என்று தெரிந்தும், மற்ற ஆராய்ச்சியாளர் துணையைக் கொண்டும் இந்தக்

காட்சி பகீரதன் தவக் காட்சியே என்று தீர்மானமாக உரைத்துவிட்டார்கள் அறிஞர்கள், இன்று. காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில்களிலும் இந்தக் கங்கை பிறந்த கதை கல்லில் உருவாகி இருக்கத்தான் செய்கிறது. இங்கெல்லாம் பகீரதன் முதன்மை பெற்றிருக்கிருன்.

* * *

கங்கை பிறந்த கதையில் யாருக்கு முதலிடம் இருக்கவேண்டும். கங்கைக்கா, பகீரதனுக்கா? அல்லது அந்தக் கங்காதரனுக்கே தானு? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறது ஒரு சிற்பம். கங்கை யாருடைய அருளினுலே இந்தப் பூமியில் பிறந்தாள்? யாருடைய ஆற்றலினுலே அவள் பூமியில் இறங்குவதைத் தாங்கமுடிந்தது? யாருடைய சடா மகுடத்திலே அன்றுமுதல் இன்றுவரை வீற்றிருந்து கொண்டு நாட்டை வளம் பெறச் செய்வதுடன் தேசத்தையே புனிதமாக்கிக் கொண்டிருக்கிருள்? எல்லாம் அந்தக் கங்காதரன் அருளினுல்தானே. அந்தக் கங்காதரனே உருவாகிருன் கல்லில், பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் வெட்டிய திருச்சி மலைக் கோட்டையிலே. இந்தக் காட்சியைக் காண்பதற்கு முதலில் காலில் கொஞ்சம் மூளை வேண்டும். 'அனு பவிக்கத்தான் அந்த மேல்மாடியிலேயே கொஞ்சம் வேண்டுமே அது. திருச்சி மலைக்கோட்டையின் படிகளில் கால்கடுக்க ஏறவேண்டும். தாயுமான சுவாமியை வலம் வந்து வணங்கிவிட்டு, தந்தைக்கும் தாய்க்குமே அருமையான பிள்ளை, அந்த உச்சிப் பிள்ளையாரைத் தரிசிக்கப் புறப்பட வேண்டும். மணிமண்டபம் பக்கம் போனதும் கொஞ்சம் வடக்கே திரும்பி, கேட்பாரற்று கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஒரு மண்டபத்தை—கல்லில் வெட்டிச் செதுக்கிய

மண்டபத்தைத் தான் பார்க்கவேண்டும். பார்த்தால் கங்காதரன் காட்சி கொடுப்பான்.

கங்கை தன் சிறுமையை உணர்ந்து ஒடுங்கி அடங்கிக் கூப்பிய கையுடன் சடையில் ஒரு நுனியில் ஒதுங்கி விடுகிருள். இத்தனை கதைக்கும் காரணமாய் இருந்த அந்தப் பகீரதன்கூடக் கொஞ்சம் பின் பக்கமாகவே மறைந்து கொள்ளப் பார்க்கிருன். கங்காதரன் மட்டும் முயலகன் தலையில் ஒரு காலையூன்றியும், ஒரு கையை இடையிலே பொருத்தியும் கம்பீரமாக எழுந்து நிற்கிருன். கழுத்தைச் சுற்றிக் கிடக்கும் அந்த அரவாபரணம் அவனுக்கு ஒரு அழகையே கொடுக்கிறது. தலைக்குமேலே, அந்தச் சடை முடிக்கும் மேலேயே ஒரு கிரீடம் வேறே நீண்டுயர்ந்து நிற்கிறது. கங்கை பிறந்தனள் என்னும் குதுகலத்தில் தேவர்கள் களிநடம் புரிகிருர்கள். நால்வர் நடுவில் நடராஜனும் கங்காதரனுகக் காட்சி கொடுக்கிருர். எல்லாம் Bas Relief என்று சொல்லப் படும் கற் பாறையில் செதுக்கிய அர்த்த சித்திர சிற்ப வடிவில்த்தான்.


பிறவாப் பெருமையுடைய அந்தக் கங்காதரனையே சிற்பி பிறக்கவைக்கிருன் கல்லிலே! அந்த இறவாப் புகழுடைய சிலை உருவத்தைத்தான் இங்கேயுள்ள படத்தில் காண்கிறீர்கள். நேரில் காண விரும்புவோர், நேரே ஒரு நடையே கட்டுங்கள் அந்தத் திருச்சி மலைக் கோட்டையை நோக்கி. விரும்பாதார், முடியாதார் இங்கே வெளியிட்டுள்ள படத்தைப் பார்த்தேனும் திருப்தி அடையுங்கள்.

# 8

## கனல் பிறந்தது கல்லிலே

இந்தப் பூமியில் வாழப் பிறந்தவன் மனிதன். எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களாக அவன் வாழ்க்கை மேலும் மேலும் அபிவிருத்தி அடைந்து கொண்டே வந்திருக்கிறது. வாழ்வின் தேவை அதிகப்பட அதிகப்பட அவனுடைய அறிவும் கூர்மையாகிக் கொண்டே வந்திருக்கிறது. புதுப்புது விஷயங்களைக் கண்டு பிடிக்கவும் சாத்தியமா யிருந்திருக்கிறது அவனுக்கு. அப்படி அவன் வாழ்நாளில் கண்டு பிடித்த பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்த பொருள் நெருப்பு—கனல் ஆகும்.

பூர்வ காலத்து மனிதன் கல்லிலும் மரத்திலும் ஆயுதங்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறான். மரங்களைக் கட்டித் தோணியாக்கிக் கடலைக் கடந்திருக்கிறான். கடலில் உள்ள மீனையும், கரையில் உள்ள இலைகளையும் தின்று ஜீவித்திருக்கிறான். ஆனால் நெருப்பு என்ற ஒன்றை அறிந்த பின்புதான் தனக்கு வேண்டியபோது வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும் தானே உண்டாக்கிக் கொள்ளக் கற்றிருக்கிறான். அதன்மூலம் தன் உணவைச் சமைத்துச் சாப்பிடவும் தெரிந்திருக்கிறான்



வீரபத்திரன்-கிருஷ்ணபுரம்

என்றெல்லாம் சொல்லுகிருர்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆம், வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்ருகிய இந்த நெருப்பு எங்கே பிறந்தது. எப்படிப் பிறந்தது?

எங்கோ, எப்போதோ, எவனே ஒருவன் ஒரு கல்லை எடுத்து இன்னெரு கல்லின் மேல் ஆங்காரத்தில் விட்டெறிய, அந்தக் கல்லிலிருந்து பொறி பறக்க, அந்தப் பொறி பக்கத்தில் இருந்து உலர்ந்த தழையில் பற்றி நெருப்பை உண்டாக்கிற்று என்று கதை. சரிதான். கல்லிலே 'பிறந்து விட்டது கனல்' அந்தக் கனல் பிறப்பதற்குக் காரணமாயிருந்தது ஆங்காரம் அல்லது கோபம் என்றறிகிருேம்.

*   *   *

கல்லிலே கனல் பிறந்த கதையைத் தெரிந்து கொண்டோம். சொல்லிலே கனல் பிறக்கும் அதிசயத்தையும்தான் பார்ப்போமே. தக்ஷன் சிவபிரானின் சாக்ஷாத் மாமனர். தாக்ஷாயணியாகிய பார்வதி தேவியின் தந்தை. மாமனருக்கும் மருமகனுக்கும் ஏதோ மனஸ்தாபம். மாமனர் தம்முடைய கோபத்தைக் காட்ட சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார். பெரிய யாகம் ஒன்றைச் செய்ய ஆரம்பித்தார், மகளுக்கும் மருமகனுக்கும் அழைப்பு அனுப்பாமலேயே. மகள் தன் கணவனுக்காகத் தன் தந்தையிடம் சென்று வாதாடினுள். பலன் இல்லை. யாக குண்டத்திலேயே பாய்ந்து உயிர் துறந்தனள் தாக்ஷாயணி. தன்னை அவமதித்தது காணுது என்று தன் மனைவியின் உயிரையும் வாங்கிவிட்ட மாமனர் பேரில் மருமகன் கொதித்து எழுந்தார். அவருக்கோ கோபம் வந்தால் என்ன செய்வார் என்றுதான் தெரியுமே. மூடியிருந்த நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டார். அந்தக் கண்களிலே இருந்து பிறந்தார் வீரபத்திரர். தக்ஷனையும் அவன் செய்த யாகத்தையும் அழித்து எல்லோரையும்

நிர்மூலமாக்கி விட்டார். இது புராணக் கதை. கோபம் பிறந்தது கண்ணிலே; அந்தக் கண்ணிலே பிறந்தார் வீரபத்திரர். கோபாக்கிராந்தரான வீரபத்திரர் எப்படி எழுந்தார். அதைச் சொல்கிருர் ஒரு கவிஞர்.

பார்த்த திக்கினில் கொடுமுடி ஆயிரம் பரப்பி
சூர்த்த திண்புயவரை இரண்டாயிரம் துளக்கி
போர்த்த தாள்களில் அண்டமும் அகண்டமும் பெயர
வேர்த் தெழுந்தனன் வீரரில் வீரரில் வீரன்

வீரன் கண்களில் வீசும் பொறி ஊழி வெங் கனலையும் எழுப்பிய காட்சியை யெல்லாம் வர்ணிக்கிருர் அவர். வீரபத்திரனின் கோபத்தை எதிர் நோக்கி நிற்க வலியில்லாமல் உலகம் மட்டுமா அதிர்கின்றது, இல்லை அண்டமே அதிர்கின்றது. அதிர்கின்ற சப்தம் நம் காதுகளிலேயும் கேட்கின்றது.

மலையதிர்ந்தன, மாதிரம் அதிர்ந்தன, வான
நிலை அதிர்ந்தன, வீரர்கள் அதிர்தலும் நெடுநீர்
அலை அதிர்ந்தன, மகம் செய்யும் மயன் மகன் குடுமித்
தலை அதிர்ந்திட அதிர்ந்தன வானவர் தொகுதி

என்றெல்லாம் கோப வெறியையும், அதன் பலனையும் எழுதி எழுதிக் காட்டுகிருர் கவிஞர். இந்தப் பாக்களைத் திரும்பத் திரும்பப் படித்தால் வார்த்தைகள் கனலைக் கக்கும் அதிசயத்தையே பார்ப்போம். ஆம் கல்லிலே மட்டும் கனல் பிறக்கவில்லை. சொல்லிலேயும் கனலைப் பிறக்க வைக்கும் சக்தியைத் தமிழர்கள்-தமிழ்க் கவிஞர்கள் பெற்றிருந்தார்கள் என்று அறிவோம்.

இப்படிச் சொல்லிலே பிறந்த கனலையும், கல்லிலே பிறந்த கனலையும், வேறு ஒரு முறையிலே கல்லிலே காட்டும் ஆற்றல் பெற்றிருந்தான் தமிழ் நாட்டுச் சிற்பி, ஒருவன். அவனுக்கு வீரபத்திரன் கதை தெரியும், அவன் பிறந்த கதை, வளர்ந்த கதை, மயன் மகனை முடித்த கதையெல்லாம் அவனுக்குத் தெரியும். தான்


அறிந்த அத்தனையையும், அடைந்த அனுபவம் அத்தனையையும் நல்ல கருங்கல்லிலே மொழி பெயர்த்து விடுகிறான் அவன். அப்படி அவன் செய்து அமைத்த மொழிபெயர்ப்புத்தான் இன்று திருநெல்வேலி ஜில்லாவில் கிருஷ்ணாபுரத்தில் திருவேங்கடநாதன் சன்னிதியில் நின்றுகொண்டிருக்கிறது கற் சிலையாக. தமிழ் நாட்டில் உள்ள எத்தனை எத்தனையோ கோயில்களில் வீரபத்திரன் சிலை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அங்கெல்லாம் வீரபத்திரனுக்குப் பதில் கோரபத்திரனையே உருவாக்கி யிருக்கிறார்கள் சிற்பிகள். புராணங்களில் சொல்லப்பட்டுள்ள ஐதீகங் களுக்கு மாறுபடா வகையில் சிலைகள் இருக்கலாம், ஆனால் அவனுடைய முகத்தில் வீரமும் கோபமும் ஒருங்கே தாண்டவமாடும் காட்சியை நாம் கிருஷ்ணா புரத்தில் உள்ள சிலையிலேதான் காண்கின்றோம். வலக் கையிலே கேடயத்தை லாகவமாக ஏந்தி, இடக் கையிலே உள்ள தோமரத்தைத் தரையிலே நன்றாக ஊன்றி, நடனக் கோலத்தில் காட்சி அளிக்கும் கம்பீரத்தைப் பார்க்கும் போது அது கற்சிலை என்பதையே மறந்து விடுகின்றோம். வீரத் திருவிழிப் பார்வையும், அதற்குரிய தீரத்தையும் காட்டும் முறுக்கு மீசையும், வீர பத்திரனின் வீரவாழ்க்கைக்கே சான்றாக அமைந்து விடுகின்றது. அடடா, அவனுடைய தலையணியில்தான் எத்தனை முத்துக்கள், வைரங்கள், அரையிலும் மேலும் போட்டிருக்கும் ஆபரணங்கள் தான் எத்தனை !

* * *

சோழ நாட்டிலே மாயூரத்திற்குக் கிழக்கேயுள்ள பரசலூர் என்னும் பறியல் ஊரிலே, இதே வீரபத்திரன் உருவாகி இருக்கிறான். திருப்பறியலூர் அட்ட வீரத் தலங்களில் ஒன்றல்லவா. இங்குதானே வீரபத்திரன் உதித்து தக்ஷயாகத்திற்கு வந்திருந்த மயன் முதலிய

விண்ணவர்களின் தலையை எல்லாம் பறித்தான் என்பர். இங்கு செப்புசிலை வடிவில் வீரபத்திரன் எட்டுக் கைகளோடு உருவாகி இருக்கிறன். சோழர் காலத்துச் செப்புச் சிலை அல்ல என்றாலும், வெகு காலத்துக்கு முன்னேயே உருவாகி இருக்க வேண்டும். ஏதோ சோழ மன்னர்கள் காலத்திலே இச்சிலை வடிக்கப் பெற்றிருந்தாலும். இச்சிலையை சிறப்பாகக் கல்லில் உருவாக்கியவர்கள் எல்லாம் நாயக்க மன்னர்களே. கும்பகோணத்தில் கும்பேசுரர் சந்நிதியில் ஒரு தூணில் இவன் உருவாகி இருக்கிறன். தக்ஷனை தன் காலின் கீழ் கொடுத்து மடக்கி தலையையே சீவும் நிலை மிக்க பயங்கரமானதொன்றே. அதில் வீரபத்திரன் கைஒடிந்து கிடப்பது வருந்தத்தக்கதே. இந்த நிலையில் சிலை இருப்பதால் கிருஷ்ணபுரத்துச் சிலைக்கு ஈடுகொடுக்க இந்தச் சிலையால் இயலாது போய்விடுகிறது.

கனல் உமிழ் கண்ணுடன் உருவாகி உள்ள கிருஷ்ணபுரத்துச் சிலைக்கு ஒத்த அழகும் பெருமையும் உடைய சிலை ஒன்று திருநெல்வேலி ஜில்லாவிலேயே உண்டு. அச்சிலை இருப்பது தென்காசி விசுவநாதர் கோயிலிலே. தக்ஷயக்யத்திற்கும் சிவபிரானுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாத, திருவேங்கடநாதன் சந்நிதியிலேயே, இவனை அழகாக உருவாக்கி நிறுத்தினர்கள் நாயக்க மன்னர்கள் என்றால், அவனை சும்மாவா விடுவார்கள் விசுவநாதன் சந்நிதியிலே. கம்பீரமான தோற்றத்திலே கலை வளர்க்கும் சிலைவடிவாக உருவாக்கி நிறுத்தியிருக்கிறர்கள் தூணிலே. அங்குள்ள ஊர்த்துவ தாண்டவர், காளி, வேணுகோபாலன், மன்மதன் ரதி எல்லாம் பார்க்கவேண்டியவர்களே ஆதலால் தென்காசிக்கே ஒரு நடை செல்லலாம். நல்ல சிற்ப வடிவங்களைப் பார்ப்பதோடு, வீரபத்திரனுக்குமே ஒரு வணக்கம் செலுத்தித் திரும்பலாம்.



வீரன் தூக்கிச்செல்லும் பெண்-கிருஷ்ணபுரம்

9

# கல்லிலே கலிங்கம்

சோழ மன்னனது அரசவை. மந்திரி, பிரதானிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், கவிஞர் பெருமக்கள், குறையே இல்லாத பொதுமக்கள் எல்லாம் நிறைந் திருக்கின்றனர். அங்குத் தமிழ் மூதாட்டியாம் ஔவைப்பிராட்டியும் வந்து சேருகிருள். அவளை அரசன் எதிர்கொண்டழைத்துத் தக்கதொரு ஆசனத் திருத்தி உபசரணைகள் எல்லாம் செய்கிருன். இந்தச் சமயத்தில், சீன நாட்டிலிருந்து இரண்டு வர்த்தகர்கள் வருகின்றனர், இரண்டு பெரிய மூட்டையுடன். மூட்டை ஒவ்வொன்றிலும் உயர்ந்த பட்டாடைகள் சிறந்த நூற் புடவைகள் எல்லாம் இருக்கின்றன. இவற்றை எல்லாம் அரசனிடம் காட்டிச் சிறந்த பரிசுகள் பெறவே வந்திருக்கின்றனர் அந்த வியா பாரிகள். அரசனும், அவர்கள் கொண்டு வந்த பட்டாடைகளைப் பார்க்க விரும்புகின்ருன். வியாபாரி களும் ஒவ்வொன்ருய் எடுத்துக் காட்டுகிருர்கள். என்ன என்ன விஸ்தாரங்கள், எவ்வளவு எவ்வளவு சிறந்த சரிகை வேலைப்பாடுகள்! துணிகளின் மென்மை

தான் என்ன ! அழகு வாய்ந்த சிலவற்றைப் பொறுக்கி எடுத்து விலை கேட்டான் அரசன். வியாபாரிகளும் கொஞ்சமும் கூசாமல் நூற்றுப் பத்தாயிரம் பொன் என் ருர்கள். எண்ணிப் பார்த்தால் அவ்வளவு விலை பெறும் என்றுதான் தோன்றிற்று அரசனுக்கு.

ஆனுல் அங்கு வந்திருந்த ஔவைப்பிராட்டியோ, 'அரசே! நானும் ஒரு பொருள் கொண்டு வந்திருக் கின்றேன், உனக்காக. உன்னிடம் அவைகளை விற்றுப் பணம் பெற அல்ல, உனக்கு அணிவித்து மகிழ்விக் கத்தான்' என்று சொல்லி நிறுத்தினுர். அரசனும் ஏது இந்த அம்மையுமே பட்டாடை வியாபாரத்தில் இறங்கி விட்டாளா என்று அதிசயிப்பதற்குள், தொடர்ந்தே சொன்னுர். 'நான் பட்டு கொணரவில்லை, பாட்டு கொணர்ந்திருக்கிறேன். உன் முன் இருக்கிறதே அவை, விலை உயர்ந்த பட்டாடைகள், நூற் சீலைகள். அவை களுக்கும் என் பாட்டிற்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். அதைக் கேள் அகளங்கா!' என்று சொல்லிக்கொண்டே பாட ஆரம்பித்து விட்டாள். அவள் பாடிய பாட்டு இதுதான்

நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும், நூற்சேலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்து விடும்—மாற்றலரைப்
பொன்றப் பொரு தடக்கைப் போர் வேல் அகளங்கா!
என்றும் கிழியாது என் பாட்டு

என்று ஒரு போடு போட்டாள். அவ்வளவுதான் அர சனும் சபையோரும், அசந்து விட்டனர், பட்டுப் புடவை வியாபாரம் அன்று நடக்கவில்லை. வியாபாரி களும் நடையைக் கட்டி விட்டனர், அரசவையி லிருந்து.

ஆனுல் பல வருஷங்கள் கழிந்தன. இந்த ஔவையார் பாட்டை ஒருவன் படித்தான். அவனுக்கு

அந்த நூற் சேலை வியாபாரிகளிடம் ஒரு அனுதாபம் பிறந்தது. ஔவையாரை மட்டந்தட்ட வேண்டும் என்றும் தோன்றிற்று. என்றும் கிழியாத பாட்டைப் பாடி பெருமை அடையும் ஔவையையும் தோற்கடிக்கும் வகையில் என்றும் அழியாத கலிங்கத்தை ஆக்கி உலகுக்கு அளித்து நெசவாளர்களுடைய பெருமையை எல்லாம் நிலைநிறுத்தி விடுகிறேன் என்று மார் தட்டினான். அப்படி மார் தட்டியவன் ஒரு தமிழ் நாட்டுச் சிற்பி.

அவன் ஒருநாள் மாலைப் பொழுதில் ஊர்ப்புறத்தில் உலாவப் புறப்பட்டான். போகிற வழியில் ஒரு பெரிய பாறை, அந்தப் பாறையிலே இயற்கையிலேயே அமைந்த சிவந்த ரேகைகள். கருங்கல்லில் ஓடும் செவ்விய ரேகைகளைக் கண்டவுடனே அதனைச் சுற்றிச் சுற்றியே இவன் எண்ணம் ஓடிற்று, இந்தக் கற்பாறை மூலமாய் ஒரு கற்பனை உருவாயிற்று. கற்பனை இதுதான்.

சோழ நாட்டிலே ஒரு அரசிளங்குமரி. அடுத்துள்ள பாண்டிய நாட்டிலே ஒரு வீரன். ஊழ்வினை வசத்தால் எடுப்பாரும் கொடுப்பாரும் இன்றி இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர், காதல் கொள்ளுகின்றனர். காதல் வளர்கிறது. ஆனால் இரண்டு நாட்டிற்கும் தீராப்பகை, அதனால் சோழ நாட்டு அரசிளங்குமரியைப் பாண்டிய நாட்டு வீரன் மணம் முடிப்பது என்பது இயலாத காரியமாக இருந்தது. இருந்தாலும் உண்மைக் காதலுக்கு ஏது இந்தத் தடைகள் எல்லாம்? காதலர் இருவரும் ஏற்பாடு செய்து கொண்டபடி, அரசிளங்குமரியை அவள் தன் கட்டுக் காவலில் இருந்து கவர்ந்து வீரன் கூட்டிச் சென்று விடுகிறான். செய்தி தெரிந்து விடுகிறது சோழநாட்டு வீரர்களுக்கு. பாண்டிய நாட்டு வீரனை மடக்கி மங்கையை மீட்க

முனைந்து வருகிறார்கள்; அதற்கென குதிரைகளிலே ஏறி பாண்டிய நாட்டு வீரனைப் பிடிக்க விரைகிறார்கள். வீரனோ அரசிளங்குமரியையும் இழுத்துக் கொண்டே செல்ல வேண்டியிருக்கிறது. அவளாலோ விரைந்து நடக்க முடியவில்லை. ஆதலால் அவளை அப்படியே தன் தோளின்மேல் ஏற்றிக் கொள்கிறான். அவளைச் சுமந்து கொண்டே ஓடுகிறான். சோழ நாட்டின் எல்லையைக் கடந்து, பாண்டி நாட்டிற்குள் நுழைந்துவிட்டால் சோழநாட்டு வீரர்களால் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? எல்லை நெருங்குகிறது. அதற்குள் நெருங்கி விடுகிறார்கள் சோழ மன்னனின் வீரர்கள். குதிரையிலிருந்தே நீண்ட ஈட்டியை ஓடும் வீரனின் விலாவில் பாய்ச்சுகிறார்கள். ஈட்டி பாய்ந்த இடத்தில் இரத்தம் பெருகுகிறது. பாண்டியநாட்டு வீரனோ பகையரசனின் வீரர்களோடு போரிட்டு அவர்களை யெல்லாம் வெல்லக் கூடியவன்தான். என்றாலும் தன்னுடன் வந்திருக்கும் அரசிளங்குமரியைச் சோழ நாட்டின் மண்ணிலே இறக்கிவிட விரும்பவில்லை. ஆதலால் விரைந்தே நடந்து பாண்டிய நாட்டு எல்லையைச் சேர்ந்துவிடுகிறான். வெற்றி அவனுக்கே. இந்த நிலையில் வீரனின் தோள்களில் ஆரோகணித்து இருக்கும் அரசிளங் குமரிக்கோ ஒரே மகிழ்ச்சி. காதலனுடன் சென்று அவனுடன் இன்ப வாழ்வு நடத்தப் போகிறோம் என்ற நினைவில் உள்ளத்தில் எழும் பூரிப்பு முகத்திலேயே பிரதிபலிக்கிறது.

இவ்வளவும் உண்மையாய் நடக்கவில்லை. நடந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணினான் கலைஞன். தான் கண்ட பாறையை வெட்டிச் செதுக்கிச் சிற்றுளி வேலையின் நயம் எல்லாம் காட்டினான். கல்லிலே உருவாகி விட்டார்கள் கன்னி, காதலன், சோழநாட்டு வீரர்கள், அவர்கள் குதிரைகள், அவர்கள்

ஏந்திய ஈட்டிகள் எல்லாம். பாறையில் கண்ட சிவப்பு ரேகைகள், வீரனின் விலாவில் வடியும் இரத்தப் பெருக் காக அமைந்து விடுகிறது. கல் உயிர் பெற்று விடு கிறது.

இவ்வளவோடு திருப்தியடையவில்லை சிற்பி. என்றும் கிழியாது என் பாட்டு என்று வீராப்புப் பேசினுளே அன்னை ஔவை அவளுக்கு நான் சளைத் தவன் அல்ல என்று காட்ட விரும்பினுன். வீரனின் தோள்களில் இருக்கிருளே அரசிளங் குமரி அவள் அரண்மனை சுகபோகத்திலேயே வாழ்ந்தவள். 'மண் மகள் அறியாவண்ணச் சீரடி' உடையவள். அவளால் சூரிய வெப்பத்தை எல்லாம் தாங்க முடியுமா? ஆதலால், வீரன் தூக்கிக் கொண்டு ஓடும்போதும் தன் மேல் வெயில் விழாதவாறு தன் முன்தானையைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துக் கொள்கிருள். அது அவளுக்கு நிழல் தருகிறது. அந்தக் கலிங்கமோ தமிழ் நாட்டு நெசவாளர்களிடம் வாங்கியது. மென்மையோ கேட்க வேண்டியதில்லை. இந்த நிலையையும் உருவாக்கி விடுகிருன் சிற்பி. மங்கையின் தலைமேலே விரிகிறது கையால் நெய்த கலிங்கம். ஆம். கையால் நெசவு செய்த கலிங்கம்தான் கல்லிலே உருவாகிறது. கல்லிலேயே கலிங்கத்தின் மென்மையை எல்லாம் காட்டி விடுகிருன் கலைஞன். இந்தக் கலிங்கம் நல்ல நூற் சேலை. நாற்றிங்கள் நாளுக்குள் நைந்து விடவில்லை. நானூறு வருஷங்களுக்கு மேலாக நையாமல் அழியாமல் நின்று கொண்டிருக்கிறது. இது நம் நாட்டுச் சிற்பிகளுக்கு மட்டும் பெருமை தருவதோடு அமையாமல், நம் நாட்டு நெசவாளர்களுக்கும் பெருமை தருவதாக அமைகிறது.

இந்த அற்புதமான சிலை இருப்பது திருநெல்வேலிக் குக் கிழக்கே, எட்டு மைல் தூரத்தில் உள்ள கிருஷ்ண

புரத்து திருவேங்கடநாதன் சந்நிதியில். வசதி உடைய வர்கள் எல்லாம் சென்று காணலாம். மற்றவர்கள் பக்கத்தில் உள்ள படத்திலாவது கண்டு மகிழலாம். இக் கோயிலுக்குச் சென்ருல் இந்தச் சிலையை மட்டு மல்ல இன்னும் சில நல்ல சிலாவடிவங்களையுமே காண லாம். பிரதான கோயிலின் முகப்பிலே ஒரு மண்டபம். ரங்க மண்டபம் என்று பெயர். அந்த மண்டபத்தின் முகப்பிலே ஆறு தூண்கள். அந்தத் தூண்களில் ஒன்றில்தான் மேலே விவரித்த கலிங்கம்" ஏந்தியப் பெண்ணும் அவள் தன் காதலனும் உருவாகி இருக்கி ருர்கள். மற்றைய தூண்களிலே, பாசுபத அஸ்திரம் பெறத் தவக்கோலம்பூண்ட பார்த்தன். அவனேடு தீராப்பகைமை கொண்ட, அந்த அங்க தேசத்து மன்னன் புகழ்பெற்ற கொடையாளி கர்ணன், இன்னும் இரண்டு பெண்கள் எல்லாம் நிற்கிருர்கள். பாசுபதம் பெறப் பல மாதகாலம் ஊணுறக்கம் இன்றி, கைலை நாதனை நோக்கித் தவம் செய்தவன் அல்லவா? ஆதலால் தாடி, சடை எல்லாம் நீண்டு வளர்ந்திருக் கிறது அருச்சுனனுக்கு. ஆனுல் அவன் முகத்திலே ஒரு வசீகரமான களை. பெருந்தவசிகளுக்கு இருக்க வேண்டிய சாந்தம் பொறுமை எல்லாம் கனிகிறது. தவக் கோலமே என்ருலும் வில்தாங்கி நிற்க மறக்க வில்லை. அவன் பாசுபதம் பெறுவதே வில்லாற்றலை யும், தன் மல்லாற்றலையும் காட்டத்தானே. இத்துணை அழகோடு விளங்கும் அர்ச்சுனனுக்கு அடுத்த தூணி லேயே கர்ணன். பாண்டவர் எல்லோருக்குமே மூத்த வன் அல்லவா இவன். இவன் நாகபாசமேந்திய கை யனுகவே இங்கு நிற்கிருன். வீரனுக்கு உரிய காம்பீர்யம், வில் வித்தையில் சிறந்தவன் என்பதனுல் உள்ள மிடுக்கு, எல்லாவற்றையுமே பார்க்கிருேம் இந்தச் சிலை வடிவில்.

இந்தச் சிலைகளைப் பார்த்த பின் இனி நாம் கோயில் உள்ளேயே நுழையலாம். கோயிலுள் நுழையும்போதே கொஞ்சம் பயபக்தியுடன்தான் நுழைய வேண்டும். உள்ளே சென்றதும் நம்மை உறுத்தி விழித்து நோக்கு பவன்தான் வீரபத்திரன். கனல் உமிழ் கண்ணுடன். தென்வரிசைத் தூண்களில் முதலிலேயே நிற்பான் அவன். சிவபிரானை மதியாத மாமனார் தக்ஷனையும் அவன் செய்த வேள்வியையுமே அழிக்கப்புறப்பட்ட வன் ஆயிற்றே. கேடயமும் வாளும் ஏந்தி, கையையும் காலையும் வீசி வளைத்துப் போருக்குச் செல்லும் கோலம். இந்த நிலையிலும், அணிந்திருக்கும் அணிபணிகளில் எல் லாம் சிற்றுளி வேலையின் நயம் எல்லாம் தெரியும் நமக்கு. இவனை அடுத்தே மன்மதன், அவனுக்கு எதிரி லேயே அவன் மனைவி ரதிதேவி எல்லாம். மன்மதன் ஏதோ கட்டுக்குட்டென்று இருந்தாலும் அன்னப் பறவைமீது ஆரோகணித்து வரும் ரதி, பெண்மைக்கே ஒரு எடுத்துக்காட்டு. காமனும் கண்டு காமுறும் எழில் பெற்ற இம் மங்கையோ, தன் அழகை கையில் ஏந்திய கண்ணாடியில் கண்டுமகிழ்கிறாள். 'நிலவு செய்யும் முகம், காண்பவர் நினைவழிக்கும் விழி, கலகலென்ற மொழி, தெய்வக்களி துலங்கும் நகை' எல்லாவற்றையுமே பார்க் கிறோம் இந்த ரதியின் வடிவத்தில்.

இப்படித் தேர்ந்த அழகிற்கு எல்லையை ரதிதேவியின் வடிவிலே காட்டிய சிற்பி, நல்ல அவலக்ஷணத்திற்கும் ஒரு எல்லை காட்டுகின்றான். ரதிதேவியின் சிலைக்கு மேல் பக்கத்தில் உள்ள தூணிலே, ஒரு அழகிய மங்கை யும் ஒரு அவலக்ஷணமான மனிதனும் உருவாகி இருக் கிறார்கள். அழகே வடிவமான ஒரு முனிவர், அந்தப் பெண்ணின் காதலைச் சோதிப்பதற்காக இப்படி உரு மாறினார் என்றும் அந்த நிலையிலும், அவள் அவரையே மணக்க இசைந்து நின்றாள் என்றும் கதை. இதுபோல

இன்னும் எத்தனையோ சிலைகள் இக் கோயில் உள்ளே. சென்று காண ஒரு ஆசை பிறக்கவேணும் என்பதனு லேயே இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன். இந்தக் கோயிலை, இந்தக் கோயிலில் உள்ள மண்டபங்களை அம் மண்டபங்களில் நல்ல நல்ல சிலைகளை எல்லாம் உருவாக்கினவன் நாயக்க மன்னர்களில் தலை சிறந்தவ விசுவநாத நாயக்கர் குமாரர், குமார கிருஷ்ணப்ப நாயக்கர். அவர் பெயராலேயே கிருஷ்ணபுரம் உருவா யிருக்கிறது. நமக்கெல்லாம் நல்ல மகிழ்ச்சியையும் கொடுக்கிறது, அற்புத சிற்ப வடிவங்களைத் தன்ன கத்தே கொண்டு.



மஹிஷாசுரமர்த்தனி-மாமல்லபுரம்

# 10

# கல்லில் பிறக்கிருள் கார்த்தியாயனி

எருமையின் அற்புதமான குணுதிசயங்களை மக்கள் சரியாக உணரவில்லை. போற்றவும் இல்லை. பொற்ரு விட்டாலும் பரவாயில்லை. மந்தம், மடமை, சோம்பல், அறிவின்மை எல்லாம் சேர்ந்து உருவாகிய மிருகம் அது என்ற தூற்றுதலுக்கும் உள்ளாயிருக்கிறது எருமை. ஆனுல் நான் அதைப் பார்த்து அடிக்கடி அதிசயிப்ப துண்டு, எவ்வளவோ யோக சித்தி கைவரப் பெற்ற சிறந்த தத்துவ ஞானி அது என்று. ஆல மரத்தின் நிழலிலே படுத்து அமைதியாக அசை போட்டுக் கொண்டிருக்கும் அதன் நிலையைப் பார்த்திருக்கிறீர் களா? பக்கத்தில் நடக்கும் காரியங்களில் எல்லாம் ஒரு சிறிதும் மனதைச் சிதற விடாமல், அவைகளை யெல்லாம் துச்சம் என ஒதுக்கித் தள்ளி, மனத்தை ஒரு நிலையில் நிறுத்தும் சக்தி பெறுவது என்பது எளிதான காரியமா என்ன? உலகம் எக்கேடு கெட்டால் என்ன, என் உள்ளம் எதனுலும் சலனம் அடைவதில்லை என்னும் அற்புத நிலை சித்திப்பதென்ருல் அதைவிடச் சிறந்த பேறுதான் உண்டா?

சில சமயங்கள் எண்ணத்தை எங்கேயோ பரவ விட்டு நடுத் தெருவில் நின்றுவிட்டால் அதனை யாரா லும் அசைக்க முடியுமா? எத்தனை மோட்டார் கார்கள் எப்படியெல்லாம் ஹார்ன் அடித்து சப்தித்துப் பார்த் தால்தான் என்ன, அதன் சமாதி கலையுமா? ஆனல் அந்த சமாதி நிலை கடந்து பேரானந்த அனுபவத்தையே பெற்றுவிட்டால் அவ்வளவுதானே. அப்படியே கும் மாளி போட்டுக்கொண்டு துள்ளி ஓட ஆரம்பித்து விட்டாலோ அதனைப் பிடிக்க முடியுமா அல்லது கட்ட முடியுமா? அதன் குரலை, அந்தக் குரலில் உள்ள இனிமையைப் பலர் அனுபவிக்க முடியாதுதான். என்றுலும் அது தன் குரலிலே ஒரு இன்னிசை அனு பவத்தைப் பெறுகிறது. அந்த ஆனந்த அனுபவத்திலே தன்னை மறந்த லயத்தையே அடைந்து விடுகிறது. இப்படியெல்லாம் வாழும் எருமை ஒரு பெரிய கர்ம யோகி. தனக்கென வாழாது பிறருக்காகவே வாழும் பிராணி அது. மக்களுக்கு வேண்டியவைகளை யெல் லாம் நிஷ்காம்ய நிலையில் நின்று உதவுகிறது. இந்த உலகத்தின் சந்தடி இரைச்சல் எல்லாம் அதை ஒன்றுமே செய்வதில்லை.

இப்படி ஒரு விமரிசனம் எருமையைப் பற்றி. நல்ல நகைச்சுவையோடு, எருமையின் குணதிசயத்தை அனுபவித்து இப்படி எழுதியவர் வேறு யாருமில்லை- ஆங்கில அறிஞரான ஜார்ஜ் பெர்ஞட்ஷாதான். அவ ருடைய ஆங்கில விமர்சனத்தைப் படித்தேன் திரும்பவும் திரும்பவும். அவர் இவ்வளவு அற்புதமான பண்பாடுடைய மிருகம் என்று வர்ணிப்பது எருமைப் பசுவைத்தான். எருமைக் கடாவை அல்ல என்று கண்டேன். சமீபத்தில் இங்குள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தபோது எருமைக் கடாக்கள் இரண்டு ஒரு பெரிய பார வண்டியை இழுப்பதைக் கண்டேன்.

சொந்தக்காரரை விசாரித்ததில், 'இவைதாம் என்னுடைய 'ஜீப்கார்' செல்லக் கூடாத பாதையிலும், சுமக்க முடியாத பாரத்தைச் சுமந்து, ஆடாமல் அசங்காமல் செல்லும் வலிமை உடையது' என்ருர். இது வரை எருமையை 'பிரேக் இன்ஸ்பெக்டர்' என்று நையாண்டி பண்ணுவதைத்தான் கேட்டிருக்கிறேன். அதுதான் 'ஜீப்கார்' என்று பராட்டப்படுவதைக் கேட்டதில்லே.

இப்படி எருமைப் பசுவையும், எருமைக் கடாவையும் போற்றுவார் இன்று இருந்தாலும், அந்தப் பழைய காலத்திலே, மந்தம் சோம்பல் அறியாமை எல்லாவற்றையும் சேர்த்து உருவகப்படுத்த எருமையைத்தான் எண்ணியிருக்கிருர்கள். இல்லாவிட்டால் அறிவே உருவான அன்னே பராசக்தி, அறிவின்மையின் பிண்டமான எருமை உருவில் அமைந்த அசுரனுடன் போரிட்டு வென்ருள், கடைசியில் அதனேக் கொன்றே தீர்த்தாள் என்றெல்லாம் அன்று கதை கட்டுவார்களா என்ன ? மஹிஷமர்த்தனத்தின் தத்துவமே இது தானே. அறிவின்மை எருமை உருவில் கொதித்து எழுவதையும் அந்த அறிவின்மையை யெல்லாம் அடக்கி ஆண்டு, வெற்றி கண்டு அறிவுடைமை ஓங்கி உயர்வதையும் கற்பனே பண்ணுவதுதானே மஹிஷ மர்த்தனியின் கதை.

தேவி உபாசனே தமிழர்களுக்குப் புதியது அல்ல. உலகத்தையும், உலகத்தில் உள்ள சீவராசிகள் அத்தனேயையும் ஆக்கவும் காக்கவும் அளிக்கவும் வேண்டப் படும் சக்தியை இறைவன் தன்னில் ஒரு கூருக இருக்கும் சக்தியிடமே பெறுகிருன் என்று எண்ணியிருக்கிருர்கள் அறிஞர்கள். இத்தகைய சக்தியைத்தான் சாந்த நிலேயில் மலேமகளாகவும், கலேமகளாகவும், அலேமகளாகவும் உருவாக்கி இருக்கிருர்கள் கலேஞர்

கள். அந்த சக்தியையேதான் பயங்கர நிலையில் துர்க்கையாகவும், பைரவியாகவும், மஹிஷமர்த்தனி யாகவும் கருதி வழி பட்டிருக்கிருர்கள்.

இந்த மஹிஷமர்த்தனியைப்பற்றிய கதை மிகவும் ரஸமான கதை. கதை இதுதான்.

சிந்துதிவீபன் என்ற முனிவன் மஹிஷ்மதி நதிக் கரையில் தவம் செய்து கொண்டிருக்கிருன். அந்த இடத்திற்கு மந்தார பர்வதத்திலிருந்து விப்ரசித்தி என் பவன் மகள் மஹிஷ்மதி தன் தோழியருடன் புனலாட வருகிருள். முனிவருடைய ஆச்சிரமம் அமைந்துள்ள அழகான இடத்தைக் கண்டு அந்த இடத்தைத் தன் சொந்தமான இடமாக ஆக்கிக்கொள்ள விரும்புகிருள். முனிவரை அங்கிருந்து ஓட்டவும் விழைகின்ருள். அதற் காக மஹிஷ்மதியும் அவள் தோழியரும் எருமை உரு வெடுத்து முனிவன் தவத்தைக் கலைக்க முனைகிருர்கள். முனிவர் உணர்கிருர் நடப்பதையெல்லாம். எருமை உருவெடுத்த அத்தனை பெண்களும் நிரந்தரமாக எருமைகளாகவே இருந்து விடும்படி சபித்து விடுகிருர். மஹிஷ்மதியும் தோழியரும் தம் அறியாமைக்கு வருந்தி சாப விமோசனம் வேண்டுகிருர்கள். சிந்துதிவீபனுமே மஹிஷ்மதியிடம் காதல் கொள்ளுகிருர். இந்தக் காத லின் விளைவால் பிறக்கிருன் மஹிஷாசுரன் எருமைத் தலையுடன் மனித உடலுடன். தேவர்களுக் கெல்லாம் வழக்கம்போல் இடுக்கண் செய்கிருன். அவர்களும் சிவபிரானிடம் முறையிடுகிருர்கள். அவரது கோபாக் கினியில் பிறக்கிருள் கார்த்தியாயினி, ஆம். அன்று சூரபன்மனை ஒழிக்க ஆறு பொறிகளாக கார்த்திகேயன் பிறந்தது போல. இந்தக் கார்த்தியாயனிக்கு சிவன் தன் திரிசூலத்தைக் கொடுக்கிருர். விஷ்ணு தன் சக்கரத்தை உதவுகிருர். வருணன் சங்கையும், வாயு வில்லையும், யமன் பாசத்தையும், சூரியன் அம்புகளையும்,

குபேரன் கதையையும், அக்னி வேலையும், காலன் வாளை யும் தந்து ஊக்குகிறார்கள். ஹிமவானும் தன் பங்குக்கு ஒரு சிம்மத்தையே வாகனமாகக் கொடுத்து உதவு கிறான். இந்தக் கார்த்தியாயனியின் ஆட்சி நடக்கிறது விந்தியமலைச் சாரலிலே.

இவள் தன் அழகை யெல்லாம் நேரில் கண்டு களித்த அசுரர் சண்டனும் முண்டனும் தங்கள் தலைவன் மஹிஷாசுரனிடம் சென்று வர்ணிக்கிறார்கள். கார்த்தி யாயினியின் மேல் காதல்கொண்டு மஹிஷனும் விந்திய மலைச் சாரலுக்கே வந்துசேர்கிறான். கார்த்தியாயினியோ தன்னோடு போர் செய்து வென்றால்தான் திருமணத் திற்கு இணங்குவதாகச் சொல்லுகிறாள். சம்மதிக்கிறான் மஹிஷன். நடக்கிறது போர். மஹிஷனுடைய வீரர் கள் எல்லாம் போரில் மாண்டு விடுகிறார்கள். கடைசி யில் மஹிஷனும் கார்த்தியாயினியும் நேருக்கு நேர் போர் புரிய ஆரம்பிக்கிறார்கள். கார்த்தியாயினியின் வில்லினின்று எழும் அம்புகள் எல்லாம் வர பலம் பெற்ற மஹிஷனை ஒன்றும் செய்ய முடியவில்லை. வீசிய சூல மும் வாளும், கட்டியிழுத்த பாசமும் கயிறும்கூட வலி இழந்து விடுகின்றன. கடைசியில் கார்த்தியாயினி தன் சிம்ம வாகனத்தினின்றும் கீழே குதித்து மஹிஷ னுடைய தலை மேலே ஏறி மிதித்து அவன்றன் தலையை யும் வெட்டி எடுத்து வெற்றி காணுகின்றாள்.

இந்தக் கதையை விஷ்ணு தர்மோத்தரம், வாமன புராணம், வாரக புராணம் எல்லாம் சிற்சில மாறுதல் களுடன் விரிவாகவே கூறுகின்றன. கதையில் அடங்கி யுள்ள கற்பனை இதுதான். மந்தம், மடமை, சோம்பல் அறிவின்மையின் எல்லை எல்லாம் எருமையிடம்தான் காண்கின்றோம். அந்த அறிவின்மையின் அடிப்ப டையே மஹிஷமர்த்தனத்தின் தலையில்தான். அந்த அறிவின்மை மாண்டு மடிய, அறிவுடைமைக்கு அதி

தேவதையாகிய சக்தி உருவாக வேண்டியிருக்கிறது. கார்த்தியாயினியாக உருவெடுக்கும் அன்னை பராசக்திக்கு தேவர்கள் எல்லாம் துணை புரிகிறார்கள். என்றாலும் மடைமையை வெல்லுதல் என்பது என்ன எளிதான காரியமா ? அன்னையின் ஆற்றல் அத்தனையும் மஹிஷத்தின் தலை மீதே இறங்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அஞ்ஞானம் நீங்குகிறது. ஞானம் பெருகுகிறது. இதற்குதான் வெற்றிவிழாக் கொண்டாடுகிறோம், விஜயதசமி அன்று. இந்த அன்னையைத்தான்,

மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும்
நாடறிய பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நரகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற் பரை.

என்று போற்றிப் புகழ்ந்து, ஏற்றி வணங்கியிருக்கிறார்கள் தமிழர்கள்.

* * * *

இப்படிக் கதையிலே, கவிதையிலே, காவியத்திலே போற்றித் துதித்த அன்னை மஹிஷமர்த்தனியைக் கல்லிலும் செம்பிலும் அமைத்து கைதூக்கித் தொழுதிருக்கிறார்கள் தமிழ் நாட்டுக் கலைஞர்கள்.

மஹிஷமர்த்தனியாம் கார்த்தியாயனியின் சிறந்த சிலா உருவத்தை ஆக்கிய பெருமை அந்தப் பல்லவ மன்னன் நரசிம்மவர்மனுக்குத்தான். தந்தை மகேந்திரவர்மன் ஆரம்பித்த திருப்பணியைத்தொடர்ந்து நடத்தி, பாறைகளைக் குடைந்து மண்டபங்கள் மலைகளை வெட்டிச் செதுக்கி ரதங்கள் எல்லாம் சமைத்

தவன் அவன். அவன் தன் புகழ் என்றும் நின்று நிலவ மாமல்லபுரம் உருவாயிற்று அன்று. சத்துரு சங்கார மகாமல்லன் உருவாக்கிய அந்த மாமல்லபுரத்தைத் தானே, இன்று மகாபலிபுரம் என்று போற்றுகிறோம். (மகாபலிக்கும்—மாமல்லனுக்கும் முடிச்சுப் போடுவது குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் முடிச்சுப் போடும் கணக்குத்தான்.) இந்த சரித்திரப் பிரசித்திப் பெற்ற மாமல்லபுரத்திலே, முசாபரி பங்களாவிற்குப் பின்புறம் உள்ள மேடான இடத்திலே இருக்கும் பாறையை வெட்டிக் குடைந்திருக்கிறார்கள் கலைஞர்கள். மண்டபத்திற்குள்ளே ஒரு மண்டபம் செதுக்கியிருக்கிறார்கள். அங்கு பல்லவர் சின்னமான சிங்க அடிப் படையிலே அழகான தூணையும் உருவாக்கியிருக்கிறார்கள். இத்தனையும் உருவாக்கிய பின் தெற்கிலும், வடக்கிலும் உள்ள பாறைச் சுவர்கள் வெற்றிடமாக நிற்பானேன் என்று எண்ணி தெற்குச் சுவரில் மஹிஷ மர்த்தனியையும், வடக்குச் சுவரில் அனந்தசயனனை யும் செதுக்கியிருக்கிறார்கள். ஆனால் தூங்கி வழியும் அண்ணனைத் தூக்கியடித்து விடுகிறாள் துடிதுடிக்கும் தங்கை கார்த்தியாயினி. மஹிஷாசுரனுக்கும் கார்த்தி யாயினிக்கும் நடக்கும் போரின் இறுதிக் கட்டம். கார்த்தியாயினியுடன் வந்த தேவர்கள், கணங்கள் கூட அஞ்சி ஒதுங்குகிறார்கள். விழுந்து மடிகிறார்கள். தன் பக்கத்து வீரர்களை யெல்லாம் இழந்து தனித்து நின்றா லும் மஹிஷன் உக்கிரமாகப் போர் புரிகிறான். ஊர்ந்து வருவதற்கு வாகனம் இல்லாத நிலையிலும் நிமிர்ந்து எழுகிறான் மஹிஷன். கதை கொண்டு தாக்க முற்பட்டு நிற்கும் மஹிஷனிடத்தில் ஒரு அற்புதமான மிடுக் கையே காட்டுகிறான் சிற்பி. ஆம். மிடுக்கோடு கூடிய அறியாமை இப்படித்தானே தலை தூக்கி நிற்கிறது உலகில் என்று கல்லிலே சொல்கிறான் கலைஞன். மஹி

ஷனுக்கு எதிராக கார்த்தியாயினி வீரர்கள் புடைசூழ சிம்மத்தின் மேலேறிப் போர் புரிகிருள். எட்டுத் திருக் கரங்களிலும் ஆயுதங்கள். வில்லே வளைத்து அம்பை எய்யும் உக்கிர நிலேயில் இருக்கிருள் அன்னே. சிற்ப வடிவிலே அம்பு இல்லேதான். என்ருலும் அம்பெய் கின்ற பாவத்தை உணர்கிரும் நாம். இத்தனே கடுமை யான போரிலும் சாந்தி நிலவுகிறது அவள் முகத்தில். அறியாமையை மடக்கும் அறிவுடமை எப்போதும் சாந்தமாகத்தானே இருக்கும். சிரித்துப் புரம் எரித்த சேவகனின் துணேவிதானே இந்தக் கார்த்தியாயினி. பின்னே எப்படி இருப்பாள்? இத்தனே கோலத்தையும் காண்பதற்கு நேரிலேயே ஒரு பயணம் புறப்பட வேண் டியதுதான். அதற்கு வசதியோ அவகாசமோ இல்லா தவர்கள் பக்கத்தில் உள்ள படத்தைக் கண்டு திருப்தி அடையவேண்டியதுதான். சிற்ப உலகிலே இது அர்த்த சிற்பமாக (Bas relief) இருந்தாலும் அற்பமான சிற்பமல்ல. சிற்பக்கலேயின் சிகரம் என்றே சொல்லலாம்.

இந்தக் கார்த்தியாயினி போரில் வெற்றி பெற்று, மஹிஷனுடைய தலேயையே வெட்டி எடுத்துத் தன் காலடியில் அழுத்தி மிதித்து நிற்கும் காட்சியை அநேக மாக எல்லா சிவன் கோயிலிலும் வடக்குப்பிரகாரத்தில்-மாடக்குழியில் கண்டு வணங்கலாம். பல கோயில் களிலே இந்த மஹிஷமர்த்தினி — துர்க்கை உருவம் துடியானது. வேதாரண்யம், பட்டீச்சுரம் துர்க்கை எல்லாம் பிரபலமானவர்கள். என்ருலும் இந்த உருவை அர்ச்சகர்கள் அலங்கரித்து நிறுத்தி விட்டால் நாம் அஞ்சி அஞ்சியே ஒதுங்குவோம். வீரப்பற்களும், கோர உருவமும் உள்ளத்தில் ஒரு பீதியையே எழுப்பும். கிட்ட நெருங்காமல் எட்டி நின்றே தொழுது திரும்பத் தோன்றும்.


ஆனால் இந்த மஹிஷமர்த்தனியின் அற்புதமான திரு உரு, சாந்தமான அழகோடு ஆனந்த மயமான நிலையைக் காண வேண்டும் என்றால் தஞ்சை ஜில்லா வில் உள்ள பழையாறை என்ற பழைய பட்டணத் திற்கே செல்ல வேண்டும். சுந்தரசோழன் காலத்தில், தஞ்சை மன்னர்கள் இருந்து அரசாண்ட இடம் அது. அங்கு ஒரு கோயில். நல்ல சோழர் காலத்துக் கோயில், இன்று இடிந்து கவனிப்பார் அற்றுக் கிடந்தாலும் கூட, அந்தக் கோயிலை அடைய திருமலை ராஜன் ஆற்றைக் கடக்க வேண்டும். நடந்து கடந்தாலும் சரி, நீந்திக் கடந்தாலும் சரி. அப்படிக் கடந்து சென்று கோயிலைக் கண்டு உள்ளே நுழைந்தால் கர்ப்பக்கிரகத்திற்கு வெளி யில் உள்ள மண்டபத்தில் செங்கல்கள் அடுக்கி—ஒரு சிலை மூன்றடி உயரமுள்ள சிலைதான்—நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும். 'கானத்து எருமை கருந்தலைமேல் நின்றாள்' என்று அன்று சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ பாடிய பாடலுக்கு ஏற்றவாறு, கருங்கல்லில் உருவாகிய கருந்தேவி தான் அவள். ஆறே கைகள் தான். என்றாலும் அபயம் அருளும் திருக்கரமும் உண்டு.

சங்கு சக்ரதாரியாய் நிற்கும் இந்த அன்னையின் முகத்திலே ஒரு களை. உதடுகளிலே ஒரு புன்னகை. நிற்கும் நிலையிலே ஒரு அழகு. அணிந்துள்ள ஆபர ணங்களிலே ஒரு கவர்ச்சி. இத்தனையையும் கண்டு அனுபவிக்கிறோம் நாம், இந்தத் திருவுருவிலே.

இதே அன்னையின் உருவம் செப்புச் சிலையாக— உருப் பெற்றிருக்கிறது பழையாறையை அடுத்த பட்டீச் சுரத்திலே. இங்குள்ள துர்க்கையின் சிலாவிக்கிரஹம் பெரிய உருவம். செவ்வாய் தோறும் விசேஷ பூசை. வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரும் அருளாட்சி புரிகிறாள் அவள். அவளுக்குப் பதிலாக உத்சவ காலத்

திலே வெளியிலே எழுந்தருளும் திருவுருவம் நல்ல செப்புச் சிலை. நீண்டு வளர்ந்த திருவுரு. எட்டுக் கைகள். பழையாறை அன்னை வட பக்கம் குழைந்து நின்றாள், இவள் இடப்பக்கம் குழைந்து நிற்கிறாள். அன்னையின் அடியில் கிடக்கும் மஹிஷமோ, அவள் தன் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் நாக்கையே வெளியே தள்ளிவிடுகிறது. ஆணவமும் அறியாமையும், அறிவுடைமையைக் கண்டு அஞ்சி மடியும் நிலையை உருவாக்கி இருக்கிறார் சிற்பி.

இந்தத் திருவுருவங்களைப்போல இன்னும் எத்தனைத் திருவுருவங்களோ தமிழ் நாட்டில்? இவைகளில் ஒரு சிலவற்றைக் கண்டு தொழுதாலாவது நமது அறியாமை நம்மைவிட்டு அகலாதா என்ன?



ஆண்டாள்-பள்ளி கொண்டான்

# 11

## கல்லிலே வடித்த கட்டழகு

கிரேக்க இலக்கியத்திலே பிரதானமான ஒரு கதை. நிரம்ப ரஸமான கதையும் கூட. ஹீரா, அதீனு, ஆப்ரோடைட் என்று மூன்று பெண் தெய்வங்கள் அன்று நடந்த அழகுப் போட்டியில் கலந்து கொள் கிருர்கள். போட்டியில் தீர்ப்புச் சொல்லும் பொறுப்பு பாரிஸ் என்ற இளைஞன் தலையில் விழுகிறது. இப் பெண்மணிகள் மூவருக்குள்ளும் பலத்த போட்டி. ஒவ்வொருவரும் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று துடிக்கிருர்கள். ஆதலால் தீர்ப்புச் சொல்லும் பாரிசையே சரிக்கட்டிக் காரிய சாதனை பெற விழைகிருர்கள். அவன் விரும்பத் தக்க அதிகாரம், பதவி எல்லாம் தருவதாய் ஹீரா பாரிசினிடம் சொல்லு கிருள். கல்வி அறிவு புகழ் எல்லாம் அவன் பெறுவ தற்கு உதவி செய்வதாக அதீனு வாக்களிக்கிருள். ஆனல் இந்த ஆப்ரோடைட் மனித இதயத்தை நன்ருக அறிந்தவள். ஆதலால் அவள் சொல்கிருள், தான் அழகிய பெண்ணெருத்தியின் அழியாக் காதலைத் தருவதாக. அவள் வெற்றி பெறக் கேட்பானேன்!

பாரிஸ் அவளே சிறந்த அழகி என்று தீர்ப்புக் கூறி விடுகிருன். அதனுல் கிடைக்கிறது பாரிசுக்கு ஹெலனின் காதல். இதனுல் நேர்கிறது பெரிய போரும் அதனுல் ஏற்படும் கஷ்டமும். ஆனுல் உலகுக்குக் கிடைக்கிறது ஒரு ஒப்பற்ற காவியம். ஹோமர் என்ற கவிஞன் மூலமாக.

இந்தப் பாரிஸ் ஹெலன் கதையிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. அதிகாரம், பதவி, கல்வியறிவு, கீர்த்தி எல்லாவற்றையும் விடச் சிறந்ததாக மனிதன் மதிக்கும் பொருள், அழகிய பெண்ணின் அழியாக் காதலே என்று. Beauty provoketh thieves sooner than gold என்று ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பீயர் பாடினுர். அவருக்குக் கொஞ்சமும் சளைக்காமல் 'பொன்னினும் கள்வரைப் பொலிவு தூண்டும்' என்று பாடுகிருன் தமிழ்க் கவிஞன். ஆம். அழகு தூண்டும் அழியாக் காதலை; அழகு தூண்டும் ஆண்மையை, வீரத்தை. இந்த அடிப்படையில் தானே கவிதைகள் பிறந்திருக்கின்றன. காவியங்கள் விரிந்திருக்கின்றன.

அழகைப்பற்றி எவ்வளவோ விவாதங்கள். அழகு என்பது சாரமற்ற ஒரு பொருள், ஒரு மாயை, ஏமாற்றம் மனிதனது பலவீனத்தை மறைக்கும் ஒரு திரை என்பர் ஒரு வேதாந்தி. உடனே அழகு என்பது உலகிலேயே மிகப் பெரியதொரு உண்மை. அதை ஒரு பெரிய ஆபத்து என்று சொல்லிச் சொல்லி நம் நாட்டுப் பெரியோர்களும் புலவர்களும் மனித வர்க்கத்திற்கே தீங்கிழைத்து விட்டார்கள் என்று கொதித்து எழுவார் ஒரு ரஸிகர். இந்த இரண்டு வாதங்களுமே தப்பு. அழகு பார்க்கப்படுகின்ற பொருளில் இல்லை. பார்க்கின்றவனுடைய கண்ணிலே தான் இருக்கிறது. Beauty is in the eye of the beholder என்று ஆங்கில மேற்கோளையும் அதற்கேற்ப, காட்சியிலே இல்லை அது;

கண்களிலே உள்ளதடா என்று தமிழிலேயும் தடபுடலாகச் சொல்லி வாதமிடுவார்கள் கலைஞர்கள். ஆம் லைலாவின் அழகைக் காண மஜ்னூவின் கண்கள் எவ்வளவு அவசியமோ அதுபோல் நமது குப்பச்சியின் அழகைக் காண குப்பனின் கண்களும் வேண்டுந் தானே ?

இந்த உலகத்தில் இறைவன் படைப்பில் ஒவ்வொரு அணுவிலும் அழகு நிறைந்திருக்கிறது என்பது அழகை அனுபவிக்கும் கண் படைத்த ஒவ்வொருவனுக்கும் தோன்றும். அகன்று பரந்த நீலவானும் அதனிடையே கொஞ்சி விளையாடும் எண்ணற்ற நக்ஷத்திரக் கூட்டங்களும், அவற்றின் கண் சிமிட்டல்களும் எவ்வளவு அழகு வாய்ந்தவை ! இந்த மண் உலகிலோ எண்ணற்ற விதத்திலே மலர்கள் எங்குப் பார்த்தாலும் மலர்ந்து சிரிக்கின்றன. வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டே அவற்றைச் சுற்றி வஸந்த கீதம் பாடுகின்றன. நம்மைச் சுற்றி எங்குப் பார்த்தாலும் மலையும் மலைச் சிகரங்களும், அதிலிருந்து குதித்து விளையாடித் துள்ளியோடும் நதிகளும் அருவிகளும். இன்னும் இதுபோன்று எத்தனை எத்தனையோ காட்சிகள். அழகு நிறைந்த இயற்கைக் காட்சிகளை எல்லாம் நாம் தினம் தினம் கண்டு களிக்கிறோம். இவைகளை எல்லாம் காண்பதற்கும், அவைகளின் அழகை எல்லாம் அனுபவிப்பதற்கும் நல்ல கண்களும் நமக்கு இருக்கவேண்டும் அல்லவா ?

மலரினில் நீலவானில்
மாதரார் முகத்தில் எல்லாம்

இலங்கிடும் அழகை அனுபவிக்கத் தெரிந்தவனே அறிஞன் ; அந்த அனுபவத்தை வெளியிடத் தெரிந்தவனே கலைஞன். இப்படிக் கல்லிலே வடிக்கும் கட்டழகை நான்கு கோணத்திலே நான்கு பெண்கள்

ஆம். கருங்கல்லில் உருவான சிற்ப வடிவங்கள் மூலம் காண முடிகிறது நம்மால். தமிழ் நாட்டின் சிற்பக்கலை அன்று எவ்வளவு சிறந்திருந்தது என்பதற்கு, இச் சிலா உருவங்களும் இதைப்போல் தமிழ்நாடு முழுவதும் நிறைந்திருக்கும் எண்ணிறந்த வடிவங்களுமே தக்க சான்று.

ஏதோ மலரிலும் நீலவானிலும் அழகு இருக்கிறது என்று சொன்னாலும், அழகின் இருப்பிடம் பெண்கள் என்பதை எந்த மனிதனும் மறுப்பதற்கில்லை. ஆம். அழகு அவளது தந்த நிறத்தில் இருக்கிறது. அங்க நிறைவில் இருக்கிறது. இதழ்க் கடையிலே இருக்கிறது. துவளும் குரலிலே இருக்கிறது. துடிக்கும் ஸ்தாயியிலே இருக்கிறது. அது நம் கண்ணில் பதிகிறது. செவியில் பாய்கிறது. ஸ்பரிசத்தில் உணர்கிறது. மூக்கில் மணக்கிறது. வாயில் சுவைக்கிறது. ஆம்,

> கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
> உற்று அறியும் ஐம்புலனும்
> ஒண் தொடி கண்ணே உள.

என்பதுதானே வள்ளுவரது சித்தாந்தமும். இப்படி மனிதன் அநுபவிக்கும் பெண்ணழகை இன்னும் விரிவாகவே வகைப்படுத்தினர்கள் தமிழர்கள். ஒருவர் சொன்னர் அழகு, எழில், வனப்பு, கவர்ச்சி எல்லாம் ஒரு பொருள் கிளவி என்று (அது என்ன கிழவியிடத்திலும் காணும் அழகு என்று கேட்டார் மற்றொருவர். அடபாவமே! கிளவி என்றல் சொல் என்றுதான் அர்த்தம். கிளவிக்கும் கிழவிக்கும் எவ்வளவோ தூரம் என்றார் மூன்றுவது நபர்) ஆம். அழகுக்கு நாற்பதுக்கு மேற்பட்ட சொற்கள் அகராதியிலே இருந்தாலும், இந்த அழகு, எழில், வனப்பு, கவர்ச்சி என்ற நான்கு சொல்லும் நான்கு தன்மைகளைக் குறிக்கும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டாமா?

கடலிலே அலை புரள்கிறது. ஆனால் சந்திர உதயம் ஆன பின்பு அந்த அலைகள் விம்மி எழுகின்றன, ஆர்ப் பரிக்கின்றன. ஆம் அந்த அலைகளின் உணர்ச்சியைத் தூண்டும் சந்திர உதயம்போல, மனிதனது உள்ள அலைகளை எழுப்பி அவன் உணர்ச்சியைத் தூண்டி அவனுக்கு எது ஆனந்தத்தைக் கொடுக்கிறதோ அது தான் அழகு.

காலையிலே தடாகத்திலே தாமரை மொட்டாகக் குவிந்திருக்கிறது. ஆனால் சூரிய உதயம் ஆகின்ற போது மெல்ல விரிகிறது, மலர்கிறது. தனிக் களையையே பெறுகிறது. இப்படித் தாமரை மலரை விரியச் செய்யும் சூரிய ஒளியைப்போல எது மனிதனது உள்ளத்தை மெல்ல விரியச் செய்கிறதோ அதுதான் எழில்.

இரும்புத் துண்டு ஒன்று இருக்கிறது. அதன் பக்கத்தில் காந்தம் வருகிறது அவ்வளவுதான் அந்தக் காந்த சக்தி இரும்பைத் தன் பக்கமே இழுத்துக் கொள்கிறது. இப்படி இரும்பைத் தன் பக்கமே இழுத்துச் சேர்த்துக் கொள்ளும் காந்த சக்திபோல மனிதனது பஞ்ச இந்திரியங்களையும் எது தன் பக்கமே இழுத்து அவனை ஆட்கொள்கிறதோ அதுதான் வனப்பு.

தீபத்தில் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. அந்த ஒளி பறந்து திரியும் விட்டிலைத் தன்பக்கம் அழைக் கிறது. எட்ட இருந்து பார்த்துக் களித்தால் பரவா யில்லை. ஆனால் நெருங்கி உறவு கொண்டாடி விட்டாலோ அழிவு அங்கே காத்திருக்கிறது. அதைப் போலவே மனிதனை அவனது உள்ளத்தை உடலை ஒளியைப்போல் தன் பக்கம் எது இழுக்கிறதோ அது தான் கவர்ச்சி.

இந்த விளக்கங்களைத் தெரிந்துகொண்ட பின் கலை உலகில் அதிலும் சிற்பக்கலை உலகில் நுழைந்து பார்த்தால், நம் நாட்டுக் கலைஞர்கள், இந்த அழகு, எழில், வனப்பு, கவர்ச்சியை எல்லாம் தனித் தனியாகவும் சேர்த்து அனுபவிக்கும்படியாகவுமே நல்ல நல்ல சிற்ப வடிவங்களாகப் பெண்ணின் உருவத்திலேதான் நிறுத்தியிருக்கிறார். எல்லாம் நல்ல கருங்கல் வடிவத்தில்தான். என்ன கருங்கல்லிலா கட்டழகு என்று கேட்கத் தோன்றும் நமக்கு, ஆம். குளிர்ச்சியிலே தானே ருசி, கறுப்பிலே தானே அழகு. அழகாம்பிகையான உமை இருக்கிறாளே, அவள் கறுப்பில் அழகி, கறுப்பாயி தானே. ஏன் அந்த அழகும் செல்வமும் நிறைந்த லக்ஷிமிக்கு வாய்த்த மணவாளன், விஷ்ணுவும் நல்ல கறுப்பில் அழகன் தானே. சீதையின் காதலனாக காவியத்தில் உருவாகியிருக்கும் ராமன் நீலமேக ஸ்யாமள வண்ணன். ஏன் காதற் கடவுள் காமனும், கண்டோர் மயங்கும் கட்டழகு படைத்த அந்த அருச்சுனனும் நல்ல கறுப்பு நிறத்தவர் என்றுதானே நமது காப்பியங்கள் கூறுகின்றன. ஆதலால் தானோ என்னவோ, அழகு, எழில், வனப்பு, கவர்ச்சியை எல்லாம் கலை உருவில் காட்ட நம் நாட்டுச் சிற்பிகள் கருங்கல்லையே தேடி எடுத்திருக்கிறார்கள். வெள்ளைச் சலவைக் கல்லில் உருவாகும் சிலைகளைவிட நல்ல கருங்கல்லில் உருவாகும் சிலைகள் மிகவும் அழகு வாய்ந்தவை என்பதை யாரும் எளிதிலேயே தெரிந்து கொள்ளலாமே.

அழகு நிறைந்த பெண்களை அருங்கலை விநோதர்களான சிற்பிகள் நல்ல சிலை வடிவில் எத்தனை எத்தனையோ கோணங்களில் உருவாக்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அழகி ஒருத்தி, 'பொங்கி வரும் நிலவினிலே கனவிலிது கண்டேன். வயது பதினாறு இருக்கும் இளவயது மங்கை' என்று அன்று பாரதி பாடினான்.

அந்த அழகி இவள்தான் போலும், எடுப்பான மூக்கும் அதற்கேற்ற முழுமதியன்ன முகமும், வாளிப்பான உடலும், ஆலிலையன்ன வயிறும் உடையவளாய்க் காண்பவர் உள்ளத்தில் ஓர் உணர்ச்சியை எழுப்புகிறாள். வலக் கையில் தாமரை, இடக் கையைத் தொங்க விடுவதிலே ஒரு லாவகம், தலையை முடித்துக் கொண்டை போட்டுக் கொள்வதிலே ஒரு ஒய்யாரம் எல்லாம் அவள் அழகை இன்னும் அழகு செய்கின்றன. அவள் அணிந்திருக்கும் அணிகளும் பணிகளும் அவள் பெரிய இடத்துப் பெண் என்பதைப் பறை சாற்றுகின்றன. இந்த அழகே உருவாம் அணங்கு, வட ஆற்காடு மாவட்டத்திலே தலைநகரான வேலூருக்கு மேற்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ள பள்ளிகொண்டை என்ற ஊரிலே, வட அரங்கன் சந்நிதியிலே கேட்பாரற்று ஒரு ஒதுக்குப் புறமான மூலையிலே நின்றுகொண்டிருக்கிறாள். சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான ஆண்டாளின் திரு உருவமாக இருக்கலாம். இருட்டறையில், ஒதுங்கி நாணி நிற்கும் நங்கையைக் கலை உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதன் மூலமாக அமைதியான அழகு என்ன என்பதைக் கலா ரஸிகர்கள் தெரிந்து கொள்ளலாம் அல்லவா ?

எழிலுக்கு விளக்கம் கூறுகின்றபோது தாமரையை மலரச் செய்யும் சூரிய ஒளியைப்போல எது மனிதனது உள்ளத்தை விரியச் செய்கிறதோ அதுதான் எழில் என்று கூறினேன். அந்த எழிலாரும் ஏந்திழை ஒருத்தி. ஒரு அரசிளங் குமரியாக இவள் இருக்கவேண்டும். தலை அலங்காரம், உடை அலங்காரம் எல்லாம் பிரமாதமாக இருக்கிறது. அதிலும் நடனம் ஆடப் புறப்படும் நிலையில் ஆடம்பரமாகவே அணிகள் அணிந்து, சிலம்பு புலம்ப, மேகலை புரள அவள் அடி பெயர்த்து நிற்கிறாள். கண்களிலே ஒளிவீசும் அழகு, முகத்திலே இருக்கும் சாந்தி

மார்பிலே தவழும் முத்தாரம் எல்லாம் இவளை ஓர் உயிர் பெற்று உலவும் ஒரு பாவையாகக் காட்டுகின்றன. நம் உள்ளமெல்லாம் மாய்கிறது இவள் எழிலைக் கண்டு. நம் உடல் எல்லாம் இனிக்கிறது இவள் நடையைக் கண்டு. இந்த எழிலாரும் ஏந்திழை இருப்பது திருநெல் வேலியிலே நெல்லையப்பர் கோயிலிலே. நாயக்க மன்னர்கள் கட்டிய கோயில்களிலே பெண் வடிவங்களுக்கு, அழகுத் தெய்வங்களுக்குக் குறை ஏது?

இந்த வனப்பு இருக்கிறதே, இது சொல்லால் விளக்க முடியாத ஒன்று. ஆடையும் அணியும் அதிகமாக அணிந்தால் வனப்பை விளக்காது, மறைக்கவே செய்யும். வனிதையர் வனப்பை அவர்கள் அங்கங்களிலே தான் காணவேண்டும் என்றாலும், ஒவ்வொரு அங்கமும் லக்ஷணமாக அமைந்து அந்த முழு உருவத்திற்கும் ஒரு அழகு தரவேண்டும். அப்படி அமையும் அழகே மனிதனது உள்ளத்தை, இரும்பைக் காந்தம் தன் பக்கம் இழுப்பதுபோல், இழுக்கும் வனப்பாகும். அவ்விதம் நிறைந்த வனப்புடைய வனிதையரையே ஒருவருக்கு இருவராகப் பார்க்கிறீர்கள் பக்கத்திலே உள்ள படத்திலே. இருவரும் தன்னையும் தாங்க இயலாத நிலையிலும் துகில் ஒன்றைத் தாங்கி நிற்கிறார்கள். ஒருத்தியின் பின்னே ஒருத்தி ஒளியும் நிலைதான் எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது! நேரே நம்மைப் பார்க்காமல், ஒருக்கவாகப் பார்ப்பது போல நடிப்பதில்த்தான் எத்தனை வனப்பு! இந்த வனப்புடைய வனிதையரைக் காணத் தஞ்சைக் கலைக்கூட்டத்திற்கே போகவேணும். அங்கு சிற்ப வடிவில் நடக்கும் நாடகம் ஒன்றையும் காணவேணும், பிக்ஷாடனனாகப் புறப்படும் சிவனைத் தொடர்ந்து செல்லும் ஏழு ரிஷி பத்தினிகளில் இருவரே இவர்கள். கதையை மறக்கலாம், இக் கட்டழகிகளின் வனப்பை


மறக்க இயலாது. அந்த வனப்பு உங்கள் உள்ளங்களை அவர்கள் பக்கம் காந்தம் இழுப்பது போலக் கவர்ந்தால் அதற்கு நான் பொறுப்பாளியே அல்ல. உங்கள் உள்ளத்தை இரும்பாக விடாமல் கல்லாக மாற்றிக் கொள்ளுங்கள். அதுவே அங்கிருந்து தப்பி வெளியே வர வழி.

அழகு, எழில், வனப்பு இவைகளினின்றும் மனிதன் கொஞ்சம் முயன்றாலும் தப்பித்துக் கொள்ள லாம். ஆனால் இந்தக் கவர்ச்சி என்ற அம்சம் இருக்கிறதே அதிலிருந்து தப்புவது எளிதல்ல. விட்டிலைத் தன்பக்கம் இழுத்து அதனை அதன் காலடியிலே விழுந்து மயங்கச் செய்யும் சுடர் விளக்கினைப் போலவே இந்தப் பெண்ணின் கவர்ச்சி மனிதனைத் தன்பக்கல் இழுத்து மடியச் செய்கிறது. அந்தக் கவர்ச்சி அந்தப் பெண்ணின் கண்ணின் ஒளி யில் இருக்கலாம், அதரங்களில் தவழும் புன்னகையில் இருக்கலாம், விம்மிப்புடைத்த தனங்களில் இருக்கலாம், இல்லை துவளும் இடையில் இருக்கலாம். எப்படியோ இந்த கவர்ச்சியில் சிக்குண்டு தன்வயமிழந்து விடுகி றான் மனிதன். அப்படி மனிதனுக்குக் கவர்ச்சி தரும் கன்னி ஒருத்தி ஏதோ வீணை மீட்டி இன்னிசை பாடத் தான் அவள் எழுந்து நிற்கிறாள். அளகபாரம் ஒரு பக்கம் இழுக்க அவள் தலை சாய்த்து ஒயிலாக நிற்கிறாள். உடலோ இன்னிசைக் கேற்பத் துவண்டு கொடுக்கிறது இத்தனைக்கும் இடையில்.

யான் நோக்கும் காலை நிலம் நோக்கும் ;
நோக்காக்கால் தான் நோக்கி
மெல்ல நகும்.

என்று அன்று வள்ளுவன் சொன்னானே அந்த அணங்கே உயிர்பெற்று வந்தவள் போல் குனிந்த தலை நிமிராமலேயே புன்னகை புரிகிறாள். அந்தப் புன்ன

கைக்கே அடிமையாகிறுன், கவர்ச்சியுறும் மனிதன். அவ்வளவுதான், இனிமேல் அவன் அவளது தாசானு தாசன்தான். இந்தக் கன்னி-கண்ணனைச் சுற்றும் கோபியரில் ஒருத்தியாக, ஸ்ரீரங்கத்தில் வேணுகோபாலனைச் சுற்றிக் கட்டிய மண்டபத்திலே நின்று கொண்டிருக்கிறுள். கவர்ச்சி தரும் கோபாலனது இசையில் கவர்ச்சி உறுகிறுள் என்பது கற்பனை.



உமாசகித சந்திரசேகர்

# 12

## காதலும் புலவியும் கல்லிலே

புருஷன் மனைவி என்றிருந்தால் அவர்களுக்குள் பிணக்குகள் சிறு மனஸ்தாபங்கள் ஏற்படுவது இயற்கை அந்தப் பிணக்கு காரணமாக ஒருவரோடு ஒருவர் பேசாமல், கொள்ளாமல் சில தினங்கள் கழிவதும் உண்டு. ஆனால் அந்தப் பிணக்கு நீங்கிய பின் இருவரும் திரும்பவும் இணைவதிலே ஒரு அலாதியான இன்பமே பெறுவார்கள் என்பதும் உலகறிந்தது. உலகியலை நன்கறிந்த வள்ளுவர் புல்வி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்று இந்த புருஷன் மனைவியர் பிணக்கை வகைப்படுத்தி விரிவாகவே கூறியிருக்கிறார், அவரது திருக்குறளிலே. இத்தகைய பிணக்குகள் இல்லாவிட்டால் கணவன் மனைவியரது தாம்பத்ய வாழ்க்கையே சுவை அற்றதாக ஆகிவிடும் என்பது அவரது சித்தாந்தம். அது நமக்குத் தெரியாததில்லையே.

இப்படி இவர்கள் ஊடிக் கொள்வதற்குக் காரணம் ஏதாவது பெரியதாக இருக்குமா? அதுவும் கிடையாது. ஏதோ புதுப்புடவையோ, வைர நகையோ வேண்டு

மென்று மனைவி கேட்பாள். குடும்பப் பொருளாதா ரத்தைச் சரிக்கட்ட சிரமப்படும் குடும்பத் தலைவன், கேட்டதை வாங்கிக் கொடுக்கத் தயங்குவான். மனைவி நச்சரிப்பாள்; கணவன் முறைப்பான்; தலைவி பிணங்கு வாள். இது இன்றைய தம்பதிகள்-சாதாரணக் குடும்பத் தில் உள்ளவர்களிடையே நேரும் பிணக்கு. இலக்கிய உலகிலே இப்படித்தான் பிணக்குகள் ஏற்படுகின்றன என்று சொன்னால் சுவையாக இருக்குமா? அங்கு கவிஞர் சொல்லும் பிணக்குகள் எல்லாம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கும். சாதாரண மாக ஒருவருக்குத் தும்மல் வந்தால் அவரை யாரோ நினைக்கிறார்கள் அதனால்தான் தும்மல் ஏற்படுகிறது என்று காரணம் கற்பிப்பார்கள். கணவனும் மனைவியும் தனித்திருந்தபோது கணவன் தும்முகிறான். உடனே மனைவி 'என்னைத் தவிர யாரோ ஒருத்தி உம்மை நினைக்கிறாள் அதனால்தான் உமக்குத் தும்மல் வருகிறது' என்று பிணங்குகிறாள். சிறிது நேரம் கழித்து, திரும்ப வும் அவனுக்குத் தும்மல் வருகிறது. இதற்கும் ஏதாவது சொல்லி இவள் பிணங்குவாளே என்று வருகிற தும்மலை அடக்க முயலுகிறான் அவன். அப்போதும் விடுபவ ளாக இல்லை துணைவி. 'உமக்கு வேண்டிய பெண் ஒருத்தி உம்மை நினைப்பதை என்னிடமிருந்து மறைக் கத்தானே நீர் இந்த தும்மலை அடக்குகிறீர்' என்று மீண்டும் பிணங்குகிறாள். இப்படி தும்மினாலும் பிணக்கம், தும்மலை அடக்கினாலும் பிணக்கம் என்ற நிலையைத்தான் புலவி நுணுக்கம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இந்த தெய்வமாக் கவி மாட்சி தெரிவிக்க வந்த கம்பன் இதை இன்னும் அழகாகவே சொல்லுகிறான், அவனுடைய காவியத்திலே. மிதிலை நகரிலே ஒரு சோலையிலே ஆடவரும் பெண்டிரும் அணி அணி

யாய்க் கூடிக்குலவி மகிழ்கிறார்கள். இவர்களில் ஒரு தலைவனும் தலைவியும். தலைவன் தனித்துப் பூக் கொய்து கொண்டிருக்கிறான், ஒரு பொழிலிடத்தே. அவனைத் தேடிக்கொண்டு வருகிறாள் தலைவி. அவன் இருக்குமிடம் கண்டு, அவனை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக அவன் அறியாமலே அவன் பின் புறம் வந்து சேருகிறாள். தலைவனோ இவள் வந்ததை அறிய வில்லை. பின்புறம் வந்து நின்ற தலைவி, தன் இருகை யால் அவன் இரு கண்களையும் பொத்துகிறாள். அவனோ யார், என்று கேட்கிறான். அவ்வளவுதான், பொத்திய கையை எடுத்துவிட்டு, தலைவி அழுகிறாள். எதற்காக இவள் இப்படி அழுகிறாள்? என்ன சொல்லி விட்டான் அவன்? இதிலேதான் இருக்கிறது அந்தப் புலவியின் நுணுக்கம். தன் பின்னாலே வந்து கண்ணைப் பொத்திய கைகளை ஸ்பரிச உணர்ச்சியாலேயே அவை பெண்ணின் கைகள் என்று தலைவன் அறிந்திருக்க வேண்டும். அப்படி அறிந்த பின்னும் அவை யாருடைய கைகள் என்று கேட்கிறான் என்றால், அவ னுடன் இப்படிக் கண் பொத்தி விளையாடும் உரிமை உடையவர்கள் தன்னைத் தவிர வேறு பெண்களும் இருப்பதினால்தானே, 'இது யார்?' என்று கேட்கத் தோன்றியது தலைவனுக்கு என்றெல்லாம் எண்ணியிருக் கிறாள் தலைவி. இந்த எண்ணமே, ஆம் தன் தலைவ னோடு விளையாடுவதற்குத் தன்னைத் தவிர வேறு பெண் களும் இருத்தல் கூடுமோ என்று ஏங்கிய நிலையிலே அவள் உள்ளம் வருந்தியிருக்கிறது. அது காரண மாகவே அழுகை வந்திருக்கிறது அவளுக்கு. இத் தனையும் கற்பனை பண்ண நமக்கே விட்டுவிடுகிறான் கவிஞன்.

போர் என்ன வீங்கும் பொருப்பு
அன்ன பொலன் கொள் திண்தோள்

மாரன் அனையான் மலர் கொய்து
இருந்தானை வந்து ஓர்
கார் அன்ன கூந்தல் குயில்
அன்னவள் கண் புதைப்ப
யார் என்ன லோடும் அனல்
என்ன வெய்துயிர்த்தாள்

என்ற பாட்டிலே. போதாதா தலைவனுக்கும் தலைவிக்கும் பிணக்கு நேரிட.

இந்தப் பிணக்கு எப்படித் தீர்கிறது பின்னால் என்பது ரஸமான ஒரு அனுபவம். பிணக்கு காரணமாக புருஷனும் மனைவியும், ஒருவர்க்கொருவர் பேசாமலே வாழ்கின்றனர். ஒரு வீட்டிலே இருவரும் வளைய வளைய வந்தாலும், உணவு அருந்தும் போதும் பேசுவதில்லை, உறங்க முனையும் போதும் பேசுவதில்லை. காரணம் யார் முதலிலே விட்டுக் கொடுத்துப் பேச முனைவது என்பதில்தான் நாளும் பொழுதும் கழிகிறது. சாதாரணமாகப் புருஷனே தன் கௌரவத்தை எல்லாம் கட்டி வைத்துவிட்டு, காதல் மனைவிக்கு விட்டுக் கொடுத்து விடுவான் முதன் முதலாக. என்றாலும் கவிஞர்கள் கலைஞர்கள் இதை ஒப்புக் கொள்வதில்லை, அவர்கள் எல்லாம் ஆடவர்களாக இருக்கின்ற காரணத்தால். இந்தப் பிணக்கத்திலே முதல் முதல் சரணாகதி அடைபவர் பெண்களே என்பதுதான் அவர்கள் வாதம். சீதையின் பேரில் காமுற்று அவளை வஞ்சனையால் கவர்ந்து வந்து அசோக வனத்தில் சிறை வைத்த இராவணனைக் கூட

மெலியு மிடை, தடிக்கு முலை, வேயிளந்தோள்
சேயரிக்கண் வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத
மகுட நிறை வயங்கும்

பெருமகனாகத்தானே சித்தரிக்கிறார் கம்பர். இராவண

ணுவது வரபல மிகுந்த புஜபல பராக்கிரமம் வாய்ந்த வன். சாதாரண குடும்பத்தில் உள்ள பிணக்கையும்- அந்தப் புலவி தீர்ந்த விதத்தையும், அந்தப் புலவியில் யாவர் தோற்ருர் என்பதையுமே சொல்கிருன் அவன். கணவனுக்கும் மனைவிக்கும் ஏதோ ஒரு சிறு பிணக்கு. இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாமலே பகற் பொழு தெல்லாம் கழிகிறது. இரவு வந்த பின்னும், இருவரும் ஒரே கட்டிலிலே அடுத்தடுத்துப் படுத்த பின்பும் புலவி தீரவில்லை. இருவருமே உறங்குவது போலப் பாசாங்கு செய்கிருர்கள். கடைசியில் மனைவிதான் அந்தப் புலவியிலே தோற்கிருள். ஏதோ கனவு கண்டு பயந்த வள் போல பக்கத்தில் படுத்திருக்கும் கணவனைக் கட்டிப் பிடிக்கிருள், புலவி தீர்கிறது இருவருக்கும். இப்படி ஒரு கற்பனை அந்தக் கம்பனுக்கு.

துனியுறு புலவியைக்
காதல் சூழ் சுடர்
பனி எனத் துடைத்தலும்
பதைக்கும் சிந்தையாள்
புனை இழை ஒரு மயில்
பொய் உறங்குவாள்
கனவு எனும் நலத்தினுல்
கணவர்ப் புல்லினுள்

என்பதே அவன் பாட்டு. ஆனுல் ஒன்றே ஒன்று. இந்தப் புலவியில் தோற்றவர் யார் புருஷனு அல்லது மனைவியா இதை நிர்ணயிக்க அவரவர் பெறுகின்ற இன்பத்தையல்லவா அளவு கோலாக வைத்துப்பார்க்க வேண்டும்? ஆம். நாம் நினைக்கிறோம் வலிந்து கண வனைத் தழுவிய பெண்ணே தோற்றவள் என்று. இல்லை, அவள் அதனுல் பெறுகின்ற இன்பத்திற்கு அளவு உண்டா? அதனுல்தான் சொல்லுகிருர் வள்ளுவர்

ஊடலில் தோற்றவர் வென்ருர்; அது மன்னும
கூடலில் காணப்படும்

என்று. தோற்றவர் வெற்றி பெறுகிற விந்தை இது.

இந்தப் புலவி ஊடல், உவகை எல்லாம் நிறைந்த காதல் வாழ்வைக் கலைஞர்கள், கல்லிலே உருவாகும் சிலைகளிலும் காட்டாமல் இருக்கவில்லை. சிற்பக்கலையிலே சிறந்த இரண்டு வடிவங்களை உங்கள் முன்னுல் நிறுத்தினுல், எப்படி இந்தப் புலவியில் ஆடவன் தோற்கிருன் என்பதையும், இல்லை பெண்ணே தோற்கிருள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்தானே.

கைலையிலே இருக்கும் பரமசிவனுக்கும் பார்வதிக்குமே ஒரு பிணக்கு. ஒரு குடும்பம், அதிலும் இரண்டு குறும்புக்காரப் பிள்ளைகள், அவர்களுக்குள் வாதங்கள் போட்டிகள் என்றெல்லாம் இருந்தால் தம்பதிக்குள் பிணக்கு ஏற்படக் காரணம் வேண்டுமா ? ஏதோ காரணத்தால் ஏற்பட்ட பிணக்குத் தீரவில்லை சில தினங்களாக. அந்தப் பரமசிவனுக்கோ எத்தனையோ வேலை, குருவாக அமைந்து சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது, வரம் வேண்டித் தவம் செய்யும் பக்தர்கள் முன்பெல்லாம் ஆஜராக வேண்டியிருக்கிறது. இத்தோடு அன்ருட உணவிற்கே பிச்சைப் பாத்திரம் ஏந்தி பிக்ஷாடனனுகப் புறப்பட வேண்டியிருக்கிறது. இத்தனை வேலையில் அலுத்தவர் இந்தப் பணிகள் காரணமாக, அன்னை பார்வதியின் நச்சுக்களுக்குத் தப்பி ஒரு சில நாட்களாக நிம்மதியாக இருப்போமே என்று அமர்த்தலாக இருந்து விடுகிருர். ஆனுல் பார்வதிக்கோ இந்த உதாசீனம்—ஆம். உதாசீனம்போல் இவர் நடிக்கும் நடிப்பு தாங்க முடியவில்லை. எப்போதும் அத்தனுடன் விளையாடிய பெய்வளை அல்லவா அவள். அவனேடுக் கூடிக் குலவாது, ஓடி உலவாது இருக்க முடியவில்லை. எதனையோ சிந்திப்

பவர் போல ஒதுங்கி நின்றுகொண்டிருக்கும் இறை வனேயே தேடி வருகிருள். பக்கத்தில் வந்து இடித்துக் கொண்டே நிற்கிருள். இந்த நெருக்கி உட்புகுதரு நிலே ஏற்பட்ட பின்னும் எவ்வளவுதான் அமுத்தலான ஆசாமியாக இருந்தாலும் சும்மா இருப்பாரா அவர். ஊடல் எல்லாம் நீங்கி உவகையோடு கட்டித் தழுவி யிருப்பார். இதையெல்லாம் நம் கற்பனேக்கே விட்டு விடுகிருன் சிற்பி.

இந்தச் சிற்ப வடிவத்தையே பார்க்கிறீர்கள் பக்கத் திலே. இதை எப்படி சிற்பி உருவாக்கினுன்? சிற்பி உண்மையில் இருவரையும் சேர்த்து உருவாக்க எண்ணி யிருக்கவில்லே. சந்திரசேகரனேத்தான் உருவாக்க எண்ணியிருக்கிருன் முதலில். அதற்காகக் கல்லில் உருவை வரைந்து வலப்பக்கத்தைச் செதுக்கி வேண் டாத பகுதிகளே வெட்டி எடுத்திருக்கிருன். இடப்பக் கத்தில் வெட்டிச் செதுக்கி எறிய வேண்டிய பாகம் அதிகம் இருப்பதைக் கண்டவுடனே, அந்தச் சிறு இடத்தில் ஏன் பார்வதியையுமே சேர்த்து உருவாக்கி விடக்கூடாது என்று நினேத்திருக்கிருன். இருக்கும் இடத்திற்குள்ளேயே சமாளிக்கப் பார்வதியை நெருக்கி யிருக்கிருன். சிவபெருமானேச் சுற்றித் தழுவும் கொடி யாக அவளே ஆக்கியிருக்கிருன். இப்படித் தழுவும் கொடியையும், கொடியை அணேத்துக் கொள்ளும் கொம்பையும் கண்டான்

மஞ்சிடை வயங்கித் தோன்றும்
பவளத்தின் வல்லி அன்ன
குஞ்சரம் அணேய வீரன்
குவவுத் தோள் தழுவிக் கொண்டாள்

என்ற கம்பன் பாடல் ஞாபகத்திற்கு வராமல் போகுமா என்ன? ஆம் இப்படித் தழுவுவதன் மூலமாக இறைவ

னுக்கும் இறைவிக்கும் புலவி தீர்கிறது ; ஊடல் உவகை பெருகுகிறது ; காதல் வளருகிறது என்றெல்லாம் காட்டி விடுகிருன் சிற்பி. அவன் காட்டியவண்ணத்தை விட அவன் எண்ணம் வாழ்க என்று வாழ்த்தவும் தோன்றுகிறது நமக்கு.

ஊடலில் தோற்றவள் பெண்ணே என்பதை சிற்பி ஒருவன் சித்திரித்திருப்பதைப் பார்த்தோம். இன்னெரு சிற்பி இதை ஒத்துக்கொள்ளவில்லை. ஊடலில் பெண் தோற்கவாவது ? ஆடவன் தோற்பதுதானே இயல்பு என்று எண்ணுகிருன். அதற்குக் கருப் பொருளாக இதே பரமசிவன் பார்வதியையே அமைத்துக்கொள் கிருன். கதை வளர்கிறது அவன் உள்ளத்திலே. கலை உருவாகிறது அவன் கைகளிலே. கதை இதுதான்.

ரகுவம்சத்தில் தோன்றிய சகரர் அஸ்வமேத யாகம் செய்கிருர்கள். யாக மண்டபத்தில் இருந்த குதிரை ஒரு முனிவரது பர்ணசாலை அருகில் தங்கி இருக்கிறது. முனிவர்தான் குதிரையைக் கட்டிப் பிடித்து நிறுத்தியிருக்கிருர் என்று வெகுண்டு அவரிடமே போர் தொடுக்கிருர்கள் மன்னனின் மக்கள். ஆனுல் முனிவரது கோபாக்கினியோ இந்தச் சகரர் மக்கள் ஆயிரவரையும் பொடி சாம்பலாக்கி விடுகிறது. இவர்கள் எல்லாம் உய்ய கங்கையே வரவேண்டி யிருக்கிறது இவ்வுலகத்திற்கு. இவர்களது பேரன் பகீரதன் தவம் பண்ணுகிருன். கங்கை பாய்ந்து பெருக இசைகிருள். ஆகாய கங்கையாக அவள் குதிப்பதை இந்தப் பூமியால் தாங்க முடியுமா ? அதனுல் அவளை ஏற்கத் தயாராகிருன் சிவபெருமான். சடைவிரித்தே நிற்கிருன். மிக்க கர்வத்தோடு விண்ணிலிருந்து குதித்தவளைத் தன் சடா மகுடத்தி லேயே அடக்கி விடுகிருன். அவன் பின்னர் பகீரதன் தவத்திற்கு மெச்சி ஏழு கூருக கங்கை பிரவஹிக்க

அனுமதிக்கிருன். இதுதான் கங்கை இந்தப் பூமியில் பாய்ந்து பெருகிய கதை.

இந்தக் கதையிலே முளைக்கிறது இன்னெரு கற்பனை. தான் பக்கலிலே இருக்க, தன் சடா மகுடத்திலே இன்னெருத்தியையும் ஏற்றி வைத்துக் கொண்டாரே என்று பார்வதி எண்ணுகிருள்.

வங்கமலி கடல் நாகைக்
    காரோணத்து எம் வானவனே !
எங்கள் பெருமான், ஓர் விண்ணப்பம்
    உண்டு, அதுகேட்டு அருளீர்
கங்கையைச் சடையுட் கரந்தாய்,
    அக்கள்ளத்தை மெள்ள உமை
நங்கை அறியில் பொல்லாது
    கண்டாய் எங்கள் நாயகனே

என்று அப்பர் சிவபெருமான் காதில் ரகசியமாகச் சொன்னதையும் கேட்டு விடுகிருள். பிணக்கு ஏற்படுகிறது பார்வதிக்கு. ஏதோ இன்று வந்த புதியவளுக்காக என்றும் உள்ளவள் ஊடி வருந்து வதைச் சகிப்பாரா அவர் ? ஆதலால் உடனே அவள் பக்கத்தில் ஓடிச் சென்று அவளை அன்போடு ஆரத் தழுவி, நாடியைத் தாங்கிப் பிணக்கைத் தீர்க்கிருர் அவர். புலவியும் தீர்கிறது அதனுல். இந்தக் கற்பனையை உருவாக்கி இருக்கிருன் சிற்பி. சடா மகுடத்தில் உள்ள கங்கை ஒரு பக்கம் ஒதுங்க இறைவன் கொஞ்சலாக இறைவியை அணுகும் நிலை, அவள் நாடியைத் தாங்கி நயவுரைகள் பேசி ஊடல் தீர்க்கும் அழகு, இந்த நிலையில் அவர்கள் உள்ளத்தில் எழும் உவகையால் அவர்களது அதரங்களில் தவழும் புன்னகை எல்லாம் அதி அற்புதமாக உருவாகி இருக்கிறது இந்தச் சிலை உருவில். ஆம். காதலும் புலவியும் கல்லிலே உருவாகி விடுகிறது சிலை வடிவில்.

இவ்விரண்டு சிலைகளையும் நேரில்காண அந்த இஞ்சி சூழ் தஞ்சைக்கே ஒரு நடை புறப்பட வேண்டியதுதான்-அங்குள்ள கலைக் கூடத்திற்குள் நுழைந்தால் இந்த இரண்டு சிற்ப வடிவங்களையும் பார்க்கலாம். கல்லை கனிவிக்கும் ஆற்றல் பெற்றிருந்த அந்தச் சிற்பிகளுக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் திரும்பலாம்.



திரிபுராந்தகர் - தஞ்சை

## 13

# கல்லில் தீட்டிய சித்திரம்

ஒரு நாள் காலை நேரம். நானும் சில நண்பர்களும் கன்னியா குமரியிலிருந்து திருவனந்தபுரத்துக்குப் பயணம் புறப்பட்டோம். நாற்பது ஐம்பது மைல் மேடு பள்ளங்களின் வழியாக எல்லாம் நல்ல 'சிமண்ட்' சாலை போடப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையில் காரில் போவதே ஒரு இன்பம். போகிற வழியெல்லாம் தோப் புக்கள், வயல்கள், ஆறுகள், சிற்றோடைகள், தாமரைத் தடாகங்கள் தான். கண் நிறைந்த காட்சிகளே எங்கும். நெய்யாற்றங்கரைக்குக் கீழ்புறம் (ஆம், நெய்யாற்றங் கரையில் தண்ணீர் தான் ஓடுகிறது, நெய் ஆறாக ஓடு கிறது என்று நினைத்து அங்கு போய் ஏமாந்து விடா தீர்கள்) ஒரு பெரிய தடாகம். தெளிந்த தண்ணீர் அதில் நிறைந்திருக்கிறது. பக்கத்தில் சேறு பட்ட வயல்கள். தடாகத்திலும், இந்த வயல்களிலும் செவ் வாம்பல் பூக்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக் கின்றன. காதலன் வரவை நோக்கும் காதலியைப் போல் உதயசூரியன், ஆகாய வீதியிலே வர வர மெள்ள

மெள்ள இதழ் விரித்துச் சிரிக்க ஆரம்பிக்கின்றன மலர்கள். இந்த மலர்களுக்கிடையே அன்னப் பறவைகள் அங்கு மிங்கும் நீந்திக் கொண்டிருக்கின்றன. அன்னப் பறவைகளின் குஞ்சுகளும் தாய்மாரோடே நீந்துகின்றன. கொஞ்ச நேரத்தில் தடாகம் முழுவதும் செக்கச் செவேலென்று தாமரைப் பூக்கள் மலர்ந்து விடுகின்றன. அந்தக் காட்சி தண்ணீரிலே தீப்பற்றிக் கொண்டது போல தோன்றுகிறது. தாய்ப் பறவைகள், ஏது? நம் குஞ்சுகள் இந்தத் தீயின் வெம்மையில் வெம்பிப் போய்விடக் கூடாதே என்று அஞ்சி தத்தம் குஞ்சுகளைத் தங்களுடைய சிறகுகளால் அணைத்து ஒடுக்கிக் கொள்ளுகின்றன. இப்படியெல்லாம் ஒரு காட்சியை நாம் இன்று பார்க்கிறோம். இதே காட்சியை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பும் ஒரு கவிஞர் பார்த்திருக்கிறார். பார்த்தவர்,

அள்ளல்ப் பழனத்து
    அரக்காம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது
    என வெறீஇப்-புள்ளினம் தம்
கைச் சிறகால் பார்ப் பொடுக்கும்

காட்சியை ஒரு நல்ல பாட்டிலே அமைத்தும் வைத்திருக்கிறார். ஒரு அற்புத சித்திரத்தை அழகிய சொல்லிலே தீட்டி வைத்திருக்கிறார் என்றும் சொல்லலாம்.

இதை விட அழகான ஒரு ஓவியத்தைத் கல்லிலே தீட்டி வைத்திருக்கிறன் ஒரு சக்கிரவர்த்தி. இன்றைக்கு ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னுலே எழுதப்பட்ட அந்தச் சித்திரத்தில் நல்ல அழகான தாமரைத் தடாகம் ஒன்று உண்டு. தடாகம் முழுவதும் மலர் மயந்தான். அன்னப் பறவைகளும் குஞ்சுகளும்

வெள்ளம் தீப்பட்டது என அஞ்சி நிற்கும் காட்சி யெல்லாம் மிக மிக அழகு தடாகத்தில் அன்னப் பறவைகள் மட்டுமல்ல, யானைகளும் மாடுகளும் வேறே இறங்கிக் குழப்புகின்றன. தாமரைத் தடாகம் என்றால் பறவைகளுக்கும் விலங்கினங்களுக்குந்தானா? மக்களுக்கு இல்லையா? ஆகையால் புதுப்புனல் குடை யும் ஆடவர் சிலரையும் அங்கே காண்கிறோம். பெண் டிரும் இருந்திருக்க வேண்டும் என்று கொஞ்சம் கற் பனையும் செய்து கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு காட்சியைச் சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலிலே முதற் கட்டின் விதானத்திலே சித்தரித்திருக்கிறான் மன்னன் மகேந்திரவர்மன். ஜைனர்களுடைய சுவர்க்கம் ஆகிய சாமவ சரவணப் பொய்கையையே சித்தரிக்க முயன்றிருக்கிறான். எல்லாம் கல்லின் மேல் சுண்ணும்பு பூசி அதன் மேல் என்றும் அழியா வர்ணங்களைக் குழைத்துத் தீட்டிய சித்திரங்கள் தான்.

சித்தன்ன வாசலைத் தமிழ் நாட்டின் அஜந்தா என்று சொல்லலாம். அஜந்தா செல்ல அவகாசம் இல்லாதவர்கள் சித்தன்ன வாசலுக்கு ஒரு நடையைக் கட்டலாம். தொண்டைமான் புதுக்கோட்டைக்குச் சென்று அங்கிருந்து காரிலோ வண்டியிலோ நேரே மேற்கே சென்றால் இந்தக் குகையின் வாயிலின் முன் கொண்டு விடும். பின் அங்குள்ள இரும்புக் கிராதியைக் காவலன் மூலம் திறந்து உள்ளே சென்று முதற் கட்டில் நுழைய வேண்டும். கொஞ்சம் நம்முடைய கௌரவத்தையெல்லாம் கட்டித் தூர வைத்துவிட்டு மேலே கிடக்கும் துண்டை எடுத்துக் கீழே விரித்து அதில் படுத்துக் கொண்டு அண்ணாந்து பார்த்தால் பார்க்க லாம் நான் மேலே சொன்ன சித்திரங்களை. கொஞ்ச நேரம் இமை கொட்டாது பார்த்தால் அந்த சரவணப் பொய்கை தத்ரூபமாகக் காட்சியளிக்க ஆரம்பித்து

விடும். படுத்தவர்கள் அப்படியே மயக்கம் போட்டு விடாமல் அப்படியே துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு மற்றக் காட்சிகளையும் பார்க்க லாம். தடுப்பவர் ஒருவருமே கிடையாது.

சித்தன்ன வாசல் குடைவரைக் கோயில் மிகவும் சிறிய கோயில்தான். உள்ளே ஒரு சதுரமான அறையும், வெளியே ஒரு நீண்ட தாழ்வாரமும், எல்லாம் கருங்கல் மலையிலே குடையப்பட்டிருக்கிறது. தாழ்வாரத்துப் பக்கச் சுவர்களில் இரண்டு சிலைகள். வடக்கே பார்த்து இருப்பவர் பார்ஸவ நாதர். அவரை ஜைன தீர்த்தாங்கரர் இருபத்தி நாலு பேர்களில் ஒருவர் என்கிறார்கள். அவருடைய தலை மீது படமெடுத்த நாகம் விரிந்து குடை பிடிக்கிறது. தென் புறம் பார்க்க இருப்பவர் ஜைன குரு ஆச்சார்யார். இவருக்குச் சாதாரண குடையேதான். இருவரும் அர்த்த பத்மாசனத்தில் தியானத்தில் இருக்கிறார்கள். இந்தச் சிலைகள் கல்லில் செதுக்கிய சிலைகள். மேலே வர்ணம் பூசப்பட்டுப் பின்னால் உதிர்ந்திருக்க வேண்டும் என்று தோன்று கிறது.

மேல் விதானத்தையும் பக்கச் சுவர்களையும் விட்டு விட்டு அந்த மண்டபத்தைத் தாங்கி நிற்பது போல் செதுக்கப்பட்டுள்ள தூண்களைப் பார்த்தால் உலகமே கண்டு அதிசயக்கத் தகுந்த இரண்டு அழகிய சித்திரங் களைப் பார்ப்போம். வட புறத்தில் ஒரு நடன மாதைப் பார்க்கிறோம். அவளுடைய அங்கங்களிலே ஒரு குழைவு, கண்களிலே ஒரு கவர்ச்சி, அணிகளிலே ஒரு வியப்பு, அவளது ரோஜா வர்ண உடல் அழகும், கருங் கூந்தலியே தாமரை சொருகியிருக்கும் நேர்த் தியும், நம்மை மயக்கவே செய்யும். அவளது தோற்றத் திலும், நடனத்திலும், நாம் உள்ளத்தைப் பறிகொடுத்து விடாமல் கொஞ்சம் கண்களைத் திருப்பி அடுத்த

தூணைப் பார்த்தால் அங்கே காட்சி கொடுக்க மகேந்திர வர்மனே காத்து நிற்கிருன். மகேந்திரவர்மன் பெரிய வீரன், நல்ல கவிஞன், சங்கீர்ண ஜதியின் ஆதி கர்த்தா. மத்த விலாச நாடகாசிரியன். பெரிய சித்திரக் காரப் புலி என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். மற்ற விஷயங்கள் எல்லாம் உண்மையோ என்னவோ தெரியாது. ஆனல் அவன் ஒரு பெரிய 'சித்திரக்காரப் புலி' என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லைதான். அவனுடைய காம்பீர்யம் அவனுடைய மகுடத்திலேயே தெரிகிறது. அவனுடைய முகத்திலோ கலை சொட்டு கிறது. நல்ல பணியை நாமும் தமிழ் நாட்டில் செய்து முடித்து விட்டோம் என்ற ஆத்ம திருப்தியை அவன் கண்களிலே காண்கிறோம். ஆனல் ஒரே ஒரு எச்சரிக்கை. இந்த இரண்டு சித்திரங்களையும் பார்ப் பதற்கு சூக்ஷ்ம திருஷ்டி வேண்டும். மங்கிய சித்திரங் கள்தான் அங்கே இப்போது இருக்கின்றன. கண்ணுடிக் கண்ணர்கள் யாராவது போய் ஒன்றுமே தெரிய வில்லையே என்று சொன்னல் அதற்கு நான் பொறுப் பாளியல்ல.

வெளித் தாழ்வாரத்தை விட்டு உள்ளே சென்ருல் அங்கும் சுவரெல்லாம் சித்திரம். பல இடங்கள் பொரிந்து விழுந்து விட்டன என்ருலும் விதானத்தில் எழுதப்பட்டுள்ள சித்திரம் மட்டும் ஆசு அழியாமல் இருக்கிறது. கம்பளம் விரிந்தாற் போன்ற சித்திரம் வெகு அழகாய் இருக்கிறது. ஜைனர்கள் கற்பனை செய்துள்ள தெய்வலோகக் காட்சியே அங்கு சித்தரிக் கப்பட்டிருக்கிறது. அங்கும் மூன்று தீர்த்தாங்கரர்களின் உருவம் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குடைவரைக் கோயில் சக்ரவர்த்தி மகேந்திர வர்மன் அப்பர் பெருமான் அருளால் சைவ சமயத்தைத் தழுவு வதற்கு முன் செய்து முடித்திருக்க வேண்டும் என்று

யூகிக்கிருர்கள் சரித்திரக்காரப் புலிகள். ஜைனனுக இருக்கும் போதே இந்தச் சித்திரங்களை எழுதியிருக்க வேண்டும் என்று வேறே சொல்லுகிருர்கள். மன்னன் மகேந்திரனைப் போன்ற மகா ரஸிகர்கள், ஜாதிமத பேதங்களுக்கெல்லாம் அப்பாற் பட்டவர்கள். இதைப் பற்றி யெல்லாம் ஆராய்ச்சியும் விவாதமும் நமக்கென் னத்திற்கு ? நாம் பார்த்து அனுபவிக்க வேண்டியதெல் லாம் அவனும் அவனுடைய சிற்பிகளும் தீட்டிவைத் திருக்கும் சித்திரங்களைத்தானே. சித்திரங்கள் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாகவே அழியாதிருப்பது அதிச யத்திலும் அதிசயமே. மூலிகைகளிலிருந்தும் எடுத்த வர்ணம் என்று மட்டும் சொல்வதற்கில்லை. உலோகங் களிலிருந்தும் வர்ணத்தை வடித் தெடுத்திருப்பார்கள் போல் தோன்றுகிறது. சாதாரண வர்ணத்தில் கூட இந்தச் சித்திரங்களைத் தீட்டி உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க என்னல் இயலவில்லை. சித்தன்ன வாசல் சித்திரங்களைப் பார்த்த பின் நமக்கும் ஒரு அஜந்தா உண்டு. அதை நாமும் பார்த்து விட்டோம் என்று கொஞ்சம் திருப்தியடையலாம் அல்லவா.

தமிழ் நாட்டின் அஜந்தாவைப் பார்த்த அன்பர்களை இன்னும் கொஞ்ச தூரம் கூட்டிச்சென்று இன்னும் சில சித்திரங்களையும் காட்டி விட விரும்புகிறேன். அதே சமயத்தில் ஒரு உண்மையையும் ஒழிவு மறைவு இல் லாமல் சொல்லிவிடவும் விரும்புகிறேன். தமிழ் நாட்டில் சிற்பக்கலை உயர்ந்திருக்கும் அளவிற்கு சித்திரக்கலை உயரவில்லை என்பது என்னவோ உண்மை. என்ருலும் இந்த அருங் கலையிலும் நமது பண்டைத் தமிழர்கள் அவர்தம் கவனத்தைச் செலுத்தாமலும் இல்லை. மகேந் திரவர்மன் அடியொற்றி அவனுடைய பேரனுக்குப் பேரனுன ராஜ சிம்மன், காஞ்சியிலே ஒரு பெரிய கோயிலைக் கட்டியிருக்கிருன். அங்குள்ள சிற்பச்

செல்வங்களோ, கண்டு கண்டு அனுபவிக்க வேண்டியவை. இங்குள்ள பிரகாரத்தின் சிறு மண்டபங்களில், ராஜ சிம்மனும் நல்ல சித்திரங்களைத் தீட்டி வைத்திருக்கிருன். ஆனுல் பின்னுல் வந்த ரஸிகப் பெருமக்கள் இந்தச் சித்திரங்கள் மேல் நல்ல சுண்ணும்பைத் தீட்டி சித்திரங்களை அடியோடே அழித்து விட முயன்றிருக்கிருர்கள். காரணம் என்னவோ? அங்குள்ள சித்திரங்களை அவர்கள் சித்திரங்கள் என்று கருதவில்லையோ, இல்லை அவற்றை விட இவர்கள் தீட்டிய சுண்ணம் அழகு வாய்ந்தது என்று நினைத்து விட்டார்களோ அறியோம். இந்த வெள்ளைப் பூச்சு சரிந்து விழுந்தது சில வருஷங்களுக்கு முன்னுல். காரையைப் பெயர்த்து எடுத்ததில் பழைய சித்திரங்கள் வெளிவரலாயின. இன்று அவற்றில் நமக்கு கிடைப்பது, ஐந்து தலைகள், ஒரு உடல், ஒரு முழங்கை, ஒரு விரிந்த கையின் விரல்கள் இவை தாம். இவைகளைப் பார்த்தே, அந்தத் தோற்றங்களின் முழுப் பொலிவும் எப்படி இருந்திருக்க வேணும் என்று கற்பனை பண்ணிக் கொள்ளலாம். இந்தச் சித்திர வரிசையிலேயே தென் ஆர்க்காடு ஜில்லாவில், செஞ்சிக்குத் தெற்கேயுள்ள பனமலைக் குன்றின் மேல் காணப்படும் கோயிலிலும் சில சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவை யெல்லாம் அழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. இந்தப் பல்லவ காலத்துச் சித்திரங்கள் எல்லாம் அஜந்தா மரபைச் சேர்ந்தவை.

பல்லவ சிற்பங்களைப் பார்த்த கண்களோடேயே, சோழர்களது சித்திரங்களையுமே பார்த்து விடலாம். சிற்ப வடிவங்கள் அமைப்பதிலும், கற்றளிகள் கட்டுவதிலும் சிறந்திருந்த அந்தச் 'சிவபாத சேகரன்' ராஜராஜ சோழன், சித்திரம் தீட்டி வைப்பதிலுமே சிறந்தவனுகவே இருந்திருக்கிருன். தஞ்சைப் பெரு உடையார் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றிய கருவரைச் சுவர்

களிலே அழியாத அமர ஓவியங்களைத் தீட்டி வைத் திருக்கிறன். இவைகளும் சமீப காலத்தில் தான் தமிழ் மக்களது கவனத்திற்கு வந்தன. இங்குமே நாயக்க மன்னர்களது காலத்தில், இவற்றின் மேல் காரைபூசி வேறு வண்ண வடிவங்களைத் தீட்டிவைத்திருக்கிறர்கள். இந்த காரையை எல்லாம் அகற்றிய பின்தான் அந்தப் பழைய ஓவியங்கள் வெளிவந்திருக்கின்றன. இங்குள்ள சுந்தரர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சித்திரங்கள், நடனராஜன், ராஜராஜன், கருவூர் சித்தரது திரு வுருவங்கள் எல்லாம் மிக்க அழகு வாய்ந்தவை. அவற்றை எல்லாம் தூக்கி அடிக்கும் வகையில் தீட்டப்பட்டிருக்கும், திரிபுராந்தகனின் போர்க்கோலம் பிரமாதமாக இருக்கிறது. திரிபுரம் எரித்த விரி சடைக் கடவுளின் திருஉரு, அவர் ஒரு காலை ஊன்றி ஒரு காலைத் தேர்த்தட்டின் மீது வைத்து வில் வளைத்து சூலம் நீட்டி நிற்கிற நிலை எல்லாம் மிகமிகச் சிறப்பாக இருக்கிறது. இந்தத் திரிபுராந்தகரைச் சுற்றி வளைந் திருக்கும், தேவ கணங்களின் கூட்டமோ சொல்லத் தரமன்று. இந்த அரிய சித்திரக் காட்சியை இன்று நன்றய்ப் பதனம் பண்ணி வைத்திருக்கிறர்கள் புதை பொருள் இலாக்கா அதிகாரிகள். இதனை நகல் எடுத்து, சித்திரசாலைகளிலே வைக்க ஏற்பாடுபண்ணினல் இன்னும் சிறப்பாக இருக்கும்.

பல்லவர் காலத்திய சித்திரம், சோழர் காலத்திய சித்திரம் இவைகளைத் தவிர வேறு சித்திரங்கள் தமிழ் நாட்டில் உருவாகக் காணேம். பாண்டியர் காலத்திலே சில சித்திரங்கள் ஆங்காங்கே இருந்தன என்று சரித்திரச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனல் சித்திரங்களைக் காணேம். மதுரை மீனக்ஷி கோயிலில் பொற்றமரை குளத்தை ஒட்டிய மண்டபங்களிலே உள்ள திருவிளை யாடற் புராணச் சித்திரங்கள் அத்தனை சிறப்பு

வாய்ந்தவை அல்ல. ஒத்துக்கொள்ள வேண்டியது தான் ; சிற்பக்கலை வளர்த்த ஆர்வத்தோடு தமிழ் மக்களும் மன்னர்களும் சித்திரக் கலையை வளர்க்க வில்லை. என்றாலும், அந்தக் கலையை அடியோடு மறந்து விடவும் இல்லைதான்.

## 14

# கால் மாறி ஆடிய கற்பகம் கல்லிலே

மேல் நாட்டில் நடனப் பிரசித்திபெற்ற மாடம் பாவ்லோவா என்ற ரஷ்ய நாட்டு அம்மை ஒருநாள் தன் நடனங்களை, ஒரு பெரிய அரங்கிலே ஆடிக் காண்பித்தார். நடனங்கள் எல்லாம் சிறப்பாக அமைந்தது அன்று. ஆனல் கடைசியில் அந்த அம்மை ஆடிய நடனத்தின் பொருள் விளங்கவில்லை ஒருவருக்கு. அந்த ரஸிக நண்பர், நடன அரங்கிலிருந்து வெளிவந்த அம்மையை அணுகி, 'மாடம்! கடைசியாக ஒரு நடனம் ஆடினீர்களே, அதன் பொருள் என்ன ?' என்று மிக்க ஆதங்கத்தோடு கேட்டார். அதற்கு அம்மையார், 'அவ்வளவு எளிதாக அந்தப் பொருளைச் சொல்லி விடக்கூடும் என்ருல் நான் அந்த நடனம் ஆடியே இருக்கவேண்டாமே' என்ருராம் (If I could say that in words, I need not have danced it) உண்மைதானே. வெறும் வாக்கியங்களினுலே விஷயத்தைச் சொல்லி விடக்கூடும் என்ருல் அதை நடனம் ஆடிக் காண்பிப்பானேன்? அரங்கம், திரைச்சீலை, பக்கவாத்தியம்,



கால்மாறி ஆடிய கற்பகம்

உடை, அணி என்றெல்லாம் சிரமப்படுவானேன்? சொல்லால் விளக்க முடியாதவற்றை அல்லவா நடனம் விளக்குகிறது.

இத்தகைய எண்ணங்கள்தான் நடராஜனது திரு உருவத்தின் முன் நிற்கும்போது நம் உள்ளத்தில் எழு கின்றது. உண்மைதான். நடராஜனது திருவுருவத்தின் தத்துவங்களை, உண்மை விளக்கம், திருமந்திரம், சித்தி யார், சிதம்பர மும்மணிக்கோவை முதலியவை அற்புத மாகத்தான் கூறுகின்றன. ஆனால் அந்த நடராஜ மூர்த்தியிடமே விளக்கம் கேட்போமேயானால், அவர் என்ன சொல்லக்கூடும்? மாடம் பாவ்லோவைப்போல், 'அந்த தத்துவத்தை நான் வார்த்தைகளினாலே விளக்க முடியும் என்றால் நான் நடனமே ஆடியிருக்கவேண் டாமே' என்றுதான் சொல்லுவார். சொல்லால் விளக்க முடியாத அற்புதத் தத்துவம் அது. அதை நடனம் ஆடித்தான் விளக்க முடியும். அதனாலேதான் 'வானம் மணிமுகடாய், மால்வரையே தூணாக, ஆன பெரும் பார் அரங்காக' அமைத்துக்கொண்டு ஆடிக்கொண் டிருக்கிறான் அவன், அநாதி காலமாக.

இந்த உலகின் உயிர்த் தத்துவமே அசைவில்தான் இருக்கிறது. அசைவு அதிகம் ஆக ஆக அதுவே ஆட்டம் ஆகிறது. மனிதன் தன் உணர்ச்சிகளை ஆட்டம் ஆடிக் காண்பிக்கத் தெரிந்து கொண்டிருக்கிறான். அவன் உத்சாகத்தில் ஆடுவான், கோபத்தில் ஆடு வான், பயத்தில்கூட ஆடி நடுங்குவான், மனிதன் மட் டும் என்ன? ஊர்வனவும் பறப்பனவும்கூட ஆடித்தான் தம்தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. படம் எடுத்து நடம் ஆடும் பாம்பை அறிவோம். அழகாகத் தோகையை விரித்துக் களிநடம் புரியும் மயிலையும் அறிவோம். நடமாடிக்கொண்டே கோழியுடன் கூடிக்

குலவும் சேவலேயும் அறிவோம். ஆம். 'எங்கும் திரு நடனம் எங்கும் திருநட்டம்' என்றே காண்கின்றேம் இந்த உலகில். இப்படி அண்டங்கள் எல்லாவற்றிலுமே அதே நடனம் நாள்தோறும் நடந்துகொண்டிருக்கிறது. 'வான் நின்று இழிவது வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல்' உள்ளும் புறத்தும் நின்று இயங்குகிருன் இறைவன். அணுவிற்குள் அணுவாக நின்று ஆடுகிருன். அணு விற்குள் வெளியில் நின்று அதனே ஆட்டுவிக்கிருன் என்றெல்லாம் உணர்கிறேம். அதனுலே அவனே ஆடும்பெருமானுக கற்பனே பண்ணுகிறேம். நடராஜ ஞக அவனே அமைத்து வழிபடுகிறேம்.

மேலும் இந்த நடராஜனது தாண்டவத் திருஉருவங் களேப் பலபல கோணங்களிலே பார்க்கிறேம். நமது கோயில்களிலே சந்தியா தாண்டவம், காளிகா தாண்ட வம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்தத் தாண்டவம் என்றெல்லாம் வகுத்தும் வைத்திருக்கிறேம். எல்லாத் தாண்டவத் திரு உருவங்களிலும் ஆனந்தத் தாண்ட வமே அதி அற்புதமான மூர்த்தமாக இருப்பதையும் உணர்கின்றேம். ஒரு காலே ஊன்றி, ஒரு காலேத் தூக்கி, செஞ்சடை விரித்து நிற்கும் நிலேயிலே ஒரு சுழற் சியையே காண்கின்றேம். நிலேத்து சில விநாடியாவது அந்த நிலேயிலே நிற்பது சாத்தியமில்லே என்பதையும், ஆடிக்கொண்டே இருந்தால் அந்த நிலேயிலே எவ் வளவு நேரம் வேண்டுமானுலும் ஆடிக்கொண்டே இருக்கமுடியும் என்பதையும் அறிகிறேம். இப்படி நிலேத்து நிற்கும் நிலேயையும் சுழற்சியையும் ஒரே உரு வில் காட்டும் திறம்படைத்த கலேஞர்களுக்குப் பல் லாண்டு கூறுகிறேம் பல்லாயிரம்தரம். அப்படிப்பட்ட அனுபவத்தைப் பெற்றவரே திருமூலர். அதனுல்தான் அவர்,

ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து உகந்தானுக்கே

என்று பாடுகிருர்.

ஆனந்தத்தாண்டவத் திருவுருவங்கள் பலவற்றைப் பார்த்த நான் சமீபத்தில் மதுரை சென்றிருந்தேன். அங்குள்ள அன்னை மீனுட்சியைத் தரிசித்தபின் ஆலவாய் அண்ணல் சந்நிதிக்கும் சென்றேன். அந்தச் சந்நிதியை அடுத்தே வெள்ளியம்பலம் இருக்கிறது. இந்த வெள்ளியம்பலம் நடராஜருக்கு மிகவும் உகந்த பஞ்ச சபைகளில் ஒன்ருயிற்றே. அந்தச் சந்நிதி முன் நின்று அங்குள்ள சபாநாயகரைத் தொழுதேன். சபா நாயகர் நல்ல சிலா உருவில் கம்பீரமாக உருவாகி இருக்கிருர். ஆனுல் மற்ற எல்லாக் கோயில்களிலும் இல்லாத புதுமையாக இங்கே இவர் இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடிக்கொண்டிருக்கிருர். ஆனந்தத் தாண்டவத் திருவுருவங்களின் அழகில், அந்த மூர்த்தம் விளக்கும் தத்துவங்களிலெல்லாம் உள்ளத்தைப் பரவ விட்டு மெய்ம் மறந்து நின்றிருக்கிறேன் பல இடங்களில். அந்தத் தாண்டவத் திருவுருவங்களில், வலது காலையே அழுத்தமாக முயலகன்பேரில் அவர் ஊன்றி நிற்க, இங்கு மட்டும் இவர் இடது காலை ஊன்றி நிற்பானேன் என்று எண்ணினேன்; உடன் வந்த அர்ச்சகர்களைக் கேட்டேன். அவர்கள் 'இது தெரியாதா? இவர்தானே கால் மாறி ஆடிய கற்பகம்! ஆலவாய் அரன் நிகழ்த்திய திருவிளையாடல்களில் ஒரு திருவிளையாடல் ஆயிற்றே' என்ருர்கள்.

இந்தத் திருவிளையாடல் என்ன என்று தெரிய பரஞ்சோதி முனிவரை அணுகினேன். அவர் சொல்லும் கதை இதுதான்: பாண்டிய மன்னன் ராஜசேகரன் மதுரையி

லிருந்து அரசு செய்கின்ருன். அவன் அறுபத்துநான்கு கலைகளில், பரதத்தைத் தவிர மற்ற அறுபத்து மூன்று கலைகளிலும் வல்லவனுகின்ருன். பரத நாட்டியத்தை அவன் பயிலாததற்குக் காரணம், அந்தக் கலையில் அவனுக்குப் பற்று இல்லை என்பதினுல் அல்ல. சிவ பெருமான் ஆடும் திருநடத்திற்கு எதிராகத் தானும் நடம் ஆடவேண்டுமா ? என்பதுதான். ஆனுல், அந்தச் சிவபிரான் சும்மா இருக்கிருரா ? சோழ நாட்டிலிருந்து சில கலைஞர்களைப் பாண்டிய நாட்டின் தலைநகருக்கே வரவழைக்கிருர். அறுபத்துநான்கில் ஒன்றைக் கற்றுக் கொள்ளாத காரணத்தால் அரசனை அந்தக் கலைஞர்கள் சகலகலா வல்லவனுக மதிக்கிருர்கள் இல்லை. உடனே ரோசம் பிறக்கிறது மன்னனுக்கு. பரதத்தைக் கற்க முனைகிருன். அறுபத்துமூன்று கலைகள் கைவரப் பெற்ற வனுக்கு அறுபத்துநான்காவது கலையும் கைவரக் கேட்க வேண்டுமா என்ன ? வெகு விரைவிலே தேர்ந்து சகல கலா வல்லவனுகவே ஆகிவிடுகிருன்.

ஆனுல், அந்தக் கலையைக் கற்கும்போது தான் பட்ட சிரமத்தை எல்லாம் அறிவான். உடலில் ஏற்படும் வலியும் சோர்வும் எத்தகையது என்பதையும் உணர்ந்தவன்தானே. இந்த உணர்சியோடே ஒருநாள் சோமசுந்தரர் கோயிலுள் நுழைகிருன். ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கும் வெள்ளியம்பலத் துக்கே வருகிருன். நடராஜன் ஆடும் நடனத்தைக் காண்கிருன். ‘ஐயோ! எவ்வளவு காலமாக இந்த இறைவன் இந்த இடக்காலை ஊன்றி, வலக்காலை உயர்த்தி ஆடிக்கொண்டிருக்கிருன்! கால் வலி எடுக் காதா? ஏதோ மக்கள் பேரில் உள்ள கருணையினுல் தானே காலை மாற்ருது அன்றிருந்த நிலையிலேயே ஆடிக்கொண்டிருக்கிருன்! ஆடாதீர், கொஞ்சம் இரண்டு காலையுமே ஊன்றிக் கொஞ்சம் ஓய்வு

எடுத்துக் கொள்ளும், என்று சொன்னால் கேட்கவா போகிறார்? ஆதலால், கொஞ்சம் காலை மாற்றியாவது ஆடி அந்த ஊன்றிய வலக்காலுக்கு ஓய்வு கொடுக்கட்டுமே' என்று நினைத்திருக்கிறான். அதை இறைவனிடமே விண்ணப்பித்திருக்கிறான்.

நின்றதாள் எடுத்து வீசி
எடுத்ததாள் நிலமீது ஊன்றி
இன்றுநான் காண மாறி
ஆடிஎன் வருத்தம் எல்லாம்
பொன்றுமா செய்தி

என்பது மன்னனது விண்ணப்பம். பக்தி வலையில் படும் பரமன் இந்த வேண்டுகோளை உதாசீனம் செய்ய முடியுமா? செய்தால் மன்னன் உயிரையே விட்டுவிடுவானே என்று அஞ்சுகிறான். அஞ்சிய இறைவன் அரசன் விரும்பியபடியே கால் மாறி ஆடுகிறான். மன்னன் கவலையும் நீங்குகிறது. அன்று காலை மாற்றி ஆடியவன்தான் இன்றும் அந்தக் கோலத்திலேயே நிற்கிறான். அவனையே பார்க்கிறோம் இப்போதும் வெள்ளியம்பலத்திலே.

இப்படி இவர் கால் மாற்றி ஆடியதற்கு அடிப்படைத் தத்துவம் என்ன? நடராஜரது நடனத்துக்கு எத்தனை எத்தனையோ தத்துவார்த்தங்கள் எல்லாம் சொல்கிறார்களே. அப்படியிருக்க, இதற்கும் ஒரு பொருள் இல்லாமலா இருக்கும்? என்று எண்ணினேன். அந்தத் தத்துவம் என்ன என்று அறிய ஆகமங்கள், புராணங்கள், சித்தாந்த சாத்திரங்கள் எல்லாவற்றையும் புரட்டினேன்; சைவப் பெருமக்களைக் கேட்டேன்; கலைஞர்களை உசாவினேன். பயன் பெற்றேன் என்று சொல்வதற்கில்லை. படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழிலையும் எல்லையில்லாத ஒரு விளையாட்டாகவே செய்துகொண்டிருப்பவன் இறைவன். அவன்

அணுவுக்குள் அணுவாய் இருக்கிருன், அணுவின் ஊனுய், உயிராய், உணர்வாய் இலங்குகின்ருன். உள்ளே இருந்து இயக்குகின்ருன், வெளியே இருந்து ஆட்டுகின்ருன். அவனன்றி ஓரணுவும் அசையாது என்றெல்லாம் சிந்தித்த கலைஞனே, அவன் ஆட்டுவதினுல் அண்டங்கள் ஆடுகின்றன. அப்படி அண்டங்கள் ஆடுவதற்கு அவனும் ஆடிக்கொண்டேதான் ஆட்டியிருத்தல் வேண்டும் என்றும் சிந்தித்திருக்கிருன். இந்தக் கலைஞன் கண்ட கடவுளே நடராஜத் திருவுருவம். உருவமில்லாத கடவுளுக்கு உருவத்தைக் கற்பிக்க முனைந்த கலைஞன் கண்ட வெற்றிதான் ஆனந்தத் தாண்டவத் திருவுருவம்.

இப்படி யெல்லாம் சமய நூல்களில் இருந்தும், அறிஞர்களிடமிருந்தும் தெரிந்துகொண்ட நான், இறைவன் செய்பவை பஞ்சகிருத்தியங்கள், அந்தக் கிருத்தியங்களையே அவனது உருவம் விளக்குகின்றன என்பதையுமே அறிந்தேன். இதை விளங்கிக் கொள்ள உண்மை விளக்கம் உதவிற்று.

> தோற்றம்துடி அதனில்,
> தோயும் திதி அமைப்பில்,
> சாற்றியிடும் அங்கியிலே
> சங்காரம்—ஊற்றமாய்
> ஊன்றும் மலர்ப்பதத்தே
> உற்ற திரோதம், முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு

என்ற பாட்டைப் படித்தபோது சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், முத்தி என்பன எல்லாம் என்ன என்று விளங்குகிறது. இந்தத் திரோதம்—மறைத்தல் என்று ஒரு தொழில் செய்கிருனே—இறைவனே அந்தத் தொழில் செய்யும் நிலையில்தானே பாதத்தை ஊன்றி நிற்கிருன்—அந்தத் தொழில் என்ன என்று தெரிய

வில்லை. அதைத் தெரிய திரும்பவும் நூல்களைப் புரட்டினேன்; விளக்கங்கள் வேண்டினேன்.

இந்த மறைத்தலை விளக்க முனைந்த ஒரு அறிஞர் சொன்னார் "திரோபவம் என்பது உயிர்களை மீண்டும் மீண்டும் வினைப் போகங்களில் அழுத்தி அதன் மூலமாக உயிருக்கு மலபரிபாகமும், இருவினை ஒப்பும் ஏற்படச் செய்வதாம்" என்று. என்ன விளங்குகிறது உங்களுக்கு? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிவஞானமாபாடியம் சிவப்பிரகாசம் எல்லாம் என்ன என்ன எல்லாமோ சொல்கின்றன. பக்குவநிலை பெருத நம்மால் என்ன என்றே புரிந்துகொள்ள முடிகிறதில்லை. குமரகுருபரரோ, சிதம்பர மும்மணிக் கோவையில்

ஈட்டிய வினைப்பயன்
　　எவற்றையும் மறைத்து, நின்று
ஊட்டுவதாகும் நின்
　　ஊன்றிய பதமே

என்று விளக்கம் தருகிருர். இந்த விளக்கத்தைவைத்துக் கொண்டு இன்னும் விளக்கம் தேடினால்

மாயை தனை உதறி,
　　வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள்
　　தாள் எடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில்
　　ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான் எந்தை யார்பதம் தான்.

என்ற பாடல் கைகொடுக்கும். ஊன்றிய பாதம் மலங்கள் மடிய அமுக்கி, நமது வினைகளை மறைக்கிறது. அந்த மறைத்தல் தொழிலே பின்னாலே செய்யும் அருளல் தொழிலுக்கு முதற்படி. ஆனந்த வாரிதியில் ஆன்மாவை அழுத்தவே, இறைவன் தனது பாதத்தை

அத்தனை அழுத்தமாக ஊன்றி நின்று நடம்புரிகிறுன் என்று தெரிகிறும் ஓர் அளவிற்கு.

இப்படி மலங்கெடுக்க அமுக்கி, ஆனந்த வாரிதியில் அழுத்த வலக்காலை ஊன்றி நின்று நடம் ஆடியவர், அதை மாற்றி இடக்காலை ஊன்றி நிற்பானேன் ? என்பதுதான் இப்போது கேள்வி. நமக்குத் தெரியும், ஐயனின் இடப்பாகம் அவருக்குச் சொந்தம் இல்லை என்று. அந்தப் பாகம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டவள் அன்னை. இந்த அர்த்தநாரி தத்துவமே, நடராஜ மூர்த்தத்திற்கும் பொருந்தும். இதை நான் சொல்லவில்லை. திருமூலரே சொல்கிறுர்.

இடங்கொண்ட சக்தியும் எந்தை பிரானும்
தடங்கொண்டு நின்றமை யானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்றஇப் பல்உயிர்க்கு எல்லாம்
அடங்கலும் தாமாய் நின்று ஆடுகின் றுனே

என்று. இப்போது விளங்குகின்றது ஆட்டிவிக்கும் ஐயனின் காரியம். வலக்காலை ஊன்றி நின்றபோது சக்தி உதவவில்லை. ஆதலினுல் மலங்கள் மடங்க ஐயனும் அழுத்தமாக ஊன்ற முடியவில்லை. அதனுல் மறைத்தல் தொழில் பூரணத்துவம் பெறவில்லை. அத்தொழில் சரிவர நடக்க, சக்தியின் துணை வேண்டியிருந்திருக்கிறது இறைவனுக்கு. இடப்பாகத்தில் உள்ள சக்தியை நாடியிருக்கிறுர். இதனுல் கால்மாறி ஆடி, மறைத்தல் தொழிலை கொஞ்சம் அழுத்தமாகவே செய்யத் தம் இடக்காலையே ஊன்றியிருக்கிறுர். இவ்வளவுதான் ரகசியம். இதற்குப் பழியை ராஜசேகர பாண்டியன் தலையிலேயே போட்டிருக்கிறுர். ஆசாமி பலே ஆசாமி தான். உண்மைதானே. மற்றத் தலங்களை எல்லாம் விடச் சக்தி அம்சம் நிறைந்திருக்கும் தலந்தானே மதுரை ? ஆதலால் கால்மாறி ஆட அந்தத் தலத்தையே இந்த நடனராஜன் தேர்ந்து எடுத்ததிலும்

வியப்பில்லைதானே! நடராஜ மூர்த்தமே கலைஞனது கற்பனையில் எழுந்தது தானே. அந்தக் கற்பனை மேலும் விரிவடைந் திருக்கிறது ஒரு கலைஞன் சிந்தனையில். அதுதான் கால்மாறி ஆடிய கற்பகத் தையும் உருவாக்கி யிருக்கிறது. இப்படித்தான் தோன்றுகிறது எனக்கு. இதையே முடிந்த முடிவாகக் கொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை நான். என் விளக்கம் கலைஞர்களது சிந்தனையைத் தூண்டு மானல் அதுவே போதும் எனக்கு.

## 15

# கல்லிலே ஒரு வெற்றிச் சின்னம் *

இமயமலையில் பார்வதிக்கும் பரமேசுவரனுக்கும் கல்யாணம். இந்தக் கல்யாணத்திற்கு உலகில் உள்ள சகல ஜீவராசிகளும் வந்து கூடிவிட்டன. மக்கள் எல்லாம் வந்தனர்; முனிவர்கள் வந்தனர்; தேவர்களும் ஆம் முப்பத்து முக்கோடி தேவர்களுமே வந்து கூடிவிட்டனர். இப்படி எல்லோரும் இமயமலைச் சாரலிலே வந்து கூடிவிட்ட காரணத்தால், அந்த வடநாடு தாழ்ந்து தென்னாடு தூக்கிக்கொண்டது, துலாக்கோலில் பாரம் இல்லாத தட்டு தூக்கிக்கொள்வது போல. இப்படி உலகமே நிலை பிறழ்வதைக் கண்ட சிவபெருமான் பார்த்தார். உடனே சமன் செய்ய வேண்டிய அவசியத்தை எண்ணினார். கல்யாணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களை எல்லாம் திரும்புங்கள்

---

* இந்த வெற்றிச் சின்னத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று முதற் கட்டுரையிலே இருக்கிறது. அதன் விரிவான விளக்கமே இங்கு.



கல்யாணபுரத்துத் துவாரபாலகர்

என்று சொல்வது கல்யாண மாப்பிள்ளையால் முடியுமா? இல்லை நன்ருகத்தான் இருக்குமா? ஆதலால், ‘என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்ட’ அகத்திய முனிவரை ஒரு பக்கமாக அழைத்தார். ‘முனிவரே! நீர்தான் இப்போது உதவி செய்ய வேண்டும். கல்யாணத்திற்கு என்று காத்திராமல் நீர் உடனே தென்திசை சென்று பொதிகை மலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த நாடு சமமாகும். கல்யாணம் முடிந்ததும், கல்யாணக் கோலத்தோடேயே தென்திசை வந்து உமக்குக் காட்சி கொடுக்கிறேன்’ என்று சொன்னுர். அதன்படியே அகத்தியர் தென்னுடு வந்தார். தூக்கிய தென்திசை தாழ்ந்தது, தாழ்ந்த வடதிசை உயர்ந்தது, நாடு சமமாயிற்று.

இது புராணக்கதை. உத்தரதிசை என்று பாராட்டப்பட்ட வடதிசை அந்தப் பூர்வகாலத்தில் இழிவுபட, வானத்தை ஊடுருவி நிற்கும் நீண்ட பொதிகைமலையைச் சார்ந்து உலகின் கோணல் நிமிர்ந்து சீர்பெற ஈசன் நிகராய் இருந்தார் அகத்தியர் என்பது கதை. இதைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடுகிருன்,

வடாது திசை மேல்நாள்
நீசம்உற, வானில் வளர்
மாமலயம் நேரா
ஈசன் நிகராய் உலகு
சீர்பெற இருந்தான்

என்று. அகத்தியர் என்ற ஒருவர் தமிழ் நாட்டுக்கு வந்தார் என்ற ஒரே காரணத்தால் தமிழ் நாட்டின் பண்பாடு மிகவும் உயர்ந்து இருக்கிறது என்று சொல்பவர்கள் உண்டு. இல்லை, ‘இந்தத் தமிழ்நாடு எவ்வளவோ காலமாக பண்பாட்டிற்கெல்லாம் இருப்பிடம்’ அதையெல்லாம் அறிந்து உலகுக்கு அறிவிக்கவே இறைவன் தென்னுட்டுக்கு அகத்தியரை

அனுப்பினான்; அப்படி அவர் வந்ததனாலே உலகு சமன் ஆயிற்று. இந்த உண்மையைத்தான் உரைக்கிறது கதை' என்று வியாக்கியானம் செய்பவர்களும் உண்டு. உண்மை எப்படியும் இருக்கட்டும். வடநாடு தென்னாடு என்ற வேற்றுமை அன்றும் இருந்திருக்கிறது. அந்தக் கோணலை நிமிர்த்துவது அவசியம் என்பதைச் சிவபெருமானே உணர்ந்திருக்கிறார் அன்றே.

தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் தமிழர்கள் பெருமைப்படுகின்ற காரியம், வடநாட்டரசரைத் தமிழ்நாட்டரசர்கள் வெற்றி கொண்டதுதான். எவ்வளவோ காலத்திற்கு முன்பே சோழன் கரிகாலன் வடநாட்டின்பேரில் படையெடுத்துச் சென்று எல்லோரையும் வெற்றி கண்டு, இமயத்திலே தன் புலிக்கொடியை நாட்டினன் என்பர். எங்கோ, எப்போதோ தமிழ்நாட்டு அரசனையும் மக்களையும் வடநாட்டு அரசர் கனக விஜயர் கேவலமாகப் பேசினார்கள் என்பதற்காக, சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று அவர்களை வெற்றி கண்டிருக்கிறான். தென்னாட்டு பத்தினித் தெய்வம் கண்ணகியின் உருவச்சிலை அமைக்க, இமயத்திலிருந்து கல் பெயர்த்து, அந்தக் கனக விஜயர் தலையிலேயே ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறான். இப்படி காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவிலே மாதவி பாடிய கானல்வரிப்பாட்டு, கனகவிஜயர் முடித்தலை நெறிந்திருக்கிறது என்று கூறும் சிலப்பதிகாரம். இப்படித்தான் காவிரியின் கணவனாகவும், கன்னிதன் நாயகமாகவும் வாழ்ந்த தமிழ்நாட்டு மன்னர் கங்கையின் நன்கொழுநன் ஆகவும் வாழ்ந்திருக்கிறார்கள். இதை முற்றிலும் சரித்திர உண்மை என்று கூறிவிட முடியாது. உண்மையோடு கற்பனையும் கலந்தே இந்தக் கதைகள் உருவாகி இருக்க வேண்டும். என்றாலும் சங்க காலத்

திலும் இந்த வடநாடு தென்னுடு என்ற வேற்றுமை வளர்ந்திருக்கிறது. வடநாட்டாரை வெற்றிகாண வேண்டும் என்ற ஆவல் பிறந்திருக்கிறது தமிழர் களுக்கு என்ற உண்மை விளங்கத்தானே செய்கிறது.

இனித்தான் முழுக்க முழுக்க சரித்திரம். தஞ்சை யில் இருந்து தனியரசு செலுத்தி, பெருஉடையாருக்கு பெரிய கோயிலைக் கட்டியவன் ராஜராஜன். அவன் மகன் அமரன் ராஜேந்திரன், கங்கையும் கடாரமும் கொண்டு கோப்பர கேசரி வர்மன், என்றெல்லாம் கல் வெட்டுக்களில் பாராட்டப்படுகிருன். இவன்தன் மகன்தான் ராஜாதிராஜ சோழன். அப்பனையும் பாட் டனையும்போல அத்தனை பெருமை வாய்ந்தவன் அல்லாவிட்டாலும், வீரனுகவே வாழ்ந்திருக்கிருன். கி. பி. 1044-ல் பட்டத்திற்கு வந்த இவன், பாண்டியர் சேரர், சிங்களர், மேலைச்சளுக்கியர்களோடு எல்லாம் போர்புரிந்து வெற்றிமாலை சூடியிருக்கிருன். இவன் மூன்று முறை மேலைச் சளுக்கியரோடு போர்புரிய வேண்டியிருக்கிறது. இந்தப் போரில்தான் கண்டன் தினகரன், நாரணன், கணபதி, மதுசூதனன் முதலிய சளுக்கியத் தலைவர்கள் புறங்காட்டி ஓடி இருக்கிருர்கள். இன்றைய பல்லாரி ஜில்லாவில் ஹாஸ்பெட்டை அடுத்த கம்பிலியில் சளுக்கர் மாளிகை தகர்த்தெறியப் பட்டதும், அங்கு சயத்தம்பம் நாட்டியதும் ஜெயங் கொண்டாரால் பாடப்பட்ட செய்திகள் ஆகும். திரும் பவும் திரும்பவும் இந்தச் சளுக்கியர்கள் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்ததால் மூன்ரும் முறையும் போர் தொடுத்து போரில் முழுவெற்றி கண்டிருக்கிருன். வீரமாணிக்கன் முதலிய சளுக்கியத் தலைவர்களை எல் லாம் வென்று, எண்ணற்ற மகளிரைச் சிறைசெய்து பூண்டூர் மதிலையே தகர்த்திருக்கிருன். மண்ணகப்பதி யில் உள்ள சளுக்க மாளிகையை எரியூட்டி இருக்கி

ருன். வராகமுத்திரை பொறித்திருந்த வராகக்குன்றில் புலிமுத்திரையைப் பொறித்து அங்கு வெற்றித்தூணை நாட்டியிருக்கிருன். இப்படியெல்லாம் வெற்றிகண்ட பின்தான், அந்தச் சளுக்கர் தலைநகரமாகிய கல்யாண புரத்தைக் கைப்பற்றி அங்கிருந்த அரண்மனையை இடித்து அங்கு வீராபிஷேகம் செய்து விஜயராஜேந்திரன் என்ற பட்டம் புனைந்திருக்கிருன். இந்தச் செய்திகள் எல்லாம் ராஜாதிராஜன் கல்வெட்டுக்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.


கல்யாணபுரம் இன்றைய பம்பாயை அடுத்த ஒரு நகரம். அன்று கல்யாணபுரத்தைக் கைப்பற்றி அங்கு நுழையும்போது ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அங்குள்ள கோயில் வாயிலில் ஒரு துவாரபாலகர் நின்றிருக்கிருர். சாதாரணமாக மற்றைய கோயில்களில் இருக்கும், பயங்கர உருவில் இந்தத் துவாரபாலகர் இருக்கவில்லை. புன்னகை பூத்த முகத்தோடு, ‘வாருங்கள் உள்ளே செல்லுங்கள், இறைவனைக் காணுங்கள்’ என்று சொல்லும் பாவனையில், வலது கையில் தாழ்ந்த கையை ஆகூயவரத முத்திரையோடு வைத்துக் கொண்டு இருந்திருக்கிருர். நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்க, நவரத்தின கசிதமான வாகுவலயமும், மற்றைய அணிகளும் தோளிலும் மார்பிலும் புரள, எலியும் பூனையும், குரங்கும் கோட்டானும் ஒன்றி விளையாடி உறவு கொண்டாட, எல்லோர்க்கும் எளிவந்தவனுக நின்றிருக்கிருன். சூலமும் பாம்பும் ஏந்திய கையனுய் நிற்கும் இந்த அழகனைக் கண்டிருக்கிருன் விஜயராஜேந்திரன். அவ்வளவுதான். அந்த அழகனுக்கே ஆட்பட்டிருக்கிருன். அந்த அந்தமில் அழகனை, ஆம், அழகன் உருவாகியிருந்த சிலையைத் தான், அப்படியே பெயர்த்து எடுத்து தன் தலை நகருக்குக் கொண்டு வந்திருக்கிருன், தன்னுடைய

வெற்றிச் சின்னமாக. அத்துடன் அமையாது அதன் பீடத்தில், 'ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விஜயராஜேந்திர தேவர் கல்யாணபுரம் எறிந்து கொடுவந்த துவாரபாலர்' என்றும் பொறித்திருக்கிருன். இப்படித்தான் நாடு நாடாக வெற்றி கண்ட வீரனையும் வெற்றி கண்டிருக் கிறது இந்த அற்புதமான சிலை. அந்தச் சிலையை, அந்த வெற்றிச் சின்னத்தைத்தான் பார்க்கிறீர்கள் இங்கே. சிவபெருமானது எல்லா அம்சங்களும் நிறைந்த திருவுரு வாய் அவர்தம் பிரதிநிதியாக இந்தத் துவாரபாலர் நின்று கொண்டிருக்கிருர் வடநாட்டிலிருந்து தென்னுடு வந்து.

இந்தச் சிலையை முதல் முதல் ராஜாதிராஜன் கல்யாணபுரத்திலிருந்து கொண்டுவந்து சேர்த்த இடம், கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்தில் உள்ள ஐராவதேஸ்வரர் கோயிலில்தான். (ராஜராஜேஸ்வரம் என்ற பெயரே ராராசுரம் என்று திரிந்து கடைசியில் தாராசுரம் என்று வழங்கப்படுகிறது இன்று) இந்தக் கோயில் கவனிப்பார் அற்று பழுது பட்டிருப்பதால், இந்தச் சிலையைச் சில வருஷங்களுக்கு முன்னுலேயே கோயில் நிர்வாகிகள் தாராசுரத்திலிருந்து தஞ்சைப் பெரு உடையார் கோயில் அமைத்த ராஜராஜன் மியூசியத்திற்கு மாற்றி இருக்கிருர்கள். அந்த மியூசிய மும் மூடப்பட்டுவிட்டது பின்னுல். அதனுல் இன்று இந்தச் சிலையைத் தஞ்சை அரண்மனையில் அமைந் திருக்கும் கலைக்கூடத்திற்கு எடுத்து வந்திருக்கிருர்கள். அழகான பீடத்தில் அமர்த்தி, அருமையான விளக்கம் எல்லாம் எழுதி வைத்திருக்கிருர்கள்.

ஆனுல், இந்த துவாரபாலகருடைய ராசி, ஒரு இடத்தில் நிலைத்திருப்பதாக இல்லை. அதனுல் இங்கா வது இவர் நிலைத்து நிற்க வேண்டுமே என்பதுதான் எனது கவலை. கவலைப்பட்டுப் பயன் என்ன. என்றைக்

காவது ஒருநாள் இவர் இந்திய நாட்டில் கலைச்செல்வங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் தேசீய கலைக்கூடத்திற்கு (National Art Gallery) போகவேண்டியவர் தானே. அப்போதுதானே அன்று விஜயராஜேந்திரனை வெற்றி கண்டதுபோல அயல்நாட்டுக் கலா ரஸிகர்களையும் வெற்றி காண முடியும். அப்பொழுதுதானே அது உண்மையிலேயே வெற்றிச் சின்னமாக அமையும்.



மாதிருக்கும் பாதியன்

# 16

## கல்லிலே ஒரு கலைக் கோயில்*

சிலவருஷங்களுக்கு முன் நான் கும்பகோணம் போயிருந்தேன். என்னுடன் என் நண்பர் ஒருவரும், அவருடைய மனைவி, அவருடைய பத்து வயதுப் பாலன் எல்லோரும் வந்திருந்தார்கள். அங்குள்ள மகாமகக்குளம், கும்பேசுரர் சந்நிதி, சாரங்கபாணி கோயில் எல்லாம் பார்த்தபின், குடந்தைக் கீழ்க் கோட்டம் என்னும், நாகேஸ்வர சுவாமி கோயிலுக்குப் போனோம். கோயிலின் ஆசார வாசலிலேயே எங்களை வரவேற்றார் ஒரு அர்ச்சகர். எங்களைப் பார்த்த உட னேயே அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும், இவர்கள் எல்லாம் சுவாமி தரிசனத்துக்காக மட்டும் வந்தவர்கள் அல்ல என்று. உடனே ஆரம்பித்தார் அவர். இந்தக் கோயிலிலே ஒரு அதிசயம் சார், ஒவ்வொரு வருஷ மும் சித்திரை மாதம் 10, 11, 12 தேதிகளில் காலை ஏழரை மணிச் சுமாருக்கு சூரிய கிரணம் நாகேஸ்வரன்

---

* திருச்சி ரேடியோவில் பேசியது, அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

மேல் படும். இந்த ஸ்தலத்தில் இந்திரனும், சூரியனும் இறைவனை வணங்கி வழிப்பட்டதாக ஐதீகம்' என்று அடுக்கிக்கொண்டே போனார். என்னுடன் வந்த நண்பருக்கோ ஒரே அதிசயம். 'என்ன ஐயா ! கோபுர வாயிலுக்கும் மூலஸ்தானத்திற்கும் கிட்டத்தட்ட ஒன்றரை பர்லாங்கு தூரம் இருக்கும். இடையே கொடிமரம், நந்தி மண்டபம், அர்த்த மண்டபம் எல்லாம் வேறே இருக்கிறது. இவைகளை எல்லாம் கடந்து சூரிய கிரணம் லிங்கத் திருவுருவின் பேரில் விழுவது என்றால் அது ஒரு அற்புதமான சாதனை தானே !' என்று வியந்தவண்ணம் இருந்தார்.

ஆனால் எனக்கோ இது ஒன்றும் அப்படிப்பட்ட பிரமாதமான காரியமாகப் படவில்லை. ஏதோ கொஞ்சம் 'ஹைபாட்டினீயூஸ்' விஷயம் தெரிந்திருந்தால் கோபுர நிர்மாணத்தின் போது சூரிய கிரணம் வருகின்ற வழியில் தடையொன்றும் இல்லாமல் அமைத்து விடலாம்தானே. என்றாலும் சாதாரணமாக கலை அறிவு படைத்திருந்த என் நண்பருக்கோ கட்டிட நிர்மாணக் கலையில் இது ஒரு அரிய சாதனையாகவே பட்டது.

ஆசார வாசலைக் கடந்து கொஞ்சம் உள்ளே சென்று நடராஜர் சந்நிதிக்கு வந்து சேர்ந்தோம். அந்த சந்நிதியை ஒரு தனிக்கோயிலாகவே கட்டி யிருக்கிறார்கள் கல்லிலே. கோயிலின் முகப்பிலே இரண்டு யானைகள். பக்கங்களிலே தேர்ச் சக்கரங்கள், தேரை வெகு வேகமாக இழுத்தோடிப்போவது போன்ற குதிரைகள் எல்லாம் கல்லிலே ஆக்கப்பட்டிருந்தது. இவைகளைப் பார்த்த உடனே என் நண்பருடைய பையன் ஒரு துள்ளு துள்ளிக் குதித்தான். 'பலே! தேர் சக்கரம், குதிரை யானை எல்லாம் தத்ரூபமாக இருக்கிறதே இந்தத் தேர் ஓடுமா ?' என்று கேட்க ஆரம்பித்தான். அந்த இளமனதில் கல்லிலே தேரை உருவாக்கிய

கலைஞனது திறமை ஆழமாக பதிந்திருக்கிறது. ஆனந்தத்தைக் கொடுத்திருக்கிறது. அவ்வளவுதான்.

இவற்றை யெல்லாம் கடந்து கோயிலின் அர்த்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தோம். கோயிலை வலம் வந்து, பின் சந்நிதிக்கு வரலாமே என்று தெற்குப் பிரகாரத்திற்கு நுழைந்து வந்தோம். இங்கே இரண்டு மாடங்களில் இரண்டு பெண்ணுருவங்கள் அற்புதமான அழகோடு அமைத்து நிறுத்தப்பட்டிருந்தன. இரண்டும் இரண்டு பெண்ணரசிகள். அவர்கள் நிற்கின்ற எழில், அவர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள், கூந்தலை கட்டியிருக்கும் அழகு அதில் மாலைகளைச் சூடியிருக்கும் நேர்த்தி இவைகளை யெல்லாம் பார்த்த என் நண்பரது மனைவி அப்படியே அதிசயத்து நின்று விட்டாள். அந்த கல்லுருவில் அமைந்த கட்டழகையே வியந்து கொண்டிருந்தாள் அவள். அந்த அம்மாள் அனுபவித்த கலை அது.

இவர்களுடன் போன நானோ இத்தனைக்கும் அசைந்துக் கொடுக்கவில்லை. இவைகளில் உள்ள கலையழகு சிறந்ததுதான். அதை உணர்ந்து போற்றுதற்குரிய அறிவையும் படைத்தவன்தான். என்றாலும் இந்த கோபுரத்தின் வழியாக சூரிய கிரணம் வரும்படி அமைத்த அமைப்பு, கல்த்தேர், கட்டழகிகள் எல்லாம் நம் நாட்டுக் கலாரசனையில் நிரம்பவும் அடித்தளத்தில் உள்ளதாகவே பட்டது எனக்கு. இவைகளை எல்லாம் விட சிறப்புடைய கலையுருவைக் காண விரும்பிற்று கண்கள். தேடி உருகிற்று உள்ளம்.

நண்பர், மனைவி, பையன் எல்லோரையுமே அழைத்துக்கொண்டு-மேல் பிரகாரத்திற்கு வந்த சேர்ந்தேன். அங்கே ஒரு சிலை. அர்த்தநாரி மூர்த்தியின் சிலைதான், அற்புதமாக அமைத்து நிறுத்தப்பட்டிருந்தது.

அர்த்தநாரி என்ருல்தான் தெரியுமே, பாதி பெண் உருவம், பாதி ஆண் உருவம், இரண்டையும் ஒரே உருவில் காட்டுகின்ற சிவனுடைய ஒரு மூர்த்தம். இந்த சிலையைப் பார்த்த உடனே நான் மெய்மறந்து நின்றேன். எவ்வளவு நேரம் அந்த நிலையில் நின்றேனே அறியேன். பக்கத்தில் உள்ள நண்பர் என்ன போக வேண்டாமா? இங்கேயே எவ்வளவு நேரம் நிற்பது, என்று ஞாபகப்படுத்திய போதுதான் நினைவு வந்தது. அப்போது சொன்னேன் 'என்ன அற்புதமான சிலை இது? உலகில் எந்த உயிர்த்தத்துவத்தை நோக்கினுலும் அங்கெல்லாம் ஆண் பெண் என்ற இரண்டு நியதிகள் இருப்பதைத்தானே பார்க்கிருேம். இரண்டும் தனித்தனியே பிரிந்திருக்கும்போது உலக வளர்ச்சிக்கு வழியில்லையே, இரண்டும் ஒன்றிச் சேர்ந்த நிலையில் தானே ஜீவராசிகள் உருவாகின்றன, படைப்புத் தொழிலே அந்த ஒன்றிய நிலையில்தானே ஏற்படுகிறது. இந்த அற்புதமான தத்துவத்தை விளக்க அமைந்த திரு உருவாக அல்லவா இந்த மாதிருக்கும் பாதியன் காட்சி தருகிருன்.

> தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
> பால் வெள்ளை நீரும் பசுஞ் சாந்தும் பைங் கிளியும்
> சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மை
> கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி !

என்றெல்லாம் மாணிக்கவாசகர் இந்தத் தொன்மைக் கோலத்தில் அமைந்த இறைவன் திருவுருவை எப்படி கசிந்து கசிந்து பாடி மகிழ்கிருர்.

> காதல் மடப் பிடியோடும்
> களிறு வருவன கண்டேன்
> கண்டேன் அவர் திருப்பாதம்
> கண்டறியாதன கண்டேன்

என்றுதானே அப்பர்பெருமான் இறைவன் திருவுருவைக் கண்டதை வருணிக்கிருர்' இப்படியே பேசிக்

கொண்டு நின்றேன். பின்னும் நண்பர் கேட்டார் 'ஆமா சார்! ஆணையும் பெண்ணையும் ஒரே உருவத்தில் அமைத்து ஒரு அரிய தத்துவத்தை விளக்கியது சரி தான் அந்த இடப் பகுதியில் இடைப்பாகம் மட்டும் ஏன் பெரியதாய் எத்தனையோ வளைவுகளோடு கூடிய தாய் அமைந்திருப்பதேன்? அந்தக் கோணல் அவ்வளவு அழகாய் இல்லையே' என்றார்.

அட பாவமே! 'அந்த நெளிவுச் சுழியில்தானே சிற்பி அத்தனை அழகையும் படைத்திருக்கிறான். பெண்ணின் வயிறு ஆலிலை அன்ன வயிறல்லவா? அந்த மென்மை யான வயிற்றில் விழும் சுழிகள் அல்லவா அந்த உரு வத்திற்கே ஒரு உயிர் கொடுக்கின்றது. மேலும் இந்த சிலையை வடித்த சிற்பி இருக்கிறானே அவன் ஒரு மேதை என்றுத் தெரிகிறது. பெண்ணின் உடல் அமைப்பை கூர்ந்து கவனித்திருக்கிறான். பெண்ணின் இடைக்கு கீழுள்ள பகுதி பெரிதாகவே இருக்கும். "அனடமி" என்ற உடற் கூறு சாஸ்திரம் படித்தவர்கள் அறிவார் கள், பெண்ணின் Pelvic Girdle அகன்று விரிவாயிருக் கும் என்று. பத்து மாதம் குழந்தையை ஏந்தி வைத் துக் கொண்டிருக்க வேண்டிய இடமல்லவா அது. ஆதலால் ஆண்களின் இடுப்பைவிட, பெண்ணின் இடுப்பு பெரியதென்று. ஆண் பெண் உரு அமைப் பையும் ஒரே உருவில் அமைக்கின்றபோது, இந்தப் பாகத்தில் ஒன்றுக் கொன்று வேற்றுமை காணுகின்ற போது அதைச் சரிக்கட்ட அந்த இடப்பகுதிக் காலையே கொஞ்சம் நீளம் உடையதாக அமைத்து அதில் ஒரு வளைவைக் கொடுத்து எழில் உடையதாக ஆக்கி யிருக்கிறான் சிற்பி. என்ன அற்புதமான வேலைப்பாடு என்றேன். நண்பரோ 'ஆமா சார்! இத்தனை விஷயமும் சாதாரண மனிதனுக்கு எப்படித் தெரியும். இந்த சிறப்பு மிக்க கலை அழகையெல்லாம் தெரிந்துக் கொள்வதற்கு

நல்ல மேதையாகவும் இருக்க வேண்டும் போல் இருக்கிறதே' என்ருர். உண்மைதான் நம் நாட்டுக் கலைகளை எல்லாம் அறிந்து உணர்ந்து, அனுபவிப்பதற்குச்சாதாரண அறிவு காணுது. நல்ல பயிற்சி வேண்டும்; சிந்திக்கும் திறன் வேண்டும் தத்துவ அர்த்தங்களை உய்த்து உணரும் மனப் பக்குவம் வேண்டும், இவற்றை யெல்லாம்விட, விஷயங்களைப் பக்தியோடே அணுகவும் வேண்டும்.

மேல் நாட்டுக் கலை யெல்லாம் உள்ளதை உள்ள வாறே படம் பிடித்துக் காட்டும். இயற்கையிலே காணுகின்ற அழகை கொஞ்சமும் மாறுபடாத வகையில் தத்ரூபமாக வண்ணத்தாலும் சுண்ணத்தாலும் அமைத்துக் காட்டி விடுவார்கள் மேல் நாட்டுக் கலைஞர்கள். ஆனல் நமது இந்திய நாட்டுக் கலைஞர்களோ வண்ணத்தையும் எண்ணத்தையும் கடந்து, அந்தக் காட்சியாலே ஒரு எண்ணத்தையும் புகுத்தி உருவாக்கி விடுவார்கள் கலையை. இப்படிக் கலையை உருவாக்கும் சாதனை, எல்லோருக்கும் எளிதாகக் கைவரப் பெறுவதொன்றல்ல. கலைப் பொருளாம் சிலை உருவை உருவாக்குவதை ஒரு பெரிய யோக சாதனமாகக் கொண்டவர்கள் நமது முன்னோர். 'இப்படியன், இந்நிறத்தான், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒண்ணுதவன் அவன்' என்றும் தெரிந்தும் அவனைக் கல்லிலும் செம்பிலும், சுண்ணத்திலும், வண்ணத்திலும் காட்ட முனைந்திருக்கிருர்கள்.

அன்றும் திருவுருவம் காணுதே ஆட்ப்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்-என்றுமே
எவ்வுருவோன் நும்பிரான்? என்பார்க்கட்கு
என்னுரைப்பேன்? எவ்வுருவோ நின்னுருவம் ஏது?

என்றெல்லாம் ஏங்கி ஏங்கி இறைவனையே கேட்டிருக்கின்ருர்கள் பக்தர்கள். இப்படியெல்லாம் இறைவனை

இடையருது சிந்தித்து இறைவன் திருவுருவை விளக்கும் தியான சுலோகங்களை உருவேற்றி உரு வேற்றியே அற்புதமான சிலா உருவங்களை அமைத் திருக்கிருர்கள் அன்றைய சிற்பிகள்.

இப்படிப்பட்ட அற்புதமான சிலை உருவங்களை, எல் லோரும் தியானத்தில் மட்டுமே ஈடுபட்டு அமைத்து விட முடியாதுதான். இந்தப் பணியிலே ஈடுபடுபவர் கள் நல்ல அழகுணர்ச்சி உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த உணர்ச்சி ஏதோ பயிற்சி செய்து பெறக் கூடியது ஒன்றல்ல. கருவிலே வாய்க்கும் ஒரு திரு அது. இந்திய கலாரசனையே தனது மூச்சாகக் கொண்ட டாக்டர் ஆனந்தக் குமாரசாமி 'கருவிலேயே அமைந்த அழகுணர்ச்சி, அந்த அழகுணர்ச்சியில் விளையும் அனுபவம், அந்த அனுபவத்தை வெளியிடும் திறன், அப்படி வெளியிடும் அனுபவத்தை பிறரும் அறிந்து அனுபவிக்கச் செய்யும் ஒரு வாய்ப்பு எல்லாம் உடையவனே சிறந்த கலைஞன், கலாமேதை' என்கிருர்.

இப்படியே கலை உணர்விக்கும் கற்பனையில் உருவானவைகள்தாம் இன்றைய தமிழ் நாட்டின் கோயில்களில் காணப்படும் மூர்த்திகளின் திரு வுருவங்கள். இவற்றில் ஒன்றிரண்டு மூர்த்திகளின் அடிப்படைத் தத்துவங்களை நுணுகி ஆராய்ந்தால் அந்த மூர்த்திகளை உருவாக்கிய கலைஞர்களின் சிந்தனைத் திறன் தெளிவாகும். சோழர் காலத்தில் எழுந்த கோயில்களில் கர்ப்பக் கிரஹத்திற்கு வெளியே மேற்கே பார்த்த மாடத்தில் ஒன்று அர்த்த நாரியின் திருவுருவம் இருக்கும் அல்லது லிங்கோத்பவர் திரு வுருவம் இருக்கும். அர்த்தநாரியைப் பற்றி முன்ன மேயே தெரிந்துகொண்டோம். லிங்கோத்பவர் என்ருல் என்ன ? அன்று இறைவனின் அடிமுடியைக் காண்ப தற்கு படைப்புக் கடவுளான பிரமனும் காத்தற் கடவு

ளான திருமாலும் புறப்பட்டனர். இருவருக்கும் இடையில் ஜோதி சொரூபமாக நின்ருன் இறைவன். பிரம்மா அன்ன உருவெடுத்து வானில் பறந்து பறந்துச் சென்ருன். திருமாலோ பன்றி உருவில் அண்டங்களை குடைந்து குடைந்துச் சென்ருர். அடி முடி காணுத இருவருமே தங்கள் முயற்சியில் தோல்வியுற்றனர். இது கதை. இந்தக் கதையின் அடிப்படையில்தான் லிங்கோத்பவர் உருவாகிருர். இறைவன் பஞ்ச பூதங்களில் ஒவ்வொரு அணுவிலும் ஊனுகவும், உயிராகவும், உணர்வாகவும் நிறைந்திருக்கிருர். பஞ்சபூதங்களில் காற்றையும் தண்ணீரையும் ஆகாயத்தையும் ஒரு நிலையான உருவாக்கிக் காட்டுதல் இயலாது. மண்ணைக் காட்டலாம். ஆனல் ஒளியுடையதாகாது. சோதி உருவில் காட்டுகின்றபோது கண்ணுல் எளிதில் கண்டுக்கொள்ள முடிகிறது. கொழுந்து விட்டெரியும் தீ உருவில் அதன் நாக்குகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு அதனுள் காணும் நீல நிறமுடைய மிகவும் பிரகாசமான உருவை மட்டும் பார்த்தால் அது ஒரு நீண்ட வட்ட வடிவிலேயே இருக்கும். அதைத்தான் லிங்க உருவாக ஆக்கி யிருக்கின்றனர். அந்த லிங்க உருவில் உருவாகிய மூர்த்தியையே லிங்கோத்பவர் என்றனர். இந்த உண்மைப் பொருளை அறியாது லிங்கோத்பவரைப் பற்றி கேவலமான கதைகள் சொல்லும் தமிழரெல்லாம் கண்ணிருந்தும் குருடர்கள். அறிவிருந்தும் மூடர்கள்.

சில கோயில்களில் இறைவனைப் பிச்சைக்காரனுகக் கற்பனை பண்ணி அவனைப் பிக்ஷாடனர் உருவில் அமைத்து வைத்திருக்கிருர்கள். மக்கள் எல்லாம் இறைவனிடத்தே எப்போதும் 'எனக்கு அது வேண்டும்; எனக்கு இது வேண்டும்' என்று கேட்டுக் கொண்டே யிருக்க, அப்படி வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் தருகின்ற இறைவனையே பிச்சைக்

காரணுக கற்பனை பண்ணுகிருன் கலைஞன். ஆம். எந்த நிலையின் அவன் பிச்சைக்காரனுக வருகின்ருன்? உயிர் களாகிய நம்மிடம் பதியாகிய இறைவன் அன்பையும் ஆணவத்தையும் பிச்சைக் கேட்டுப் பெற்று நம்மை யெல்லாம் கடைத்தேறச் செய்ய விழைகின்ருன். இறை வனது தந்தையன்பு நாம் எவ்வளவுதான் அவனிட மிருந்து விலகி விலகிப் போனுலும், அவன் தம் உண்மை உருவை மறைத்து பிச்சைக்கார வேடத்தோடேயாவது நம்மைத் தொடர்ந்து வந்து அருள் புரிகின்ருன். எவ்வளவு அரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கிறது இந்த மூர்த்தி. இதற்கும் ஒரு கதை. ஆம். தருகாவனத்து ரிஷிகளது ஆண வத்தை அடக்கி, அவர்களது மனைவியரின் கர்வத்தைக் குலைப்பதற்காக இந்த உருவெடுத்தான் என்பர். கதை களை மறந்து அடிப்படை தத்துவங்களை உணரத் தெரிந் துக் கொள்ளுவோமானுல் நமது கலைஞர்களது மேதை விளங்கும்.

இத்தனையும் சொல்லிவிட்டு உலக மக்களின் கலாச்சார வளர்ச்சிக்கும் சிந்தனைத் திறனுக்கும் தமிழன் உதவிய அந்த அரிய கலை உருவம் நடராஜரைப்பற்றி குறிப்பிடாது விடமுடியுமா. ஒவ்வொரு பரமாணுவின் உள்ளும் புறத்தும் இயங்கும் இறைவனைக் காண முற் பட்ட முயற்சியில் நடராஜனது உருவம் மகோன்னத மான வெற்றிச் சிகரம். அவனன்றி ஓர் அணுவும் அசை யாது. அண்டங்கள் எல்லாம் அவன் ஆட்ட ஆட்ட ஆடு கின்ற அவன் ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே? இப்படி அண்டங்களை யெல்லாம் ஆட்டுகின்ற இறை வனும் சும்மா நின்ற இடத்திலேயே நின்றுக் கொண்டு ஆட்ட முடியுமா. அவனும் ஆடிக்கொண்டே ஆட்டி னுல்தானே அண்டங்கள் ஆடும். அவன் ஆட்டம் ஓய்ந்தால் அண்டங்களின் ஆட்டம் ஓயும். அண்டங்

களின் ஆட்டம் ஓய்ந்தால் அகில உயிர்களின் ஆட்டமும் ஓய்ந்துவிடும்தானே. இத்தனை கருத்தையும் உள்ளடக்கி ஆடும் பெருமானை உருவாக்கியிருக்கிறார்கள் தமிழகத்து கலைஞர்கள். எண்ணத்தில் உருவான அவனை, எழுத்தில் கவிதையில் கல்லில், செம்பில் எல்லாம் உருவாக்கி விட்டார்கள். இந்த அற்புத நடராஜ மூர்த்தியைக் கண்டுதான் அறிஞர் அதிசயிக்கிறார்கள்; கலைஞர்கள் போற்றுகிறார்கள்; பக்தர்கள் பாடுகிறார்கள்.

இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான்

சாட்டி நிற்கும் அண்டமெலாம்
 சாட்டையிலாப் பம்பரமாய்
ஆட்டிவைக்கு அண்ணலவன்
 ஆடுகின்ற ஆட்டமொடு
மாதிருக்கும் பாதியனாய்
 மண்மேல் பிக்ஷாடனனாய்
ஆதியொடு அந்தமிலா
 அண்ணாமலை உருவாய்
நின்றிருக்கும் கோலமெலாம்
 நிலவுலகோர் காண்பதற்கு
கல்லினிலும் செம்பினிலும்
 கடவுளையே காட்டுகின்ற
கலைஞர் புகழ் பாடிக்
 கட்டியங்கள் கூறிடலாம்

என்று கட்டியங் கூறுகிறார் ஒருவர். இப்படிக் கட்டியங் கூற வேண்டுவதே இன்றையத் தமிழனுடைய கடமை. ஆனால் அவன் அப்படி சொல்லுகிறானா என்பது கேள்வி?

## கல்லும் சொல்லாதோ கவி

அருங்கலைகளில் மிக்க சிறப்புடையது சிற்பக் கலை. மற்ற நாடுகளில் வளர்ந்த சிற்பக்கலையை விடத் தமிழ் நாட்டுச் சிற்பக்கலை மிக மிக உயர்ந்தது. பக்தி வளர்க்கும் பண்ணையாக இச்சிற்ப வடிவங்கள் அமைந்திருக்கின்றன. இந்த சிற்பச்செல்வங்கள், பல பெரிய கோயில்களில் மாத்திரம் அல்ல, சின்னஞ் சிறிய ஊர்களிலுமே சிதறிக் கிடக்கின்றன. கல்லில் செதுக்கியும், செம்பில் வடித்தும் நிறுத்தி யிருக்கிறார்கள் சிற்பிகள். கல்லில் உருவான பல சிலைகளைப்பற்றி விரிவான விளக்கம் எழுதப்பட்டிருக்கிறது இந்த நூலில். எழுதியவர் பல வருஷங்களாக கலைக் கட்டுரைகள் எழுதிவரும் அறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் தமிழ் நாட்டின் சிற்பக்கலையைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் இது ஒரு முதல் முயற்சி நல்ல முயற்சியும் கூட.



தென் மொழிகள் புத்தக டிரஸ்டின்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை.

JAYAM